

# நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நாளாந்த ஸுன்னத்துக்களும் திக்ர்களும்


எழுத்தாக்கம்
கலாநிதி அப்துல்லாஹ் பின் ஹமூத் அல் ஃபுரைஹ்

முன்னுரை
கலாநிதி காலித் அல் முஷைகிஹ்

# நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நாளாந்த ஸுன்னத்துக்களும் திக்ர்களும்

அல்லாஹ் ஹதீஸுல் குத்ஸியில் குறிப்பிடுகிறான்:

என்னை ஒரு அடியான் உபரியான ஸுன்னத்தான வணக்கங்கள் மூலம் நெறுங்கும் போது நான் அவனை விரும்புகின்றேன்.


எழுத்தாக்கம்

கலாநிதி அப்துல்லாஹ் பின் ஹமூத் அல் ஃபுரைஹ்

முன்னுரை

கலாநிதி காலித் அல் முஷைகிஹ்

இந்நூல் முழுப் பதிப்புரிமை செய்யப்பட்டது.எவரேனும் இதை வேறு மொழிக்கு மொழியாக்கம் செய்ய அல்லது அறப்பணியாக அச்சிட்டு வெளியிடுவதாயின்,நூலாசிரியன் அனுமதியுடனும்,மீள்பரிசீலனையின் பின்னரும் மேற்கொள்ளலாம்.

இந்நூல் பத்து மொழிகளுக்கும் மேல் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.


بسم الله الرحمن الرحيم

# இப்புத்தகத்தின் உள்ளடக்க தலைப்புக்கள்

## முன்னுரைகள்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 21 |
| அணிந்துரை | 24 |
| ஸுன்னாவின் கருத்து | 24 |
| ஸுன்னாவை கடைபிடிப்பதில் முன்னோர் காட்டிய ஆர்வத்திற்கான சான்றுகள். | 24 |
| ஸுன்னத்தான வழிமுறைகளை பின்பற்றுவதன் பயன்கள் | 26 |


## நேரம் குறிக்கப்பட்ட ஸுன்னத்தான வழிமுறைகள்




| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முதலாவது-பஃஜ்ர் நேரத்துக்கு முன்னரான -ஸுன்னத்துக்கள்- | 30 |
| முதல் பிரிவு. | 30 |
| 1 முதலில் அவர்கள் மிஸ்வாக் செய்வார்கள்-அதாவது மிஸ்வாக்- எனும் குச்சியினால் பல்லை துளக்குவார்கள். | 30 |
| 2 நித்திரையிலிருந்து எழுந்தவுடன் கூற வேண்டிய திக்ரை மொழிவார்கள். | 31 |
| 3 அவர்களது முகத்திலிருந்து தூக்கத்தை துடைத்து விடுவார்கள். | 31 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ④ வானத்தை உற்று நோக்குவார்கள். | 31 |
| ⑤ பின்னர் அல் மாஇதா அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்து அல் குர்ஆன் வசனங்களை ஓதுவார்கள். | 31 |
| ⑥ மூன்று தடவைகள் கையை கழுவிக்கொள்வார்கள். | 32 |
| ⑦ நாசிக்கு மூன்று முறை தண்ணீர் செலுத்தி அதை வெளியேற்றி விடுவார்கள். | 32 |
| ⑧ பின்னர் வுழூஃ செய்வார்கள். | 32 |
| **வுழூவின் ஸுன்னத்துக்களாவன.** | 33 |
| ① மிஸ்வாக் செய்தல். | 33 |
| ② பிஸ்மில்லாஹ் கூறல். | 34 |
| ③ இரு கரங்களையும் மணிக்கட்டுவரை கழுவுதல். | 34 |
| ④ கால்களையும்,கைகளையும் கழுவும் போது வலதை முற்படுத்தல். | 34 |
| ⑤ வாய் கொப்பளித்தல்,நாசிக்கு தண்ணீர் செலுத்தல் ஆகியவைகளை கொண்டு ஆரம்பித்தல். | 34 |
| ⑥ நோன்பாளியல்லாதவர் வாய்கொப்பளித்தல்,நாசிக்கு தண்ணீர் செலுத்தல் ஆகியவற்றை பரிபூரணமாக அதிகப் படியான தண்ணீரை கொண்டு செய்தல். | 35 |
| ⑦ நாசிக்கு தண்ணீர் செலுத்தும் போதும்,வாய் கொப்பளிக்கும் போதும் ஒருகையினால் செய்தல் | 35 |
| ⑧ தலையை மஸ்ஹு செய்யும் போது ஸுன்னத்தான வழி முறையில் செய்தல். | 35 |
| ⑨ உறுப்புக்களை கழுவும் போது மும்மூன்று தடவைகள் கழுவுதல். | 36 |
| ⑩ வுழூஃ செய்த பின்னராக ஓதப்படும் துஆ. | 36 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ◆ இரண்டாம் பகுதி:இரவுத்தொழுகையும்,வித்ருத்தொழுகையும், இது தொடர்ப்பான நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பல்வேறு ஸுன்னத்தான வழிமுறைகளும். | 38 |
| ① வித்ர் தொழுகையை இரவில் அதன் மிகச்சிறப்பான நேரத்தில் தொழுவதுதான் ஸுன்னத்தான வழிமுறையாகும். | 38 |
| ② மேலும் இதில் பதினொரு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தான வழிமுறையாகும். | 40 |
| ③ இரவுத் தொழுகையை மிக குறுகியதாகவும் மிகச்சுருக்க மாகவும் கொண்டமைந்த இரு ரக்அத்துக்களை கொண்டு ஆரம்பிப்பது ஸுன்னத்தான வழிமுறையாகும். | 41 |
| ④ இரவுத்தொழுகையில் அதற்கென குறிப்பாக வந்துள்ள ஆரம்ப துஆக்களை -துஆஉல் இஸ்திஃப்தாஹ்-களை ஓதுவதும் ஸுன்னத்தான வழிமுறையாகும். | 41 |
| ⑤ மேலும் இரவுத்தொழுகையின் கியாம், -நிற்றல்-ருகூஃ, ஸுஜூத்,ஆகியவற்றுடன் சொல்,செயல் சார் அனைத்து வாஜிப்களையும்,பர்ளுகளையும் ருகுன்களையும் நீட்டித் தொழல். | 42 |
| ⑥ இத்தொழுகையில் உள்ள ஓதல்களின் போது நபிகளாரின் வழி காட்டலின் பிரகாரம் ஓதுவதும் ஸுன்னத்தான வழி முறையாகும்.அவற்றுள் சில பின்வருமாறு. | 42 |
| ⑦ இவ்விரண்டு ரக்அத்துக்களுக்கும் மத்தியில் ஸலாம் கொடுப்பது ஸுன்னத்தான வழிமுறையாகும். | 44 |
| ⑧ இறுதி மூன்று ரக்அத்துக்களில் அதற்கென குறிப்பாக வந்துள்ள அத்தியாங்களை ஓதுவது ஸுன்னத்தான வழி முறையாகும். | 44 |
| ⑨ சில வேளைகளில் வித்ர் தொழுகையில் குனூத் ஓதுவதும் ஸுன்னத்தான வழிமுறையாகும். | 44 |
| ⑩ இரவின் மூன்றாம் பகுதியின் இறுதியில் துஆக் கேட்டல்- பிரார்த்தனை செய்தல். | 46 |
| ⑪ ஒருவர் வித்ர் தொழுகையை தொழுது முடித்த பின்னர் மூன்று தடவைகள் (ஸுப்ஹானல் மிலிகில் குத்தூஸ்) என கூறல்,இதில் மூன்றாவது முறை சப்தத்தை உயர்த்தி சொல்வதும் நபிகளாரின் ஸுன்னத்தான வழி முறையாகும். | 47 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ⑫ தமது குடும்பத்தினரை இரவுத்தொழுகைக்காக நித்திரையிலிருந்து எழுப்புவது ஒரு ஸுன்னத்தான வழிமுறையாகும். | 47 |
| ⑬ இரவுத்தொழுகையின் போது தொழுகையில் உள்ளச்சம் பாதிக்காதவாறு தனக்கு மிக இலகுவான முறையை கடைப் பிடித்தல். | 48 |
| ⑭ ஒருவருக்கு இரவில் இரவுத்தொழுகை தப்பி விடுமாயின் அதை பகற்பொழுதில் இரட்டையாக தொழுவது ஸுன்னத்தாகும். | 49 |
| இரண்டாவது:ஃபஜ்ருடைய நேரம். | 50 |
| அல் அதான்,-தொழுகைக்கான அழைப்பு-அதிலுள்ள பல்வேறு ஸுன்னத்தான வழிகாட்டல்கள். | 50 |
| ① அதான் சொல்கின்றவரை பின் தொடர்வது -அதாவது அதானுக்கு பதில் அளிப்பது- | 50 |
| ② இரு ஷஹாதாக்களுக்கும்- சாட்சியங்களுக்கும்- பின்னர் பின்வரும் துஆவை ஓதல். | 51 |
| ③ அதானுக்கு பின்னர் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்வது. | 51 |
| ④ அதானுக்கு பின்னால் சொல்லப்பட வேண்டிய துஆவை ஓதுவது. | 52 |
| ⑤ அதானுக்கு பின்னால் பிரார்த்தனை செய்தல். | 52 |
| ஃபஜ்ரின் ஸுன்னத்தும் அதிலுள்ள பல்வேறு ஸுன்னத் துகளும். | 52 |
| ① மிகப்பிரதானமான ஸுனன் அர்ரவாத்திபுகளாவன. | 53 |
| ② ஃஜ்ருடைய ஸுன்னத்து தொழுகையானது பல்வேறு வகையில் தனித்து விளங்குகிறது. | 54 |
| பள்ளியை நோக்கி செல்லுதலும்.இதன் போது கடைபிடிக்க வேண்டிய ஸுன்னத்தான அம்சங்களும். | 55 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 1 பள்ளிவாயிலுக்கு நேரகாலத்துடன் செல்வது ஸுன்னத்து ஆகும். | 55 |
| 2 அவரின் வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லும் போது அவரின் பாத எட்டுக்கள் நன்மைகளாக எழுதப்படும் பொருட்டு அங்க சுத்தி வழூஃ -செய்தவாராக வெளியேறிச் செல்லல். | 55 |
| 3 தொழுகைக்கு நிதானத்தைக் கடைப்பிடித்தவாறும் (மெதுவாகவும்) வெளியேறிச் செல்லுங்கள். | 56 |
| 4 பள்ளிக்குள் நுழையும் போது வலது காலை முற்படுத்துவதும் பள்ளியை விட்டு வெளியேறும் போது இடது காலை முற்படுத்துவதும் ஸுன்னத்தாகும். | 56 |
| 5 பள்ளியில் நுழையும் போதும் அதை விட்டு வெளியேறும் போதும் நபிவழிகாட்டலில் வந்துள்ள துஆவை ஓதுவது. | 57 |
| 6 பள்ளிக்கு -தஹிய்யதுல் மஸ்ஜித்- காணிக்கையாக இரு ரக்அத்துக்களை தொழுவது. | 57 |
| 7 ஆண்கள் தொழுகையின் போது முதல் வரிசைக்கு முந்தி கொள்ளல் ஸுன்னத்தாகும்,மேலும் இதுவே ஆண்களுக்கு மிகச்சிறந்தது. பெண்ணுக்கு மிகச் சிறப்பானது இறுதியணியாகும். | 57 |
| 8 மஃமூன்கள்-இமாமை பின்பற்றி தொழுபவர்கள்- இமாமுக்கு அண்மித்திருப்பது ஸுன்னத்தாகும். | 58 |
| ▶ தொழுகையின் ஸுன்னத்துக்கள். | 59 |
| ◆ அஸ்ஸுத்ரா- தடுப்பு அது தொடர்பில் பின்வருவன ஸுன்னாத்தானவையாகும். | 59 |
| 1 ஸுத்ராவை -தடுப்பை- வைத்துக்கொள்வது -எடுத்துக் கொள்வது ஸுன்னத்தாகும். | 59 |
| 2 ஸுத்ராவுக்கு அண்மித்து நெறுக்கமாக இருப்பதும் ஸுன்னத்தாகும். | 60 |
| 3 தொழுபவருக்கு முன்னால் கடந்து செல்பவரை தடுப்பது ஸுன்னத்தாகும். | 60 |
| 4 ஒவ்வொரு தொழுகையிலும் மிஸ்வாக் செய்வது -குச்சியை- கொண்டு பல் துலக்குவது-ஸுன்னத்தாகும். | 61 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ◆ தொழுகைக்காக கியாமில் -ஆரம்ப நிலையில்- நிற்கும் போது பின்வருவன ஸுன்னத்தாகும். | 62 |
| 1 தக்பீரதுல் இஹ்ராம்-ஆரம்ப தக்பீர்-இன் போது இரு கைகளையும் உயர்த்தல். | 62 |
| 2 கைகளை உயர்த்தும் போது கைவிரல்கள் நீட்டிய வண்ணம் இருத்தல் ஸுன்னத்தாகும். | 63 |
| 3 இரு கைகளையும் உயர்த்தும் போது ஸுன்னத்தான இடம் வரையில் உயர்த்துவதும் ஸுன்னத்தாகும். | 63 |
| 4 தொழுபவர் முதல் தக்பீருக்கு பின்னர் தமது வலது கரத்தை இடது கரத்தின் மீது வைப்பதும் ஸுன்னத்தான வழிமுறை ஆகும். | 63 |
| 5 வலக்கரத்தால் இடக்கரத்தை பிடித்துக் கொள்ளலும் ஸுன்னத்தான வழிமுறையாகும். | 64 |
| 6 தொழுகையின் -ஆரம்ப துஆ-துஆஉல் இஸ்திஃப்தாஹ் ஓதுவது ஸுன்னத்தாகும். | 64 |
| 7 அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடல். | 65 |
| 8 பிஸ்மில்லாஹ் கூறல். | 66 |
| 9 இமாமுடன் "ஆமீன்" எனக்கூறல். | 66 |
| 10 அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு பின்னர் ஒரு அத்தியாயத்தை ஓதல். | 67 |
| ◆ ருகூவின் போது பின்வருவன ஸுன்னத்தாகும். | 67 |
| 1 கைவிரல்களை விரித்து முழங்காலை கைகளால் பிடித்துக் கொண்டிருப்பதை போன்று கைகளை முழங்காலில் வைத்தல் ஸுன்னத்தாகும். | 67 |
| 2 ருகூஃ செய்பவர் அவரது முதுகை நீட்டி நேராக வைத்துக் கொள்வது ஸுன்னத்தாகும். | 68 |
| 3 தொழுபவர் ருகூஃசெய்யும் போது அவரது இரு விலாப் பகுதிகளையும் இணைக்காது அகற்றி வைத்து கொள்வது ஸுன்னத்தாகும். | 68 |
| 4 ருகூவில் ஓதப்படக்கூடிய அத்கார்களை ஓதுவது ஸுன்னத்தாகும். | 69 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ◆ ருகூஃவிலிருந்து எழும்புதலும்,இதிலுள்ள பல்வேறு ஸுன்னத்தான வழிகாட்டல்களும். | 70 |
| ① இந்த ருகுனை நீளப்படுத்தல். | 70 |
| ② "ரப்பனா வலகல் ஹம்து" எனும் சொற்றொடரினை அது -ஹதீஸ்களில் வந்துள்ளதன் பிரகாரம்- பல்வேறு வகையிலும் ஓதிவரல். | 70 |
| ③ ருகூஃவிலிருந்து எழுந்தவுடன் ஓதப்பட வேண்டிய துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும். | 71 |
| ◆ ஸுஜூத் செய்தல், இதில் பல்வேறு ஸுன்னத்துக்கள் காணப்படுகின்றன. | 72 |
| ① ஸுஜூத் செய்கின்றவர் அவரது இரு புயங்களையும் விலாவுடனும், இரு தொடைகளையும் வயிற்றுடனும் இணைக்காது தூரப்படுத்திகொள்வதும், ஸுன்னத்தாகும். | 72 |
| ② ஸுஜூத் செய்கின்றவரின் கால் விரல் நுணிகள் கிப்லாவை முன்னோக்கியதாக இருப்பது ஸுன்னத்தாகும். | 73 |
| ③ ஸுஜூதின் போது ஓதுமாறு வந்துள்ள துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும். | 73 |
| ④ ஸுஜூதில் அதிகம் பிரார்த்தனை செய்வது ஸுன்னத்தாகும். | 74 |
| ◆ இரு ஸுஜூதுகளுக்கும் மத்தியிலான அமர்வின் போதுள்ள ஸுன்னத்துக்களாவன. | 75 |
| ① இடக்காலின் மீது அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக் கொள்ளல். | 75 |
| ② இந்த ருகுனை நீட்டுதல். | 75 |
| ③ ஒருவர் இரண்டாவது, நான்காவது ரக்அத்துக்களுக்காக எழும் போது எழும்புவதற்கு முன்னர் சற்று அமர்வது ஸுன்னத்தாகும். | 75 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ◆ தஷஹ்ஹுதின் -இறுதி அமர்வு- போதான ஸுன்னத்துக்கள். | 76 |
| 1 தொழுபவர் அவரது இடக்காலில் அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக்கொள்வது ஸுன்னத்தாகும். | 76 |
| 2 தஷஹ்ஹுதின் போது கைகளை வைக்கும் போது பல்வேறு வழிமுறைகளையும் பின்பற்றுவது ஸுன்னத்தாகும். | 76 |
| 3 தஷஹ்ஹுத் அமர்வில் கையை வைக்கும் போது -ஹதீஸ்களில் வந்துள்ள- வழிமுறைகளில் பல்வேறு முறை களையும் செயற்படுத்தல் ஸுன்னத்து ஆகும். | 77 |
| 4 மேலும் தஷஹ்ஹுதை அதன் - ஓதப்படக்கூடிய துஆக் களை-பல்வேறுபட்டவகையிலும் அமைத்துக் கொள்ளல் ஸுன்னத்தாகும். | 78 |
| 5 தொழுபவர் அவரின் தொழுகை நான்கு மூன்று ரக்அத்துக்கள் கொண்டமைந்து காணப்படும் போது- அத்தஷஹ்ஹுதுல் அகீர்- இறுதி அமர்வின் போது தவர்ருக் முறையில் அமர்வது ஸுன்னத்தாகும். | 78 |
| 6 நபிகளார் மீது ஸலவாத்து சொல்லுவதில் வந்துள்ள பல்வேறு முறைகளையும் செயற்படுத்தல் ஸுன்னத்து ஆகும். | 79 |
| 7 தொழுகையில் ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் நான்கு விடயங்களை விட்டும் பாதுகாப்புத்தேடல் ஸுன்னத்தாகும். | 80 |
| ◆ கடமையான தொழுகைகளுக்கு பின்னராக ஓதப்பட வேண்டிய துஆக்கள் ஸுன்னத்தாகும். | 81 |
| ◆ ஃபஜ்ர் தொழுகை நிறைவேற்றிய பின்னர் சூரிய உதயம் வரை தொழுமிடத்திலேயே அமர்ந்து இருப்பது ஸுன்னத்தாகும். | 84 |
| ▶ **காலை நேர திக்ருகள்.** | 86 |
| ◆ காலை மாலை திக்ருகள். | 87 |
| ◆ **மூன்றாவது: லுஹாவின் நேரம்.** | 92 |
| ◆ நிறைவேற்றப்படுவதற்கான நேரம். | 93 |
| ◆ அதன் ரக்அத்துக்களின் எண்ணிக்கை. | 94 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| நான்காவது:லுஹருடைய நேரம். | 95 |
| முதல் அம்சம்:லுஹர் தொழுகையின் முன் பின் ஸுன்னத்து தொழுகை. | 95 |
| இரண்டாவது அம்சம்:லுஹர் தொழுகையின் முதல் ரக்அத்தை நீட்டித் தொழுவது ஸுன்னாவாகும். | 95 |
| மூன்றாவது அம்சம்: வெப்பமான காலப்பகுதியில் லுஹர் தொழுகையையை வெப்பம் தணியும் வரை பிற்படுத்துவது ஸுன்னத்தாகும். | 96 |
| ஐந்தாவது:அஸருடைய நேரம். | 98 |
| காலை மாலை துஅக்கள்.-அத்கார்கள்- | 99 |
| காலை நேர அத்கார்களின் நேரம். | 99 |
| மாலை நேர அத்கார்களின் நேரம். | 99 |
| ஏழாவது:- மக்ரிபுடைய நேரம். | 100 |
| முதல் விடயம்:-மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் சிறு குழந்தைகளை வெளியில் விடாதிருத்தல் ஸுன்னத் ஆகும். | 100 |
| இரண்டாவது:-மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் அல்லாஹ்வின் பெயரைக் கூறலும் வீட்டுக்கதவுகளை மூடி விடுவதும் ஸுன்னத் ஆகும். | 100 |
| மூன்றாவது விடயம்:-மக்ரிப் தொழுகைக்கு முன்னராக இரு ரக்அத்துக்கள் தொழல். | 101 |
| நான்காவது விடயம்:-இஷாவுக்கு முன்னர் நித்திரை கொள்வது மக்ரூஹ்-வெறுக்கத்தக்கது- ஆகும். | 101 |
| ஏழாவது:இஷாவுடைய நேரம். | 103 |
| முதல் விடயம்:இஷாவுக்கு பின்னர் பேசிக்கொண்டு இருப்பதும், கூட்டமாக ஆலோசித்துக் கொண்டிருப்பதும் வெறுக்கப்பட்டதாகும். | 103 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ◆ இரண்டாவது அம்சம்:-மஃமூன்கள்-இமாமை பின்பற்றி தொழுபவர்களுக்கு- கடினமான ஒரு அம்சம் இல்லை எனும் சமயத்தில் இஷாத்தொழுகையை பிற்படுத்தி தொழுவது மிகச்சிறப்பானது. | 104 |
| ◆ ஒவ்வொரு இரவிலும் அத்தியாயம் அல் இக்லாஸை ஓதுவது ஸுன்னத்தாகும். | 104 |
| ◆ நித்திரையின் போதான ஸுன்னத்துக்கள் | 105 |
| 1 நித்திரை கொள்ளும் போது வீட்டுக்கதவுகளை மூடி விடல். | 105 |
| 2 நித்திரைக்கு முன்னர் நெறுப்பை அணைத்து விடல். | 105 |
| 3 நித்திரைக்கு முன்னராக வுழூஃ செய்து கொள்ளல். | 106 |
| 4 நித்திரை கொள்ளும் முன்னர் உறங்குமிடத்தை தட்டி உதறிக்கொள்ளல். | 106 |
| 5 வலது புறமாக உறங்குவது. | 107 |
| 6 வலது கரத்தை வலது கண்ணத்தின் கீழ் வைத்து கொள்ளல். | 107 |
| 7 நித்திரை கொள்ளும் போதான திக்ருகளை ஓதிக் கொள்ளல். | 107 |
| ◆ அல் குர்ஆனில் உள்ளவைகளாவன. | 107 |
| ◆ அஸ்ஸுன்னாவில் அதிகமான துஆக்கள் வந்துள்ளன. அவற்றுள்.சில பின்வருமாறு.: | 110 |
| ◆ நித்திரையில் கணவு காணும் போதான ஸுன்னத்துக்கள். | 114 |
| ◆ முன்னைய ஹதீஸ்களின் பரிகாரம் ஒருவர் ஸாலிஹான -நல்ல- கணவுகளை கண்டால் அவருக்கு பின்வருவனவற்றை செய்வது ஸுன்னத்து ஆகும்.எனும் விடயங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. | 115 |
| ◆ இரவில் நித்திரையிலிருந்து இடை நடுவில் விழித்து எழுந்து விட்டால் அவர் இந்த துஆவை ஓதுவது ஸுன்னத்து ஆகும்:- | 116 |

## நேரம் குறிக்கப்படாத -பொதுவான- ஸுன்னத்துக்கள்




| தலைப்பு | பக்கம் |
|---|---|
| **உணவின் போதான ஸுன்னத்துக்கள்** | 120 |
| 1. உணவின் ஆரம்பத்தில் பஸ்மில் -பிஸ்மில்லாஹ்- கூறல். | 120 |
| 2. தனக்கு போதுமான அளவு சாப்பிடுதல். | 122 |
| 3. கீழே சிந்திய உணவை எடுத்து அதில் அழுக்குகள் ஏதும் இருப்பின் அதை நீக்கிய பின் உட்கொள்ளல். | 122 |
| 4. சாப்பிட்டு முடித்தவுடன் கை விரல்களை உறிஞ்சிக் கொள்வது.சூப்புவது. | 122 |
| 5. உணவுத் தட்டை வழித்து உண்ணுதல். | 123 |
| 6. மூன்று விரல்களால் சாப்பிடுதல். | 124 |
| 7. உணவுப் பாத்திரத்துக்கு வெளியில் மூன்று முறை மூச்சு விடல். | 124 |
| 8. உணவருந்திய பின்னர் அல்லாஹ்வை - அல்ஹம்து லில்லாஹ் என- புகழ்தல். | 125 |
| 9. உணவில் பலரும் கூட்டுச்சேர்தல். | 125 |
| 10. உணவு விருப்பத்துக்குரியதாயின் அதை புகழ்துரைத்தல். | 126 |
| 11. உணவளித்தவருக்கு பிரார்த்தனை செய்தல். | 126 |
| 12. பானங்களை அருந்தும் போது அதை பருகுபவர் அவரது இடப்பக்கத்துக்கு முன் வலப்புறத்தை முற்படுத்தல் ஸுன்னத்தும் ஆகும். | 127 |
| 13. பானங்களை -புகட்டுபவர் கூட்டத்தில் இறுதியாக பருகுதல் வேண்டும். | 128 |
| 14. இரவின் போது அல்லாஹ்வின் பெயரை -பிஸ்மில்லாஹ்- என கூறி பாத்திரங்களை மூடி விடல். | 129 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முகமன் கூறல், ஒருவரை ஒருவர் சந்தித்தல், சபை ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள். | 130 |
| 1 முகமன் -ஸலாம்- கூறல் ஸுன்னத்தாகும். | 130 |
| 2 தேவையின் போது முகமன்-ஸலாம்-கூறுவதை மூன்று முறை திரும்பத்திரும்ப கூறல் ஸுன்னத்து ஆகும். | 132 |
| 3 அறிந்தவர் அறியாதவர் என அனைவருக்கும் பொதுவாக -முகமன்- ஸலாம் கூறுவது ஸுன்னத்தாகும். | 132 |
| 4 முதலில் எவர் ஸலாத்தை கொண்டு ஆரம்பம் செய்வது ஸுன்னத்தாக இருக்கின்றதோ அவர்கள் முதலில் முகமன்-ஸலாம் கூறுவதை கொண்டு ஆரம்பிப்பது ஸுன்னத்தாகும். | 132 |
| 5 சிறார்கள் மீது முகமன் -ஸலாம்- கூறல் ஸுன்னத்தாகும். | 133 |
| 6 வீட்டினுள் நுழையும் போது ஸலாம்-முகமன்-கூறல் ஸுன்னத்து ஆகும். | 133 |
| 7 ஒரு கூட்டத்தாரிடம் சென்று அவர்களில் சிலர் நித்திரை கொண்டிருக்கும் போது ஸலாத்தை -முகமனை- சப்தத்தை தாழ்த்தி கூறல் ஸுன்னத்து ஆகும். | 135 |
| 8 ஸலாமை-முகமனை-எத்திவைப்பது ஸுன்னத்து ஆகும். | 135 |
| 9 சபைக்குள் நுழையும் போதும் அதிலிருந்து பிரிந்து விடை பெற்று செல்லும் போதும் ஸலாம் கூறல். | 136 |
| 10 சந்திப்பின போது ஸலாம் கூறுவதுடன் -முஸாஃபஹா-கட்டியணைத்து ஆறத்தழுவிக் கொள்ளல் ஸுன்னத்து ஆகும். | 136 |
| 11 சந்திக்கும் போது புன்முறுவல் செய்தலும்,சிறித்த முகத்துடன் சந்திப்பதும் ஸுன்னத்து ஆகும். | 136 |
| 12 நல்ல வார்த்தைகள் பேசுவது ஸுன்னத்து ஆகும். அதுவும் -ஸதகா- தர்மம் ஆகும். | 137 |
| 13 சபையில் அல்லாஹ்வை நினைவு கூறல் ஸுன்னத்து ஆகும். | 137 |

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| ⑭ சபையை முடிக்கும் போது (கஃப்ஃபாரதுல் மஜ்லிஸ்) துஆவை கொண்டு முடித்தல் ஸுன்னத்து ஆகும். | 138 |
| **ஆடை,அலங்காரத்தின் போதான ஸுன்னத்துக்கள்.** | 139 |
| ① பாதனி அணியும் போது வலதை முற்படுத்துவது ஸுன்னத்து ஆகும். | 139 |
| ② ஆடைகளில் வெண்ணிற ஆடை அணிவது ஸுன்னத்தாகும். | 140 |
| ③ வாசனைத்திரவியங்களை பாவிப்பது ஸுன்னத்தாகும். | 140 |
| ④ வாசனைத்திரவியங்களை -நறுமணத்தை- பெற மறுப்பது மகரூஹ் ஆகும். | 141 |
| ⑤ தலை சீவும் -வாரும்-போது வலதை முற்படுத்துவது ஸுன்னத்தாகும். | 141 |
| **தும்மல், கொட்டாவி ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள்** | 142 |
| ◆ தும்மலின் போதான ஸுன்னத்துக்கள்: | 142 |
| ① தும்மியவர் "அல் ஹம்துலில்லாஹ்" என கூறுவது ஸுன்னத்து ஆகும். | 142 |
| ② தும்மியவர் "அல்ஹம்து லில்லாஹ்" என அல்லாஹ்வை புகழாத போது தும்மியவருக்கு பதில் அளிக்காது இருப்பது ஸுன்னத்து ஆகும். | 143 |
| ◆ கொட்டாவியின் போதான ஸுன்னத்துக்கள். | 144 |
| ◆ கொட்டாவியின் போது அதை அடக்கிகொள்ளல் அல்லது கையை வைத்து கட்டுப்படுத்திக் கொள்ளல் ஸுன்னத்து ஆகும். | 144 |
| **நாளாந்த ஏனைய ஸுன்னத்துக்கள்** | 146 |
| ◆ மலசல கூடம் நுழையும் போதும் அதிலிருந்து வெளியேறும் போதும் -கூறுமாறு-வந்துள்ள திக்ரை கூறல். | 146 |

| தலைப்பு | பக்கம் |
| --- | --- |
| ◆ வஸிய்யத்-மரண சாசனத்தை-எழுதிவைப்பது ஸுன்னத்து ஆகும். | 147 |
| ◆ கொடுக்கல் வாங்கலின் போது விட்டுக்கொடுப்புடனும், நெகிழ்வுத்தன்மையுடனும் நடந்து கொள்ளல். | 147 |
| ◆ ஒவ்வொரு வுழுவுக்கு பின்னரும் இரு ரக்அத்துக்களை தொழல். | 148 |
| ◆ இன்னொரு- தொழுகைக்காக அதை எதிர்ப்பார்த்து காத்திருத்தல். | 148 |
| ◆ மிஸ்வாக்-தகுச்சியால் பல் துலக்கல்-செய்தல். | 149 |
| ◆ ஒவ்வொரு தொழுகாக்காகவும் வுழூவை -அது முறியாது இருக்கும் போதிலும்-புதுப்பித்துக் கொள்ளல். | 150 |
| ◆ துஆ-பிரார்த்தனை-செய்தல். | 151 |
| ◆ அல்லாஹ்வை -திக்ர் செய்தல்-ஞாபகப்படுத்தல் நாளாந்த ஸுன்னத்துக்களில் ஒன்று. | 156 |
| ◆ உள்ளங்களுக்கான உயிரோட்டம் அல்லாஹ்வை ஞாபகப் படுத்தல் ஆகும். | 156 |
| ◆ அல்லாஹ் அதிக இடங்களில் அவனை ஞாபகப் படுத்தும் படி தூண்டியுள்ளான்.அவ்வாறானவற்றுள் சில. | 157 |
| ◆ நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னாவில் வழிகாட்டலில் அதிகமான திக்ருகள் வந்துள்ளன. | 158 |

بسم الله الرحمن الرحيم

الحمد لله وحده والصلاة والسلام على من لا نبي بعده، وبعد:

فقد قرأت في هذا المؤلف للشيخ عبد الله بن حمود الفريح (المنح العلية في بيان السنن اليومية) فقد ألفيته مؤلفاً مفيداً تحمل على استقصاء السنن اليومية الفعلية والقولية في الليل والنهار، المنفردة والتابعة لغيرها مما ثبت بالدليل فجزاه الله خيراً، ونفع بمؤلفه آمين، وبالله التوفيق.

كتبه

د/ خالد بن علي المشيقح

١٤٣٤/١١/٧هـ

## கலாநிதி காலித் அல் முஷைகிஹ்.அவர்களின் முன்னுரை.

புகழனைத்தும் ஏக இறைவன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் ஸலவாத்தும் நபிகளார் மீது உண்டாகட்டும். என வேண்டியதன் பின்.

நூலாசிரியர் கலாநிதி அப்துல்லாஹ் பின் ஹமூத் அல் ஃபுரைஹ்.அவர்களது இந்த நூலான **{அல் மினஹுல் அலிய்யா ஃபீ பயானிஸ்ஸுனனில் யவ்மிய்யா}**. இதில் நூலாசிரியர் மிக நுணுக்கமாக சிறந்த அமைப்பில் நபிகளாரது இரவு,பகல் என நாளாந்த வார்த்தை, செயல் சார்ந்த தனியான ஸுன்னாக்களை கொண்ட மிக பயனுள்ள ஒரு தொகுப்பை தொகுத்திருந்திருக்கின்றார்.அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்கட்டும்.மேலும் இவரின் இந்நூல் பயனுள்ளதாகவும் அமையட்டும்.என அல்லாஹ்வை வேண்டிக் கொள்கின்றேன்.அல்லாஹ் இதை ஏற்றுக் கொள்வானாக. அல்லாஹ்வே போதுமானவன்.

இவ்வண்ணம்.

**கலாநிதி:காலித் அல் முஷைகிஹ்.**
மக்கா,மதீனா ஆகிய இரு
புனிதஸ்ஸதலங்களினதும்,
அல் கஸீம் பல்கலைக்கழகத்தினதும்
விரிவுரையாளர்.


ادخلوها بسلام آمنين
KING FAHD GATE
TO ROOF

# முன்னுரை

**"அல்லாஹ்வின் மீதும்,இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயம் அல்லாஹ்வின் தூதரிடத்தில் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கின்றது".**(அத்தியாயம், அல் அஹ்ஸாப்:22) எனகூறிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.மேலும் நபிகளார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின்பற்றியவனாக ஆரம்பித்து.அவரது வழிகாட்டல்களை பரிபூரணமாக இச்சமூகத்துக்கு வழிகாட்டி, அவற்றை பின்பற்றும் படி கடமையாக்கிய மிகச் சிறந்தவர்.அண்ணார் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.என்றதன் பின்னர்........

நேசத்துக்குரிய அன்பரே,,,இதை வாசிப்பக்கினறவர்களே... நான் இதை உங்களுக்காகவே காலை எழுந்தது முதல் நித்திரைக்கு செல்லும் வரையிலான நேரம் குறித்த மற்றும் நேரம் குறிக்கப்படாத நாளாந்த நபிகளாரின் ஸுன்னத்தான வழிமுறைகளை உங்கள் முன் நூல்வடிவில் முன்வைத்துள்ளேன்.இதில் நான் ஸுன்னத்து என நாடுவது நபிகளார் கட்டாயம் எனும் நிலையில் அல்லாது உபரியானவைகளாக முன்வைத்துள்ள அம்சங்களாகும்.மேலும் இவை அல்லாஹுவுக்காக செய்யப்படும் கட்டாய செயற்பாடுகளை பரிபூரணப் படுத்துவதாகவும்,மேலதிகமானவைகளாகவும் காணப் படுகின்றன. **இது அல் மினஹுல் அலிய்யா ஃபீ பயானி ஸுனனில் யவ்மிய்யா** எனும் மூல நூலின் சுறுக்கமாகும். இதை சில சகோதரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இதில் ஸுன்னத்துக்களின் பயன்கள்,அவை தொடர்ப்பான அதிகப்படியான மார்க்க தெளிவுகளையும் நீக்கி அதிலுள்ள ஸுன்னத்தான அம்சங்களை மாத்திரம் ஆதாரங்களுடன் மிகசுறுக்கமாக முன் வைத்துள்ளேன். இவையனைத்தும் நேரம் காலம்,முயற்சி ஆகியன இதன் மூல நூலை வாசிப்பதற்கு நேரம்கிடைக்காதவர்களுக்காகவும்,இந்நூலை இஸ்லாமிய மார்க்கத்துக்கான அழைப்பு சார் தொண்டு நிறுவனங்கள் அச்சிட்டு பிரசுரிக்க விரும்புமாயின் இலகுவாக அமைத்துக்கொள்ளவும், இதனால் அதிகமானவர்களுக்கு இதன் பயன் சென்றடைவதை நோக்கமாக கொண்டுமாகும்.இவ்வாறு நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நாளாந்த ஸுன்னத்தான வழிமுறைகளை ஆய்ந்து ஒன்றிணைப்பதற்கான பிரதான தூண்டுதல்களாக இன்றைய கால கட்டத்தில் அதிகமானவர்கள் இவை கட்டாயமானவை அல்ல மேலும் இதை விடுகின்றவர் தண்டிக்கப்படுவதும் இல்லை எனும் போக்கினால் அதிகமான நன்மைகளை தட்டிக்கழிக்கும் நிலையும்,

மேற்கத்திய உலகு இத்தகைய ஸுன்னத்தான அம்சங்களை கொச்சைப்படுத்தும் நிலை காணப்படுகின்றமையும் ஆகும்.எனவே இதன் மூலம் இவ்வாறாக உறுதிப் படுத்தப்பட்ட மிகச்சரியான நாளாந்த ஸுன்னத்துக்களை மாத்திரம் ஆதாரங்களுடன் வெளிக்கொண்டு வருவதற்கான ஆவலின் வெளிப்பாடு இந்நூல் வடிவமாகும்.

அல்லாஹ் எம்மனைவரையும் அந்நளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வழிமுறைகளை மிகத் துள்ளியமாக அடியொட்டி பின்பற்றக் கூடியவர்களாக ஆக்கியருள்வதுடன், நாளைய மறுமையில் அவர்களுடனேயே எம்மை ஒன்றைணைப்பானாக.என ஏக இறைவன் அல்லாஹ்வை வேண்டிப் பிரார்த்திக் கின்றேன்.

இவ்வண்ணம் அல்லாஹ்வின்

பாவமன்னிப்பை வேண்டி நிற்கும் நான்.

**கலாநிதி அப்துல்லாஹ் பின் ஹமூத் அல் ஃபுரைஹ்.**

மின்னஞ்சல் மூலமான தொடர்ப்புகளுக்கு:

Email: eqtidaa@gmail.com

## அனிந்துரை



### ஸுன்னாவின் கருத்து

ஸுன்னா என்றால் அதன் கருத்து விருப்பத்துக்குரியது, ஆர்வமூட்டடப்பட்டது.எனும் கருத்தை கொண்டது.

ஸுன்னா என்றால் கட்டாயம் செயற்படுத்த வேண்டும் எனும் அடிப்படையில் இல்லாத ஏவல்களாகும்.இதை செயற்படுத்துபவர் கூலி வழங்கப்படுவார்,இதே வேளை இதை விடுகின்றவர் தண்டிக்கப்படவும் மாட்டார்.

### ஸுன்னாவை கடைபிடிப்பதில் முன்னோர் காட்டிய ஆர்வத்திற்கான சான்றுகள்.

1. இமாம் முஸ்லிம் அவர்கள் இந்த ஹதீஸை பதிவு செய்கிறார்கள்.அந்நுஃமான் பின் ஸாலிம் அவர்கள் அம்ர் பின் அவ்ஸ் அவர்களை தொட்டும் கூறுகின்றார். எனக்கு அன்பஸா பின் அபீ ஸுப்யான் அவர்கள் கூறினார்.இதை எனக்கு உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்.அதில் நான் நபிகளார் கூறியதை கேட்டேன். முஸ்லிமான ஒரு அடியான் அல்லாஹ்வுக்காக தினமும் பர்ழ் -கட்டாயம்- அல்லாத சுன்னத்தான தொழுகைகள் 12 ரக்அத்துக்கள் தொழுது வந்தால் அவருக்கு சுவனத்தில் ஒரு வீடு கட்டப் படும்’ என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அவர்களின் மனைவி உம்மு ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம்:1727).உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார் "நான் இதை நபிகளார்

(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து கேட்டது முதல் இச்செயலை நான் விட்டதேயில்லை.மேலும் அன்பஸா அவர்கள் கூறுகின்றார் நான் இதை உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடமிருந்து கேட்டது முதல் நான் இதை விட்டது கிடையாது என.

மேலும் அம்ர் பின் அவ்ஸ் அவர்கள் "நான் இதை அன்பஸாவிடமிருந்து கேட்டது முதல் விட்டதே கிடையாது" என.

மேலும் அந்நுஃமான் பின் ஸாலிம் அவர்கள் குறிப்பிடுகின்றார் நான் இதை அம்ர்பின் அவ்ஸிடமிருந்து கேட்டது முதல் கைவிட்டதில்லை என.

2 அலீ இப்னு அபீ தாலிப் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக் கின்றார்கள்.(என் துணைவியர்) ஃபாத்திமா அவர்கள் (மாவு அரைக்கும்) திரிகை சுற்றியதால் தம் கையில் ஏற்பட்ட காய்ப்பு குறித்து (என்னிடம்) முறையிட்டார்.இது தொடர்பாக நபியவர்களிடம் தெரிவிக்கும் படி கூறினேன்.எனவே, ஒரு பணியாளரை (தமக்குத் தரும்படி) கேட்க நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஃபாத்திமா சென்றார்கள். ஆனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அப்போது வீட்டில் இல்லாததால் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் அது பற்றிக் கூறி (விட்டுத் திரும்பலா) னார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வந்தவுடன் அவர்களிடம் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் விஷயத்தை தெரிவித்தார்கள்.உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள்.அப்போது நாங்கள் படுக்கைக்குச் சென்றுவிட்டிருந்தோம். (அவர்களைக் கண்டவுடன்) நான் எழுந்திருக்க முற்பட்டேன்.உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,'(எழுந்திருக்க வேண்டாம்) அந்த இடத்திலேயே இருங்கள்' என்று கூறிவிட்டு எங்களுக்கு நடுவில் வந்து அமர்ந்தார்கள்.அப்போது (என்னைத் தொட்டுக் கொண்டிருந்த) அவர்களின் பாதங்களின் குளிர்ச்சியை என்னுடைய நெஞ்சின் மீது உணர்ந்தேன். (அந்த அளவுக்கு நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள்.) 'பணியாளரை விட உங்களிருவருக்கும் (பயனளிக்கும்) சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? நீங்கள் இருவரும் 'படுக்கைக்குச் சென்றதும்' அல்லது 'விரிப்புக்குச் சென்றதும்' அல்லாஹு அக்பர் (அல்லாஹ் பெரியவன்) என்று முப்பத்து நான்கு முறையும்,சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) என்று முப்பத்து மூன்று முறையும்,அல்ஹம்து லில்லாஹ் (புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே) என்று முப்பத்து மூன்று முறையும் சொல்லுங்கள்.இது பணியாளைவிட உங்கள் இரு வருக்கும் சிறந்ததாகும்.என்றார்கள்.(நூல் புகாரி-3705,முஸ்லிம் எண் -2727)

இன்னொரு அறிவிப்பில் அலீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள்,"இவ்வாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய நாளிலிருந்து அதை நான் ஓதாமல் விட்டதில்லை" என்று சொன்னார்கள்.அப்போது "ஸிஃப்பீன் போர் நடைபெற்ற இரவில் கூடவா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அலீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், "ஸிஃப்பீன் போர் நடைபெற்ற இரவில்கூட ஓதாமல் இருந்ததில்லை" என்று பதிலளித்தார்கள்.(நூல்,புகாரி,எண் -5362,முஸ்லிம்,எண்-2727)

இங்கு குறித்துக்காட்ட வேண்டிய விடயம் இந்த ஸிஃபிஃபீன் யுத்தம் இடம் பெற்ற இரவின் போது இதன் படைத்தளபதியாக அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருந்தார்கள். இருந்த போதிலும் கூட-இக்கட்டான இச்சூழலில் கூட-இந்த ஸுன்னத்தான வழிமுறையை அவர்கள் கைவிடவில்லை என்தாகும்.

3 இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜனாஸாத் தொழுகையில் களந்து கொண்டு அத்தொழுகை முடித்தவுடன் மண்ணறைக்கு மையித்தை அடக்கும் வரை செல்லாது திரும்பி விடுவார்கள். இவர்கள் இதுதான் பரிபூரணமான ஸுன்னத்தான வழிமுறை என எண்ணிக் கொண்டிருந்தமையே இதற்கான காரணியாகும்.மேலும் அடக்கும் வரை செல்வதன் சிறப்பை அறிந்திருக்க வில்லை.எனினும் பின்னர் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் அவர்களுக்கு எட்டிய போது அவர்களுக்கு ஸுன்னத்தான வழிமுறை தப்பி போனதையிட்டு மிகவும் கவலைப்பட்டார்கள்.அதன் பின் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை சிறிது அவதானித்துப்பாருங்கள்.

அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள்,பள்ளிவாசல் தரையில் கிடந்த சிறு கற்களில் ஒரு கைப்பிடியளவு அள்ளி தமது கையில் வைத்து கிளறிக் கொண்டிருந்தார்கள்.பின்னர் செய்தி கிடைத்த பின்னர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது கையிலிருந்த சிறு கற்களை கீழே எறிந்து விட்டு,"நாம் ஏராளமான "கீராத்" (நன்மை)களை தவற விட்டு விட்டோம்" என்று கூறினார்கள்.(நூல் முஸ்லிம் எண்-1323, முஸ்லிம்,எண்-945)

இமாம் நவவி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது இதில் நபித்தோழர்களுக்கு ஸுன்னத்தான விடயங்கள் பற்றிய அம்சங்கள் அவர்களை வந்தடையும் போது அவர்கள் அவற்றை பின் பற்றுவதன் மீது கொண்டிருந்த ஆவலும், கரிசணையையும் எடுத்துக் காட்டுவதுடன்,அவர்களை அறியாது கூட ஒரு ஸுன்னத்தான வணக்கம் தப்பி விடும் போது அவர்களுக்கு ஏற்பட்ட மனக் கவலையையும், சஞ்சலத்தையும் எடுத்துக்காட்டுகிறது.(பார்க்க-அல் மின்ஹாஜ் 7/15).

## ஸுன்னத்தான வழிமுறைகளை பின்பற்றுவதன் பயன்கள்

### அன்புச்சகோதரா-நிச்சயம் ஸுன்னத்தான வழிமுறைகளை பின்பற்றுவதனால் அதிகப்பயன்கள் உள்ளன.அவற்றுள் சில பின் வருமாறு:

1 அல்லாஹ்வின் அன்பு,நேசம் ஆகியவற்றில் உயர் அந்தஸ்தை அடைதல்.ஆகவே ஒரு அடியான் அல்லாஹ்வை உபரியான வணக்கங்களால் அவனை நெறுங்கும் போது அவனுக்கு அல்லாஹ்வின் நெறுக்கமும் அன்பும் நேசமும் கிட்டுகிறது.

இமாம் இப்னு கையிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது திடமாக அல்லாஹ் அவனின் நேசத் துகுரியவரை அகத்தாலும் புறத்தாலும் நேசிக்காத வரையிலும், உம்மை அவன் நேசிக்க மாட்டான்,மேலும் அவரை உண்மை படுத்தாதும்,அவருக்கு கட்டுப்படாதும்,அவருக்கு கட்டுப் படுவதை மேலாக கருதாத வரைக்கும்,அவரின் தீர்ப்பை ஏனையவரின் தீர்ப்பை விட முற்படுத்தாமலும்.இருக்க வேண்டும்.அவ்வாறு இல்லை எனின் நீ நாடியாவாறு மீள் பரிசீலனை செய்து நீ வெளிச்சத்தை தேடிப்பார் உன்னிடத்தில் அதில் ஒன்றுமே கிடைக்கப்பெற மாட்டாய். (பார்க்க-மதாரி ஜுஸ்ஸாலிகீன்- 3/37).

2 அல்லாஹ் அடியானுடனிருத்தல்.மேலும் அல்லாஹ் அவருக்கு நல்லவற்றுக்கு வழிகாட்டுவான்.அவரின் உடலுறுப்புக்கள் இறைவன் விரும்புகின்றவைகள் மாத்திரம் தான் இடம்பெறும்.ஏனெனில் அல்லாஹ் அவருடன் இருக்கின்றான்.

3 அல்லாஹ்வின் நேசத்தினால் அடியானின் பிராரத்தனைகள் அங்கிகரிக்கப்படல். ஏனெனில் ஸுன்னத்தான உபரியான வழிமுறைகளினூடாக அல்லாஹ்வை நெறுங்கும் போது அல்லாஹவின் நேசம் கிட்டுகிறது.அவனின் நேசம் கிடைக்கும் போது அவரின் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளபடுகின்றன.

**இம்மூன்று பயன்களையும் அறிவிக்கும் சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது.**

அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்,நிச்சயமாக அல்லாஹ் கூறுகிறான்:யார் எனது நேசரை பகைத்து கொள்கிறாரோ அவருடன் நான் போர் தொடுக்கின்றேன்.நான் என் அடியான் மீது கடமையாக்கியிருக்கும் வணக்கத்தின் மூலமாகவே என் அடியான் எனக்கு நெருக்கமாகிறான். அதுவே எனக்குப் பிரியமான வணக்கமாகும்.எனது அடியான் உபரியான வணக்கங்கள் மூலம் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறான். அதன் பயனாக அவனை நான் நேசிக்கிறேன்.நான் அவனை நேசிக்கும் போது அவன் செவியுறுகின்ற செவியாகவும்,அவன் பார்க்கின்ற பார்வையாகவும்,அவன் நடக்கின்ற காலாகவும் நான் ஆகி விடுகின்றேன்.அவன் என்னிடம் கேட்டால்,நான் அவனுக்குக் கொடுக்கின்றேன்.அவன் என்னிடம் பாதுகாவல் தேடினால் பாதுகாப்பு அளிக்கிறேன்.முஃமினுடைய உயிரைக் கைப்பற்றும் போது அடையும் சங்கடத்தைப் போன்று நான் செய்கின்ற வேறு எந்தக் காரியத்திலும் நான் சங்கடம் அடைவதில்லை.(ஏனெனில்) என் அடியான் மரணத்தை வெறுக்கின்றான். நான் அவனுக்கு வேதனை அளிப்பதை வெறுக்கிறேன்.(நூல்,புகாரி,எண் :6502)

4 கட்டாய பர்ளான விடயங்களில் ஏற்படும் குறைகள், தவறுகள் இத்தகைய உபரியானவைகளினால் நிவர்த்தி செய்யப்படுகின்றன. ஏனெனில் உபரியானவைகளினால் பர்ளானவைகளின் குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**இதற்கான சான்று பின்வருமாறு.**

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.நான் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதை நான் கேட்டேன். அவர்கள் கூறினார்கள் "**மறுமை நாளில் ஒரு அடியானின் வணக்கங்களில் முதலில் கேட்கப்படுவது தொழுகை பற்றியதாகும்.இது சீரானதாக இருந்தால் அவர் சீர் பெற்று வெற்றியும் பெற்று விட்டார்,மேலும் ஒருவரின் தொழுகை சீர்கெட்டிருந்தால் அவர் சீர் கெட்டு நஷ்டமடைந்து விட்டார். ஒரு கட்டாயாமான பர்ளான ஒன்றில் ஏதும் குறைகள் இருப்பின் திடமாக மகத்துவமிக்க அல்லாஹ் கூறுவான்.**"இந்த எனது அடியானுக்கு ஏதும் உபரியான வணக்கங்கள் உண்டா...? என இவ்வாறு ஏதும் ஸுன்னத்தான உபரியான வணக்கங்கள் இருப்பின் அதை கொண்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.இவ்வாறே மற்றைய அனைத்து வணக்கங்களும் சீர் செய்யப்படும். (அதாரம் அஹ்மத்,எண் 9494,அபூ தாவுத் எண் 864,அத்திர்மிதி.எண் 413,இதை இமாம் அல்பானி அவர்கள் ஒரு ஸஹீஹான ஹதீஸ் என ஸஹீஹுல் ஜாமிஃ இல் குறிப்பிட்டுள்ளார்கள்.1/405).





# நேரம் குறிக்கப்பட்ட ஸுன்னத்தான வழிமுறைகள்

நேரம் குறிக்கப்பட்ட ஸுன்னத்தான வழிமுறைகள்.என நாடப்படுவது நாளாந்தம் இரவு பகல் ஆகியவற்றுள் நேரம் குறிக்கப்பட்ட விதமாக செய்யப்படக்கூடிய ஸுன்னத்தான வழிமுறைகளாகும்.இதை நான் ஏழு நேரங்களுக்கு பிரித்துள்ளேன். அவைகளாவன.ஃபஜ்ருக்கு முன்னரானது, ஃபஜ்ர் நேரத்துக்குரியது,லுஹா நேரத்துக்குரியது,லுஹர்,அஸர்,மக்ரிப்,இஷா ஆகியவையாகும்.

## முதலாவது-பஃஜ்ர் நேரத்துக்கு முன்னரான -ஸுன்னத்துக்கள்-




இதுவே நித்திரையிலிருந்து விழித்தெழுந்ததை அடிப்படையாக கொள்ளும் போது அமையபெற்றுள்ள முதலாவது நேரமாகும்.**இந்நேரத்திலுள்ள ஸுன்னத்தான வழிமுறைகளை இரு பிரிவாக பிரித்து நோக்கலாம்.**

### முதல் பிரிவு.

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலை நித்திரையிலிருந்து எழுந்தது முதல் இந்நேரத்தில் மேற்கொள்ளும் ஸுன்னத்தான காரியங்கள் பின் வருமாறு:-

**1 முதலில் அவர்கள் மிஸ்வாக் செய்வார்கள்-அதாவது மிஸ்வாக்- எனும் குச்சியினால் பல்லை துளக்குவார்கள்.**

ஹுதைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவில் (உறங்கி) எழுந்ததும் பல் துலக்குவார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:255).முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுவதற்காக இரவில் எழும்போது பல் துலக்குவார்கள். (முஸ்லிம்,எண்:255).அதாவது மிஸ்வாக் குச்சியினால் பற்களை துலக்குதல் ஆகும்.



**2 நித்திரையிலிருந்து எழுந்தவுடன் கூற வேண்டிய திக்ரை மொழிவார்கள்.**

بِاسْمِكَ اللَّهُمَّ أَمُوتُ وَ أَحْيَا

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُورُ

நூல் புகாரியில் ஹுதைஃபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஒரு ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நித்திரை கொள்ளும் போது **"அல்லாஹும்ம பிஸ்மி(க்)க அமூ(த்)து வஅஹ்யா"** எனவும் மேலும் தூக்கத்திலிருந்து எழுந்தால் **"அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மா அமா(த்) தனா வ இலைஹின் னுஷூர்"** எனவும் கூறுவார்கள். (நூல் புகாரி,எண்:6324,முஸ்லிமில் அல் பர்ராஃ ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக வந்துள்ளது எண்:2711)

**3 அவர்களது முகத்திலிருந்து தூக்கத்தை துடைத்து விடுவார்கள்.**

**4 வானத்தை உற்று நோக்குவார்கள்.**

**5 பின்னர் அல் மாஇதா அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்து அல் குர்ஆன் வசனங்களை ஓதுவார்கள்.**

இந்த மூன்று ஸுன்னத்தான வழிகாட்டல்களும் இமாம் புகாரி, மற்றும் முஸ்லிம் ஆகியோர் பதிவு செய்துள்ள இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் தெளிவுபடுத்திகிறது.அதில் என்னுடைய சிறிய தாயார் மைமூனா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டில் நான் ஒரு நாள் இரவு தங்கினேன்.நான் தலையணையின் பக்கவாட்டில் சாய்ந்து தூங்கினேன். நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அவர்களின் மனைவியும் தூங்கினார்கள்.இரவின் பாதி வரை கொஞ்சம் முன் பின்னாக இருக்கலாம்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தூங்கினார்கள்.பின்னர் விழித்து தங்களின் கையால் முகத்தைத் தடவித் தூக்கக் கலக்கத்தைப் போக்கினார்கள்.பின்னர் ஆலு இம்ரான் அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்து வசனங்களை ஓதினார்கள்.பின்னர் எழுந்து சென்று தொங்கவிடப்பட்டிருந்த பழைய தோல் பையிலிருந்து (தண்ணீர்) எடுத்து உளூச் செய்தார்கள்.அவர்களின் உளூவை நல்ல முறையில் செய்தார்கள்.பின்னர் தொழுவதற்காக எழுந்தார்கள். (நூல்,புகாரி,எண்:183,முஸ்லிம் எண்:763).

முஸிலிமில் இலக்கம் 256 ல் வரக்கூடிய ஒரு ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் இரவின் இறுதிப் பகுதியில் தொழுகைக்காக எழுந்து வெளியேறிச்சென்று வானத்தை பார்த்து பின்னர் ஆலு இம்ரான் அத்தியாயத்தின் பின்வரும் வசனங்களை மூன்று தடவைகள் ஓதுவார்கள்.**"நிச்சயமாக வானம் பூமி படைக்கப்பட்டிருப் பதிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் புத்தியுடையவர்களுக்கு அத்தாட்சிகள் உள்ளன"**.(ஆலு இம்ரான்:190).

### 6 மூன்று தடவைகள் கையை கழுவிக்கொள்வார்கள்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கின்றார்கள்."**உங்களில் ஒருவர் விழித்தெழுந்தால் அவர் தாம் பாத்திரத்தில் தம் கையை நுழைப்பதற்கு முன்னர் மூன்று முறை கழுவிக் கொள்ளட்டும். ஏனென்றால்,(தூக்கத்தில்) தம் கை எங்கே இருந்தது என்பதை உங்களில் எவரும் அறியமாட்டார்**" என இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்).அவர்கள் கூறினார்கள்.(நூல்,புகாரி,எண்:162,முஸ்லிம்,எண்:278).

### 7 நாசிக்கு மூன்று முறை தண்ணீர் செலுத்தி அதை வெளியேற்றி விடுவார்கள்.

"**உங்களில் ஒருவர் உறங்கியெழுந்ததும் (தமது மூக்கிற்குள் நீர் செலுத்தி) மூன்று முறை மூக்குச் சிந்தட்டும். ஏனெனில், இரவில் ஷைத்தான் அவரது உள்மூக்கில் தங்குகிறான்**".(நூல் புகாரி,எண்,3295,முஸ்லிம் எண்,238).புகாரியில் இடம்பெறும் பிரிதொரு அறிவிப்பில் "**நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்து உளுச் செய்தால் மூன்று முறை (நீர் செலுத்தி) நன்கு மூக்கைச் சிந்தி (தூய்மைப்படுத்தி) க் கொள்ளுங்கள்**".(புகாரி எண்:3295).

### 8 பின்னர் வுழூஃ செய்வார்கள்.


முன் சென்ற இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழ நாடிய போது தொங்கிக்கொண்டிருந்த பாத்திரத்திலிருந்து வுழூஃ செய்தார்கள்.என வந்துள்ளது.

## வுழூவின் ஸுன்னத்துக்களாவன



வுழூஃ செய்யும் போதான ஸுன்னத்தான வழிமுறைகளை விரிவின்றி மிகச் சுறுக்கமாக இங்கு குறிப்பிடுகிறோம், ஏனெனில் இவை அறியப்பட்டவைகளாகவும். ஸுன்னத்தான வழிமுறைகளை பூரணப்படுத்தும் நோக்குடனுமாகும்.

### 1 மிஸ்வாக் செய்தல்.



அதாவது ஒருவர் வுழூஃ செய்ய ஆரம்பிக்கும் முன்னர் அல்லது வுழுவுக்காக வாய் கொப்பளிக்கும் முன்னர் இதை செய்தல் வேண்டும்.இதுவே இவ்வாறு மிஸ்வாக் செய்வது ஸுன்னத்தாகும் இரண்டாவது இடமாகும். முதலாவது இடம் முன்னர் குறிப்பிடப்பட்டது.ஏனவே ஒருவர் வுழூஃ செய்யும் போது மிஸ்வாக் செய்வது ஸுன்னத்தாகும்.அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்."**எனது சமூகத்தினருக்கு கஷ்டம் இல்லை என இருந்திருப்பின் நான் அவர்களுக்கு ஒவ்வொரு வுழூவின் போதும் மிஸ்வாக் செய்வதை கட்டாயப் படுத்தியிருப்பேன்.**" (நூல்,அஹ்மத்:9928.பின் குஸைமா அவர்கள் இதை ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்.1/73/140,அல் ஹாகிம் 1/245). மேலும் இமாம் புகாரி அவர்கள் இதை ஒரு குறிப்பாக உறுதிப்பட குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் குறிப்பிடும் போது இதை தலைப்பில் காய்ந்த மற்றும் ஈரமான குச்சியை கொண்டு நோன்பாளி மிஸ்வாக் செய்தல்)என குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் **"நாங்கள் (இரவில் உறங்கச் செல்வதற்கு முன்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்காக அவர்களது பல் துலக்கும் குச்சி,தண்ணீர் ஆகிய வற்றைத் தயாராக எடுத்து வைப்போம்.இரவில் அவர்களை அல்லாஹ் தான் நாடிய நேரத்தில் எழுப்புவான்.அவர்கள் எழுந்து பல்துலக்கி,அங்கத் தூய்மை (உளூ) செய்து விட்டு தொழுவார்கள்"**.(நூல் முஸ்லிம்.எண்:746).

## 2 பிஸ்மில்லாஹ் கூறல்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கும் ஹதீஸில் நபிகளாரை தொட்டும் வந்துள்ளது. **"எவர் வுழூவின் போது அல்லாஹ்வின் பெயரை கூறவில்லையோ அவருக்கு வுழூஃ இல்லை."** (நூல் அஹ்மத்,11371,அபூதாவுத், 101,இப்னு மாஜாஃ:397).

## 3 இரு கரங்களையும் மணிக்கட்டுவரை கழுவுதல்.



"உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்வதற்காகத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி அங்கத் தூய்மை செய்தார்கள். (முதலில்) தம்முடைய இரு முன் கைகளை மூன்று முறை கழுவினார்கள்..... "பின்னர் நான் செய்த இந்த அங்கத் தூய்மையை போன்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேன்.என கூறினார்கள்.(நூல்,புகாரி,எண்:226, முஸ்லிம்,எண்:164)

## 4 கால்களையும்,கைகளையும் கழுவும் போது வலதை முற்படுத்தல்.



'நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் செருப்பு அணிவதிலும், தலை முடி சீவுவதிலும், சுத்தம் செய்வதிலும், தங்களின் எல்லா விஷயங்களிலும் வலப்புறத்தைக் கொண்டு ஆரம்பிப்பதை விரும்பக்கூடியவர்களாக இருந்தார்கள்' என ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(நூல், புகாரி, எண்:168, முஸ்லிம், எண்:268)

## 5 வாய் கொப்பளித்தல்,நாசிக்கு தண்ணீர் செலுத்தல் ஆகியவைகளை கொண்டு ஆரம்பித்தல்.

'உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸின் பிரகாரம் அவர்கள் நபிகளாரின் வுழூவை வர்ணிக்கும் போது அதில் அவர்கள்.....

வாய்க் கொப்பளித்து,மூக்கிற்குத் தண்ணீர் செலுத்தித் சீந்தினார்கள்.பின்னர் தம் முகத்தை மூன்று முறை கழுவினார்கள்.(நூல்,புகாரி,எண்:199,நூல் முஸ்லிம். எண்:226).மேலும் வாய்கொப்பளித்தலையும்,நாசிக்கு நீர் செலுத்துவதையும் முகத்தை கழுவியதன் பின்னர் செய்தாலும் பரவாயில்லை அதுவும் ஆகுமான செயலாகும்.

## 6 நோன்பாளியல்லாதவர் வாய்கொப்பளித்தல்,நாசிக்கு தண்ணீர் செலுத்தல் ஆகியவற்றை பரிபூரணமாக அதிகப்படியான தண்ணீரை கொண்டு செய்தல்.



லகீத் பின் ஸபுரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"நீ வுழுவை பரிபூரணமாக செய்வீராக,விரல்களை குடைந்து கழுவிக் கொள்வீராக,மேலும் நீர் நோன்பாளியல்லாத போது நாசிக்கு நீர் செலுத்தும் போதும், வாய் கொப்பளிக்கும் போதும் அதிகப்படியான தண்ணீர் கொண்டு செய்வீராக"**.(நூல்,அஹ்மத்,எண்:17847,அபூ தாவுத்,எண்:142,இவ்வதீஸ் பற்றி இப்னு ஹஜர் அவர்கள் குறிப்பிடும் போது இது ஒரு ஸஹீஹான ஹதீஸ் ஆகும் என்கிறார்.நூல் அல் இஸாபா (9/15).மேலும் நாசிக்கு நீர் செலுத்தும் போதும்,வாய் கொப்பளிக்கும் போதும் அதிகப் படியான தண்ணீர் கொண்டு செய்வீராக.என்பது பரிபூரணமாக வுழூஃ செய்வீராக என்பதன் மூலமான சொற்றடொரின் மூலமாக பெறப்பட்டது ஆகும்).

## 7 நாசிக்கு தண்ணீர் செலுத்தும் போதும்,வாய் கொப்பளிக்கும் போதும் ஒருகையினால் செய்தல்



‘அப்துல்லாஹ் இப்னு ஜைத் (ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில்) அவர்கள் கூறுகின்றார்கள் ".........கையை நுழைத்து வெளியேற்றினார்கள். பின்பு ஒரே கையில் தண்ணீரை எடுத்து வாய் கொப்பளித்து மூக்கிற்கும் தண்ணீர் செலுத்தினார்.இவ்வாறே மூன்று முறை செய்தார்கள்". (நூல், புகாரி,எண்:192.முஸ்லிம்,எண்:235).

## 8 தலையை மஸ்ஹு செய்யும் போது ஸுன்னத்தான வழி முறையில் செய்தல்.

இரு கைகளையும் தண்ணீரில் நனைத்து தலையின் முற்பகுதியிலிருந்து பிற்பகுதி வரை கொண்டுசென்று மீண்டும் அதனை முற்பகுதிக்கு கொண்டு வரவேண்டும். பிறகு ஆட்காட்டி விரலால் காதின் உட்பகுதியையும்,பெருவிரலால் காதின் வெளிப்பகுதியையும் தடவ வேண்டும்-.பெண்களும் இவ்வாறே தலையை தண்ணீர்



கொண்டு தடவிக்கொள்வார்,எனினும் இதன் போது கழுத்துக்கு கீழ் உள்ள முடிகள் தடவப்பட மாட்டாது.

**இதை தெளிவுபடுத்தும் சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது.**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இரு கைகளையும் தலையின் முன்பாகத்தில் வைத்து பிடரி வரை தடவி மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே கைகளைக் கொண்டு வந்தார்கள்.இதை அறிவிப்பவர்:அப்துல்லாஹ் இப்னு ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு) (ஆதாரம்:புகாரி:185, முஸ்லிம்:235).

## 9 உறுப்புக்களை கழுவும் போது மும்மூன்று தடவைகள் கழுவுதல்.

முதற்தடவை கழுவுவது கட்டாயம் (வாஜிப்)ஆகும்.இரண்டாம் மூன்றாம் தடவைகள் கழுவுவது ஸுன்னத்தாகும்.மேலும் மூன்று தடவைகளுக்கு மேல் கழுவப்படவும் மாட்டாது.

இதை தெளிவுபடுத்தும் சான்றாக இருக்கிறது.புகாரியில் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஒரு ஹதீஸில் நபிகளார் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வுழூஃ செய்யும் போது ஒவ்வொரு தடவை -உறுப்புக்களை- கழுவினார்கள். (புகாரி,எண்:157),மேலும் புகாரியல் அப்துல்லாஹ் பின் ஸைத் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "இவ்விரண்டு தடவைகள் கழுவினார்கள்".(புகாரி,எண்:158),எனவும்,புகாரி முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் உஸ்மான ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "மும்மூன்று தடவைகள் கழுவினார்கள்".எனவும் அறிவிப்புக்கள் வந்துள்ளன.எனவே இதில் மிகச்சிறப்பானது மாறி மாறி செயலாற்றுவது.இதற்கேற்ப சில போது ஒவ்வொரு தடவையும்,இன்னும் சில போது இரு தடவைகளும் மற்றும் சில போது மூன்று தடவைகள் எனவும் சில சந்தர்ப்பங்களில் உறுப்புக்களில் எண்ணிக்கையை மாற்றுதல் உதாணமாக முகத்தை மூன்று தடவையும்,கைகளை இரு தடவையும், கால்களை ஒரு தடவையும் கழுவிக்கொள்ளல்.இது அப்துல்லாஹ் பின் ஸைத் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக மற்றொரு அறிவிப்பிலும் இடம் பெற்றுள்ளது.(பார்க்க,ஸாதுல் மஆத்,(1/192).இருந்த போதிலும் மிகப்பரி பூரணமானதும் அதிகம் நபிகளார் செய்து வந்தமையும் மும்மூன்று தடவைகள் கழுவுதல் ஆகும்.இதுவே நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வழிகாட்டலும் ஆகும்.

## 10 வுழூஃ செய்த பின்னராக ஓதப்படும் துஆ.

أَشْهَدُ أَنَّ لاَ إِلَهَ إِلاَّ اللهُ ، وَأَنَّ مُحَمَّداً عَبْدُ اللهِ وَرَسُولُهُ


உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள் **அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்: "உங்களில்**

**ஒருவர் முழுமையான முறையில் அங்கத் தூய்மை செய்துவிட்டு,அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் அப்துல்லாஹி வரசூலுஹு என்று கூறினால்,சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் அவருக்காகத் திறக்கப்படுகின்றன.அவற்றில் தாம் நாடிய வாசலில் அவர் நுழைந்து கொள்ளலாம்".**(நூல்,முஸ்லிம், எண்:234).

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ، أَشْهَدُ أَنْ لا إِلَهَ إِلاَّ أَنْتَ، أَسْتَغْفِرُكَ وأَتُوبُ إِلَيْكَ

அல்லது:மற்றுமொறு அறிவிப்பில் அபீ ஸஈத் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக வந்துள்ள ஹதீஸின் படி **"எவர் பரிபூரணமாக வுழூஃ செய்து பின்னர் ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லா அன்த, அஸ்தக்ஃபிருக வஅதூபு இலைக என ஓதினால் அது முத்திரையிடப்பட்டு விடும்,பின்னர் அது அர்ஷின் கீழ் உயர்த்தப்பட்டு மறுமை நாள் வரை அதன் முத்திரை உடைக்கப்பட மாட்டாது".** (நூல்,அந்நஸாஈ -ஃபீ அமலில்யவ்மி வல்லைல்,எனும் நூலில்,பக்கம்,147,அல் ஹாகிம் 1/752,இதன் அறிவிப்பாளர் தொடர் வரிசையை ஸஹீஹ் என இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் அவர்களின் நதாஇஜுல் அஃப்கார் எனும் நூலில் 1/246 ல் குறிப்பிட்டுள்ளார்கள்.இதில் அவர் தெளிவுபடுத்தும் போது இது நபிகளார் வரையிலுமான தொடர் இல்லாத போதிலும் இதன் அடிப்படை சட்டம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வரையிலான தொடர்ப்பை கொண்டது, ஏனெனில் இதில் சொந்தக்கருத்துக்கான வாய்ப்புகள் ஏதும் கிடையாது.





**இரண்டாம் பகுதி:** இரவுத்தொழுகையும், வித்ருத்தொழுகையும், இது தொடர்ப்பான நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பல்வேறு ஸுன்னத்தான வழிமுறைகளும்.

## 1 வித்ர் தொழுகையை இரவில் அதன் மிகச்சிறப்பான நேரத்தில் தொழுவதுதான் ஸுன்னத்தான வழிமுறையாகும்.

### இரவுத்தொழுகைக்கான மிகச்சிறப்பான சிறந்த நேரம் என வினவப்பட்டால்.?

இதற்கான பதில் வித்ர் தொழுகையுடைய நேரம் இஷாத் தொழுகை முடிவிலிருந்து ஆரம்பித்து ஃபஜ்ர் உதயம் வரையிலாகும்.என்பது அறியப்பட்ட ஒன்று ஆகவே வித்ர் தொழுகையின் நேரம் இஷாவுக்கும் ஃபஜ்ருக்கும் இடைபட்ட நேரமாகும்.

**இதற்கான சான்றாக பின்வருவது சான்றாகும்.**

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இஷா முடிவுற்றதிலிருந்து ஃபஜ்ர் வரையிலான நேரத்தில் பதினொரு ரக்அத்துக்களை தொழுவார்கள்.அதில் இவ்விரண்டு ரக்அத்துக்களுக்கும் இடையில் ஸலாம் கொடுப்பார்கள்.மேலும் வித்ராக ஒரு ரக்அத்தை தொழுவார்கள்.(நூல் முஸ்லிம்,எண்:2031,முஸ்லிம்,எண்:736)

### இரவுத்தொழுகைக்கு மிகச்சிறப்பான நேரம் இரவின் மூன்றாவது இறுதிப்பகுதியாகும்.

இதற்கான சான்றாக அப்துல்லாஹ் பின் அம்ர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்."**நிச்சயமாக அல்லாஹுவுக்கு மிக விருப்பமான நோன்பு தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நோற்ற நோன்பாகும்.மேலும் தொழுகையில் அல்லாஹுவுக்கு மிக விருப்பமான தொழுகை தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தொழுகையாகும். அவர்கள் இரவின் அரைப்பகுதி நித்திரை கொள்வார்கள்.மூன்றின் ஒரு பகுதியில் நின்று வணங்குவார்கள்.மேலும் ஆறில் ஒரு பகுதியில் மீண்டும் தூங்குவார்கள்.அவர்கள் ஒருநாள் விட்டு மறுநாள் நோன்பு வைப்பவராக இருந்தார்கள்".**(நூல்,புகாரி,எண்:3420.முஸ்லிம், எண்:1159).

### இந்த ஸுன்னத்தான நபி வழிமுறையை ஒருவர் செயற்படுத்த நாடினால் அவர் எவ்வாறு அவரின் இரவை பிரித்துக் கொள்வார்?.

சூரியன் மறைந்தது முதல் ஃஜ்ர் வரையிலான நேரத்தை கணிப்பிட்டு கொள்வார். பின்னர் அதை ஆறு பங்குகளாக பிரித்து முதல் மூன்றுபங்குகளும் இரவின் முதல் பகுதியாகும். இதன் பின்னர் அவர் எழுந்து தொழுவார்,அதாவது நான்காவது பகுதியில் எழுந்து தொழுவார் பின்னர் ஆறின் இறுதிப் பங்குகளான ஆறாவது பங்கில் மீண்டும் நித்திரை கொள்வார்.இதனால் தான் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் குறிப்பிடும் போது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹரை அடையும் போது என்னிடத்தில் அவர்கள் தூங்கிய நிலையில் காணப் பட்டார்கள்.(நூல்:புகாரி,எண்:1133,முஸ்லிம்,எண்:742)

அப்தில்லாஹ் பின் அம்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்க கூடிய முன்னைய ஹதீஸின் அடிப்படையிலுள்ள இவ்வழிமுறையின் படி ஒருவர் இரவுத் தொழுகையின் மிகச் சிறப்பான நேரத்தில் தொழுதமைக்கான கூலியை அடையப் பெறுவார்.

### சுருக்கமாக கூறின் இரவுத்தொழுகைக்கான மிகச்சிறப்பான நேரத்தின் படித்தரங்கள் மூன்றாகும்.அவையாவன:

**முதலாவது படித்தரம்-**முன் கடந்து சென்றதை போன்று இரவின் முதல் பகுதியில் தூங்கி பின்னர் நடுப்பகுதியில் எழுந்து தொழுது விட்டு ஆறின் இறுதிப் பகுதியில் மீண்டும் நித்தரை கொள்வது.

இதற்கு சற்று முன்னர் குறிப்பிடப்பட்ட அம்ர் பின்அல் ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் ஆதாரமாக இருக்கின்றது.

**இரண்டாவது படித்தரம்-** இரவின் மூன்றின் இறுதிப் பகுதியில் எழுந்து தொழுதலாகும்.

**இதற்கான சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:"**உயர்வும்,வளமும் மிக்க நம் இறைவன் ஒவ்வொரு இரவிலும்,இரவின் இறுதி மூன்றிலொரு பகுதி இருக்கும் போது கீழ் வானிற்கு இறங்கி வந்து, "என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அவரது பிரார்த்த னையை நான் ஏற்கிறேன்.என்னிடம் யாரேனும் கேட்டால் அவருக்கு நான் கொடுக்கிறேன்.என்னிடம் யாரேனும் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்" என்று கூறுகிறான்.**இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் அறிவிக்கிறார்கள்.(நூல்,புகாரி,எண்:1145, முஸ்லிம்,எண்:758.).மேலும் பின்னர் வரக்கூடிய ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸும் இதற்கான சான்றாக அமைகிறது.

ஒருவர் அவரால் இரவின் இறுதிப் பகுதியில் எழுந்து தொழ முடியாது என உணரும் போது அவர் இரவின் ஆரம்ப பகுதியில் அல்லது இரவில் அவருக்கு மிக வசதியான நேரத்தில் இத்தொழுகையை மேற்கொள்வார்,இது மூன்றாவது படித்தரமாகவும் காணப்படுகிறது.

**மூன்றாவது படித்தரம்:**இரவின் முதற்பகுதியில் அல்லது இரவில் அவருக்கு மிக வசதியான நேரத்தில் தொழுதல் ஆகும்.

**இதை பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:"**இரவின் இறுயில் எழ முடியாது என அஞ்சுபவர் இரவின் ஆரம்பப் பகுதியிலேயே வித்ர் தொழுது விடட்டும்!இரவின் இறுதியில் எழ முடியும் என நம்புகின்றவர் இரவின் இறுதியிலேயே வித்ர் தொழட்டும். ஏனெனில்,இரவின் இறுதி நேரத்தில் தொழும் போது (வானவர்கள்) பங்கேற்கின்றனர்.இதுவே சிறந்ததாகும்.**"இதை ஜாபிர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.(நூல்,முஸ்லிம்:755)

மேலும் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபித்தோழர் அபூ தர்தா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு செய்த நல்லுபதேசமாகவும் இருக்கிறது. இதை இமாம் நஸாஈ அவர்கள் தமது அஸ்ஸுனன் அல் குப்ராவில் ஹதீஸ் இலக்கம் 2712 பதிவு செய்வதுடன்,இமாம் அபூ தாவுத் இலக்கம் 1433லும் இமாம் அல்பானியவர்கள் தமது அஸ்ஸஹீஹ் அபூதாவத் (5/177)ல் இதை ஸஹீஹ் என குறிப்பிட்டிருக்கின்றார்கள்.மேலும் இமாம் முஸ்லிம் அவர்கள் தமது நூலில் (737) அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக பதிவு செய்துள்ளார்கள்.இவர்கள் அனைவரும் எனக்கு எனது நேசர் மூன்று அம்சங்களை கொண்டு நல்லுபதேசம் செய்தார்கள் என்றே ஆரம்பித்து "**அதில் நித்திரைக்கு முன் வித்ர் தொழுகையை தொழுவது என குறிப்பிட்டுள்ளனர்.**"

### 2 மேலும் இதில் பதினொரு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தான வழிமுறையாகும்.

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸுக்கு ஏற்ப இதுவே மிகப்பரிபூரணமான எண்ணிக்கையாகும்.அவர்கள் அறிவிக்கும்

அவ்வதீஸில் "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழானிலும் ரமழான் அல்லாத காலத்திலும் இரவுத்தொழுகையை பதினொரு ரக்அத்துக்களுக்கும் அதிகமாக தொழவில்லை."(நூல்,புகாரி,எண்:1147),(முஸ்லிம்,எண்:738).

மேலும் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஊடாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிமூன்று ரக்அத்துக்கள் தொழுதார்கள் என்றும் இமாம் முஸ்லிம் அவர்களது நூலில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு எண்ணிக்கையிலான அறிவிப்புக்களிலும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது வித்ர் தொழுகையில் பல்வேறு எண்ணிக்கையை கொண்டதாக தொழுதார்கள்.எனினும் அவற்றுள் பதினொரு ரக்அத்துக்களை அதிகம் கடைபிடித்தார்கள்.எனவே தான் இவ்விரு ஹதீஸ்களின் அடிப்படையிலும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிலபோது பதினொரு ரக்அத்துக்களையும் சிலபோது பதிமூன்று ரக்அத்துக்களையும் தொழுது வந்துள்ளார்கள்.

### 3 இரவுத் தொழுகையை மிக குறுகியதாகவும் மிகச்சுருக்க மாகவும் கொண்டமைந்த இரு ரக்அத்துக்களை கொண்டு ஆரம்பிப்பது ஸுன்னத்தான வழிமுறையாகும்.

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவு நித்திரையிலிருந்து எழுந்தால் மிகச்சுறுக்கமாக இரண்டு ரக்அத்துக்கள் தொழுவதை கொண்டு அவர்களது இரவுத் தொழுகையை ஆரம்பிப்பார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:(767)

### 4 இரவுத்தொழுகையில் அதற்கென குறிப்பாக வந்துள்ள ஆரம்ப துஆக்களை -துஆஉல் இஸ்திஃப்தாஹ்-களை ஓதுவதும் ஸுன்னத்தான வழிமுறையாகும்.

1 اللَّهُمَّ رَبَّ جَبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ السَّمَاوَاتِ وَالأَرْضِ، عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ، أَنْتَ تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ، اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவுத் தொழுகையைத் துவக்கியதும் **"அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல வ மீக்காயீல வ இஸ்ராஃபீல , ஃபாத்திரஸ் ஸமாவாத்தி வல்அர்ளி,ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாதத்தி,அன்த தஹ்குமு பய்ன இபாதிக ஃபீமா கானூ ஃபீஹி யக்தலிஃபூன்.**



இஹ்தினீ லிமக்துலிஃப ஃபீஹி மினல் ஹக்கி பி இத்னிக,இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா ஸிராதிம் முஸ்தகீம்" என்று கூறுவார்கள்" (முஸ்லிம்,எண்:770).

2 اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ نُورُ السَّمَوَاتِ وَالْأَرْضِ، وَلَكَ الْحَمْدُ أَنْتَ قَيِّمُ السَّمَوَاتِ وَالْأَرْضِ، وَلَكَ الْحَمْدُ أَنْتَ رَبُّ السَّمَوَاتِ وَالْأَرْضِ وَمَنْ فِيهِنَّ، أَنْتَ الحَقُّ، وَوَعْدُكَ الحَقُّ، وَقَوْلُكَ الحَقُّ، وَلِقَاؤُكَ الحَقُّ، وَالجَنَّةُ حَقٌّ، وَالنَّارُ حَقٌّ، وَالنَّبِيُّونَ حَقٌّ، وَالسَّاعَةُ حَقٌّ، اللَّهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ، وَإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، وَإِلَيْكَ حَاكَمْتُ، فَاغْفِرْ لِي مَا قَدَّمْتُ، وَمَا أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ أَنْتَ إِلَهِي لَا إِلَهَ إِلَّا أَنْتَ

இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நடு இரவில் (தஹஜ்ஜுத்) தொழுவதற்காக எழுந்ததும் (பின்வருமாறு) பிரார்த்திப்பார்கள்: **"அல்லாஹும்ம,லக்கல் ஹம்து,அன்த்த நூருஸ் ஸமாவாத்தி வல்அர்ள்.வ லக்கல் ஹம்து,அன்த்த கய்யிமுஸ் ஸமாவாத்தி வல்அர்ள்.வ லக்கல் ஹம்து, அன்த்த ரப்புஸ் ஸமாவாத்தி வல்அர்ளி வமன் ஃபீஹின்ன.அன்த்தல் ஹக்கு.வ வஅதுக்கல் ஹக்கு.வ கவ்லுக்கல் ஹக்கு.வ லிகாஉக ஹக்குன். வல்ஜன்ன த்துக ஹக்குன்.வந்நாரு ஹக்குன்.வஸ்ஸாஅத்து ஹக்குன். அல்லாஹும்ம லக அஸ்லம்து,வ பிக ஆமன்து, வ அலைக தவக்கல்து, வ இலைக அனப்து,வ பிக காஸம்து, வ இலைக ஹாக்கம்து,ஃபஃக்ஃபிர்லீ மா கத்தம்து வமா அக்கர்து வ அஸ்ரர்து வ அஃலன்து.அன்த இலாஹீ. லா இலாஹ இல்லா அன்த.**(நூல்,புகாரி,எண்:7499,முஸ்லிம்,எண்:768)

**5 மேலும் இரவுத்தொழுகையின் கியாம், -நிற்றல்-ருகூஃ, ஸுஜூத், ஆகியவற்றுடன் சொல், செயல் சார் அனைத்து வாஜிப்களையும்,பர்ளுகளையும் ருகுன்களையும் நீட்டித் தொழல்.**

**6 இத்தொழுகையில் உள்ள ஓதல்களின் போது நபிகளாரின் வழி காட்டலின் பிரகாரம் ஓதுவதும் ஸுன்னத்தான வழி முறையாகும். அவற்றுள் சில பின்வருமாறு.**

1 அதாவது ஒரே முறையில் தொடராக ஓதாது நிறுத்தி நிறுத்தி ஓதுவது.

2 ஒவ்வொரு வசனம் வசனமாக ஓதுவது,அதாவது இரண்டு மூன்று வசனங்களை ஒரே தடவையில் நிறுத்தாமல் தொடராக ஓதாமல் ஒவ்வொரு வசனத்தின் போதும் நிறுத்தி ஓதுவது.

3 அல்லாஹ்வை துதிக்கும் வசனத்தின் போது அவனை துதித்தும்,பிரார்த்தனைகள் கேட்கும் வசனத்தின் போது பிரார்த்திப்பதும்,பாதுகாப்பு தேடும் விதமாக வந்துள்ள வசனங்களின் போது பாதுகாப்பு தேடலும்.


**முன்சென்றவைகளுக்கான சான்றாக இது அமைகிறது.**

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيمِ – سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ – سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

ஹுதைஃபா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் ஓர் இரவில்(தஹஜ்ஜுத்) தொழுதேன்.அதில் அவர்கள் "அல்பகரா"எனும் (இரண்டாவது) அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தார்கள்.நான்"அவர்கள் நூறு வசனம் முடிந்ததும் ருகூஉச் செய்து விடுவார்கள்" என எண்ணினேன்.ஆனால், அவர்கள் (நூறு வசனம் முடிந்த பின்னும்) தொடர்ந்து ஓதினார்கள்.நான் "அ(ந்த அத்தியாயத்)தை (இரண்டாகப் பிரித்து ஓதி இரண்டாவது) ரக்அத்தில் முடித்து விடுவார்கள்" என எண்ணினேன்.ஆனால் (அதை முதல் ரக்அத்திலேயே) தொடர்ந்து ஓதினார்கள்.நான் "அவர்கள் அந்த அத்தியாயம் முடிந்ததும் ருகூஉச் செய்துவிடுவார்கள்" என எண்ணினேன். அவர்கள் (அந்த அத்தியாயம் முடிந்ததும்) "அந்நிசா" எனும் (2ஆவது) அத்தியாயத்தை ஆரம்பித்து ஓதினார்கள்;பிறகு ஆலு இம்ரான் எனும் (3ஆவது)அத்தியாயத்தை ஆரம்பித்து நிறுத்தி நிதானமாக ஓதினார்கள்.அவற்றில் இறைவனைத் துதிப்பது பற்றிக் கூறும் வசனத்தை ஓதிச் செல்லும் போது (ஓதுவதை நிறுத்திவிட்டு),(சுப்ஹானல்லாஹ் - அல்லாஹ் தூயவன் என) இறைவனைத் துதித்தார்கள்; (இறையருளை) வேண்டுவது பற்றிக்கூறும் வசனத்தைக் கடந்து செல்லும்போது (ஓதுவதை நிறுத்திவிட்டு),(இறையருளை) வேண்டினார்கள். (இறை தண்டனையிலிருந்து) பாதுகாப்புக் கோருவது பற்றிக் கூறும் வசனத்தை ஓதிச் செல்லும் போது (ஓதுவதை நிறுத்தி விட்டு,இறைவனிடம்) பாதுகாப்புக் கோரினார்கள்.பிறகு ருகூஉச் செய்தார்கள்.அவர்கள் ருகூவில் "**சுப்ஹான ரப்பியல் அழீம்**" (மகத்துவ மிக்க என் இறைவன் தூயவன்) என்று கூறலானார்கள்.அவர்கள் நிலையில் நின்ற அளவுக்கு ருகூஉச் செய்தார்கள்.பின்னர் (ருகூவிலிருந்து நிமிரும்போது) "**சமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்**" (அல்லாஹ் தன்னைப் புகழ்வோரின் புகழுரையை ஏற்கிறான்) என்று கூறி விட்டுக் கிட்டத்தட்ட ருகூஉச் செய்த அளவுக்கு நீண்ட நேரம் நிலையில் நின்றிருந்தார்கள்.பிறகு சஜ்தாச் செய்தார்கள்.அதில் "**சுப்ஹான ரப்பியல் அஃலா**" (மிக்க மேலான என் இறைவன் தூயவன்) என்று கூறினார்கள்.அவர்கள் நிலையில் நின்றிருந்த அளவுக்கு சஜ்தாச் செய்தார்கள்.(நூல்.முஸ்லிம்,எண்:772)

இமாம் அஹ்மத் அவர்கள் அவர்களது முஸ்னத் கிரந்தத்தில் அன்னை உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை தொட்டும் ஒரு ஹதீஸில் அன்னை உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடத்தில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் -இரவு நேரத்தொழுகையின் போதான- ஓதல் எவ்வாறு காணப்பட்டது என வினவப்பட்டது.அதற்கு அவர்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **{பிஸமில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்} {அல் ஹம்து லில்லஹி ரப்பில் ஆலமீன்}.{அர்ரஹ்மானிர்ரஹீம்} {மாலிகியவ் மித்தீன்}** என ஒவ்வொரு வசனமாக நிறுத்தி நிறுத்தி ஓதுவார்கள். என குறிப்பிட்டார்கள்,(நூல்,அஹ்மத், எண்:26583,அத்தாரகுத்னீ,எண்118,இதிலுள்ள அறிவிப்பாளர் வரிசை சீரானது,ஸஹீஹ் ஆனது,இமாம் நவவி அவர்கள் இதை தமது மஜ்மூஃ ல் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள். (3/333).

### 7 இவ்விரண்டு ரக்அத்துக்களுக்கும் மத்தியில் ஸலாம் கொடுப்பது ஸுன்னத்தான வழிமுறையாகும்.



அப்துல்லாஹ் பின் உமர் பின் அல்கத்தாப் (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் கூறியதாவது:ஒரு மனிதர் எழுந்து,"அல்லாஹ்வின் தூதரே! இரவுத் தொழுகை எப்படித் தொழ வேண்டும்?" எனக் கேட்டார்.அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "இரவுத் தொழுகை இரண்டிரண்டு ரக்அத்களாகும். சுப்ஹு (நேரம் வந்து விட்டது) பற்றி நீங்கள் அஞ்சினால் ஒரு ரக்அத் (வித்ர்) தொழுது கொள்ளுங்கள்!"என கூறினார்கள்.(நூல்,புகாரி,எண் : 990,முஸ்லிம்,எண்:749).

இதில் வந்துள்ள (மஸ்னா,மஸ்னா) -இரண்டு இரண்டு-என்பதன் கருத்தாவது நான்கு ரக்அத்துக்களாக மொத்தமாக தொழாது.ஒவ்வொரு இரண்டு ரக்அத்துக்களுக்கு மத்தியிலும் ஸலாம கொடுத்தலாகும்.

### 8 இறுதி மூன்று ரக்அத்துக்களில் அதற்கென குறிப்பாக வந்துள்ள அத்தியாங்களை ஓதுவது ஸுன்னத்தான வழி முறையாகும்.


முதல் ரக்அத்தில் அத்தியாயம்**{ஸப்பி இஸ்ம ரப்பிகல் அஃலாவும்}**, இரண்டாவதில் **{குல் யா அய்யுஹல் காஃபிரூனும்}**, மூன்றாவதில் **{குல் ஹுவல்லாஹு அஹதும்}** ஓதுவது.

**இதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாமாக அமைகிறது.**

ஒரு ஹதீஸில் உபை பின் கஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வித்ர் தொழுகையை ஸப்பி இஸ்ம ரப்பிகல் அஃலாவும்,குல் யா அய்யுஹல் காஃபிரூனும்,குல் ஹுவல் லாஹு அஹதும் ஓதி தொழுவார்கள்.(நூல் அபூதாவுத்,எண் 1423,அந்நஸாஈ,எண்:1733,இப்னு மாஜாஃ, எண்:1171).இமாம் நவவி அவர்கள் தமது -அல் குலாஸா- எனும் நூலில் (1/556) ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அல்பானி அவர்களும் ஸஹீஹ் அந்நஸாஈயில் (1/273) இவ்வாறே குறிப்பிட்டுள்ளார்கள்.

### 9 சில வேளைகளில் வித்ர் தொழுகையில் குனூத் ஓதுவதும் ஸுன்னத்தான வழிமுறையாகும்.

இதனால் நாடப்படுவது வித்ரின் இறுதி ரக்அத்தில் அதாவது ஸூரதுல் இக்லாஸ் ஓதப்படும் மூன்றாவது ரக்அத்தில் பிரார்த்தனை செய்வதாகும்.



இந்த குனூத் வித்ர் தொழுகையில் சிலசமயங்களில் ஓதுவதும் இன்னும் சில வேளைகளில் விட்டு விடுவதும் ஸுன்னத்தான வழிமுறையாகும்.இது சில நபித்தோழர்களினால் செயற்படுத்தப் பட்டமைக்கான சான்றுகளும் உள்ளன.இதுவே ஷைக் பின் தைமியா ரஹ்மதுல்லாஹ் அவர்களது தெரிவும் ஆகும். எனினும் இதை செயற்படுத்துவதை விட விட்டு விடுவது அதிகமாக இருத்தல் மிக ஏற்றமானது.

### ◆ வினா:குனூதின் போது அவரது இரு கரங்களையும் உயர்த்த வேண்டுமா....?

**மிகச்சரியானது:**அவர் குனூத்தின் போது கையை உயர்த்துவார்.இதைனையே அதிகமான மார்க்க அறிஞர்களினதும் கருத்தாகும்.மேலும் இது தொடர்ப்பாக இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக பைஹகீ கிரந்தத்தில் ஸஹீஹான பதிவுகள் வந்துள்ளன.

இமாம் பைஹகீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது நபித்தோழர்களில் பலரும் அவர்களின் குனூத்தின் போது கைகளை உயர்த்தியுள்ளனர். (பாரக்க:அஸ்ஸுனன் அல் குப்ரா.(2/211).

### ◆ வினா:ஒருவர் அவரின் வித்ரில் ஓதப்படும் குனூத்தை எதை கொண்டு ஆரம்பம் செய்வார்.....?

**மிகச்சரியான கருத்தாவது-அல்லாஹ் மிக அறிந்தவன்-**அவர் அல்லாஹ்வை புகழ்ந்து அவனை துதித்து ஆரம்பித்து, பின்னர் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்லியதன் பின்னர் அவர் -ஏனைய- பிரார்த்தனைகளை செய்வார்.ஏனெனில் இதுவே பிராரத்தனை அங்கிகரிப்பதற்கு மிக ஏற்றமான வழிமுறை யாகும்

இதற்கு சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது.ஃபுதாலத் பின் உபைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிகளார் மீது ஸலவாத்து சொல்லாது பிரார்த்தனையில் ஈடுபட்ட மனிதரை பார்த்து இவர் அவசரப்பட்டு கேட்டு விட்டார்.என அவருக்கும் ஏனையவர்களுக்கும் இவ்வாறு கூறினார்."ஒருவர் தொழுகையில் துஆ கேட்டால் அவர் முதலில் அல்லாஹ்வை புகழ்து துதிக்கட்டும் பின்னர் நபியின் மீது ஸலவாத்து சொல்லிய பின் தனக்கு நாடியவ தேவையானவற்றை கேட்டுக்கொள்ளட்டும்"(நூல்:திர்மிதி,எண்: 3477,(இவ்வதீஸ் ஒரு ஸஹீஹ்,ஹஸன் தரத்தை உடையது என குறிப்பிட்டுள்ளார்கள்).

இமாம் இப்னுல் கையிம் ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது ஒருவர் பிரார்த்தனை -துஆ- செய்யும் போது விரும்பத்தக்க முஸ்தஹப்பான வழிமுறை,முதலில் அவரின் தேவைகளுக்கு முன்னராக அல்லாஹ்வை புகழ்து அவனை துதித்து பின்னர் அவரின் தேவைகளை கேட்பதாகும்.இதுவே ஃபுதாலத் பின் உபைத் ரலியல்லாஹு அன்ஹுவினுடைய ஹதீஸில் இடம் பெற்றுள்ள -ஸுன்னத்தான-வழிமுறையாகும். (பார்க்க: அல் வாபிலுஸ்ஸபீல்.பக்கம்-110).

### வினா:குனூத்தின் பிராரத்தனைகள் முடிந்தவுடன் அவரின் இரு கைகளால் முகத்தை தடவிக்கொள்ள வேண்டுமா...?


இதற்கான மிகச்சரியான தீர்ப்பு அவர் தமது கரங்களினால் முகத்தை தடவிக்கொள்ள மாட்டார்,ஏனெனில் இவ்வாறு தடவிக் கொள்வதற்கான சரியான ஆதாரங்கள் சான்றுகள் ஏதும் கிடையாது.

இமாம் மாலிக் ரஹ்மஹுல்லாஹ் அவர்களிடத்தில் பிரார்த்தனையின் பின் தமது இரு கரங்களால் முகத்தை தடவிக் கொள்ளும் ஒருவர் பற்றி வினவப்பட்ட போது அதை அவர்கள் நிராகரித்து,பின்னர் நான் அதை பற்றி எதையும் அறியவில்லை என கூறினார்கள்.(பார்க்க.இமாம் அல்மர்வஸி அவர்களின் கிதாபுல் வித்ர்,பக்கம்-236).

ஷைகுல் இஸ்லாம் -ரஹ்மஹுல்லாஹ்- அவர்கள் குறிப்பிடும் போது - துஆவுக்கு பின்னர்-கையிகளினால் முகத்தை தடவிக் கொள்ளல் தொடர்ப்பாக ஓரிரு ஹதீஸ்கள் தான் வந்துள்ளன.இருப்பினும் அவை ஆதாரமாகவும் கொள்ளவும் முடியாதுள்ளது. (பார்க்க.அல் ஃபதாவா,(22/519).

### 10 இரவின் மூன்றாம் பகுதியின் இறுதியில் துஆக் கேட்டல்-பிரார்த்தனை செய்தல்.

இரவின் மூன்றின் இறுதிப்பகுதியில் மிக முக்கியமான ஏற்றமான பிராதான ஸுன்னத்தான வழி முறைகளில் ஒன்று துஆப் பிரார்த்தனை செய்வது.ஒருவர் அவரின் குனூத்தின் போது பிராரத்தனை செய்தாலும் அது போதுமானது.அவ்வாறு இல்லாத போது இந்நேரத்தில் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் இந்நேரம் துஆக்கள் பிராரத்தனைகள் அங்கிகரிக்கப்படட மிகவும் ஏற்புடையாதாகும். மேலும் அல்லாஹ்வின் கண்ணியத்துக்கும் மகத்துவத்துக்கும் பொறுத்தமான அமைப்பில் பூமியின் கீழ் வானத்துக்கு இறங்குகின்றான்.இதை பற்றிய ஹதீஸ் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக புகாரி முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"கண்ணியத்துக்கும் மக்த்துவத்துக்கும் உரிய**



**ஏக இறைவன் ஒவ்வொரு இரவின் இறுதிப்பகுதியிலும் கீழ் வானத்துக்கு இறங்கி கூறிகின்றான் "என்னிடத்தில் எவர் என்னை அழைக்கின்றார் நான் விடையளிக்கின்றேன்,மேலும் என்னிடத்தில் ஏதும் கேட்கின்றவர் இருக்கின்றாரா நான் அவருக்கு கேட்டதை கொடுக்கின்றேன்.இன்னும் எவர் பாவமன்னிப்பு வேண்டுகின்றார்,நான் அவருக்கு பாவமன்னிப்பு அளிக்கின்றேன்"**என கூறுவான்.(நூல்,புகாரி,எண்:1145, முஸ்லிம்,எண்:758).

### 11 ஒருவர் வித்ர் தொழுகையை தொழுது முடித்த பின்னர் மூன்று தடவைகள் (ஸுப்ஹானல் மிலிகில் குத்தூஸ்) என கூறல்,இதில் மூன்றாவது முறை சப்தத்தை உயர்த்தி சொல்வதும் நபிகளாரின் ஸுன்னத்தான வழி முறையாகும்.

இதை தெளிவுபடுத்தும் சான்றாக பின் வரும் ஹதீஸ் அமைகிறது.

ஒரு ஹதீஸில் உபை பின் கஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்,நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வித்ர் தொழுகையை **{ஸப்பி இஸ்ம ரப்பிகல் அஃலாவும்},{குல் யா அய்யுஹல் காஃபிரூனும்},{குல் ஹுவல்லாஹு அஹதும்} ஓதி தொழுவார்கள்.அதில் ஸலாம் கொடுத்தவுடன்"ஸுப்ஹானல் மிலிகில் குத்தூஸ்")** என மூன்று தடவைகள் கூறுவார்கள்.(நூல்,அந்நஸாஈ,எண்:1733).முன்னர் கூறியது போன்று இவ்வதீஸை இமாம்களான நவவி,அல்பானி ஆகியோர் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளனர்.மேலும் அப்துர் ரஹ்மான் பின் அபஸி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வரும் மற்றொரு ஹதீஸில் அவர்கள் மூன்றாவது தடவை **"ஸுப்ஹானல் மலிகில் குத்தூஸ்"** எனும் போது அவரது சப்தத்தை உயர்த்துவார்கள் எனவும் வந்துள்ளது.(நூல் அஹ்மத், எண்:15354,அந்நஸாஈ,எண்:1734,மேலும் இமாம் அல்பானி அவர்கள் தமது தஹ்கீகு மிஷ்காதுல் மஸாபீஹ் இல் (1/273) ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்).

### 12 தமது குடும்பத்தினரை இரவுத்தொழுகைக்காக நித்திரையிலிருந்து எழுப்புவது ஒரு ஸுன்னத்தான வழிமுறையாகும்.

கணவன் மனைவியையும்,ஏனைய அங்கத்தவர்களையும் இரவுத் தொழுகைக்காக எழுப்பி விடுவதும்,மனைவியும் இவ்வாறு எழுப்பி விடுவதும் ஸுன்னத்தாகும்.மேலும் இது ஒருவருக்கொருவர் நல்லவற்றின் பால் உதவி ஒத்தாசை புரிவதாக காணப்படுகிறது.

இதை பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவில் (தஹஜ்ஜுத்) தொழுது கொண்டிருக்கும் போது நான் அவர்களுக்கு முன்னால் குறுக்கே படுத்துக் கொண்டிருப்பேன்.அவர்கள் (தஹஜ்ஜுத் தொழுகையை முடித்துவிட்டு) வித்ர் மட்டும் எஞ்சியிருக்கும் போது என்னை எழுப்பி விடுவார்கள்;நான் (எழுந்து) வித்ர் தொழுவேன்.(நூல் புகாரி,எண்:512,முஸ்லிம்,எண்:512).

**உம்மு ஸலமா (ரலியல்லாஹு அன்ஹா) அறிவிக்கிறார்கள்.**

நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஓர் இரவு விழித்ததும், **'ஸுப்ஹானல்லாஹ்!இந்த இரவில்தான் எத்தனை சோதனைகள் இறக்கப்பட்டுள்ளன? எத்தனை பொக்கிஷங்கள் திறக்கப்பட்டுள்ளன. அறைகளில் உள்ள பெண்களை எழுப்பி விடுவோர் யார்? இவ்வுலகில் ஆடை அணிந்திருந்த எத்தனையோ பேர் மறுமையில் நிர்வாணிகளாக இருப்பார்கள்' என்று குறிப்பிட்டார்கள்.**(நூல்,புகாரி, எண்:6218).

## 13 இரவுத்தொழுகையின் போது தொழுகையில் உள்ளச்சம் பாதிக்காதவாறு தனக்கு மிக இலகுவான முறையை கடைப் பிடித்தல்.

**அவருக்கு கலைப்பு ஏற்பாட்டால் உட்கார்ந்து தொழுவதும் ஸுன்னத்தாகும்.**

அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (பள்ளிக்கு) வந்த போது இரண்டு தூண்களுக்கிடையில் நீண்ட கயிறு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.'இந்தக் கயிறு ஏன்?' என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் கேட்டார்கள். அதற்கு மக்கள்,'இது ஸைனபு (ரலியல்லாஹு அன்ஹாவு)க்கு உரியதாகும்;அவர் (நின்று தொழும் போது) சோர்வடைந்தால் இந்தக் கயிற்றில் சாய்ந்து கொள்வார்' என்று கூறினார்கள்.அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'கூடாது.இதை அவிழ்த்து விடுங்கள்.உங்களில் ஒருவர் உற்சாகத்துடன் இருக்கும் போது தொழ வேண்டும்.சோர்வடைந்தால் உட்கர்ந்து விட வேண்டும்' என்று கூறினார்கள். (நூல்,புகாரி, எண்:1150,முஸ்லிம்,எண்:784).

**தூக்கம் மிகைத்து விடுமாயின் சற்று உறங்கிய பின்னர் உற்சாகமாக எழுந்து தொழுதல்-**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **உங்களில் எவரேனும் தொழும் போது கண்ணயர்ந்துவிட்டால்,அவர் தம்மை விட்டுத் தூக்கம் அகலும்வரைத் தூங்கி விடட்டும்! ஏனெனில்,உங்களில் ஒருவர் உறங்கியவாறே தொழுவாரானால் அவர் (உணர்வில்லாமல்) பாவமன்னிப்புக் கோரப்போக, அவர் தம்மைத்தாமே ஏசி (சபித்து)விடக் கூடும்.-** இதை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி,எண்,212,முஸ்லிம்,எண்:786).


**இவ்வாறே இரவில் ஒருவர் குர்ஆனை ஓதும் போது தூக்கம் மிகைத்து விட்டால் தூங்கி தன்னை பலப்படுத்திக்கொள்வதும் ஸுன்னாத்தான வழிமுறையாகும்.**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **உங்களில் ஒருவர் இரவில் தொழும் போது (உறக்கம் மேலிட்டு) நாவில் குர்ஆன் வராமல் தடைபட்டு,தாம் என்ன சொல்கிறோம் என்பதை அவர் அறியாத நிலைக்குச்சென்று விடுவாரானால் அவர் படுத்து உறங்கட்டும்!.** இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்,முஸ்லிம்,787)

## 14 ஒருவருக்கு இரவில் இரவுத்தொழுகை தப்பி விடுமாயின் அதை பகற்பொழுதில் இரட்டையாக தொழுவது ஸுன்னத்தாகும்.

ஒருவரின் வழமை மூன்று ரக்அத்துக்கள் தொழுவதாயின் அவரால் நோய்,தூக்கம் ஆகியவற்றால் அது தொழ முடியாது தப்பிவிட்டால் அதை பகற்பொழுதில் நான்கு ரக்அத்துக்க ளாகவும்,ஒருவரின் வழமை ஐந்து ரக்அத்துக்கள் தொழுவது எனின் அவரால் நோய்,தூக்கம் ஆகியவற்றால் தொழமுடியாது தப்பிவிட்டால் அதை பகற்பொழுதில் ஆறு ரக்அத்துக்களாகவும் தொழுதுகொள்வார்.இவ்வாறு தான் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்தும் வந்தார்கள். அவரின வழமை இரவில் பதினொரு ரக்அத்துக்கள் தொழுவது எனவே அவர்களுக்கு அவ்வாறு தொழுவது தப்பி விடும் போது அதை பகற்பொழுதில் நிறைவேற்றும் போது பன்னிரெண்டாக தொழுவார்கள். இதை தான் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் போது "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நோய்,தூக்கம் ஆகியவற்றால் இரவுத்தொழுகை தப்பிவிட்டால் பகற்பொழுதில் பன்னிரெண்டு ரக்அத்துக்களாக அதை நிறை வேற்றுவார்கள்".(நூல்,முஸலிம்,எண்:746)

## இரண்டாவது:ஃபஜ்ருடைய நேரம்



இந்நேரத்தில் செய்யப்பட வேண்டிய நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பல்வேறு ஸுன்னத்தான வழிகாட்டல்கள் காணப்படுகின்றன.

### அல் அதான்,-தொழுகைக்கான அழைப்பு-அதிலுள்ள பல்வேறு ஸுன்னத்தான வழிகாட்டல்கள்.

### 1 அதான் சொல்கின்றவரை பின் தொடர்வது -அதாவது அதானுக்கு பதில் அளிப்பது-

لا حول ولا قوة إلا بالله

முஅத்தின்-அதான் சொல்பவர்-அதான் சொல்லும் போது அவர் கூறுவதையே. பின்தொடர்ந்து கூறுவதும்,ஹய்யா அலா எனும் இடங்களில் "**லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ்**" எனக் கூறுவதும் ஸுன்னத்தாகும்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "பாங்கு சொல்லப்படுவதை நீங்கள் செவியுற்றால் முஅத்தின் சொல்வது போல் நீங்களும் சொல்லுங்கள் .." (முஸ்லிம்,எண்,384), மேலும் உமர் பின் கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதில் "**முஅத்தின் அல்லாஹு அகப்ர் என கூறினால் அதற்கு அல்லாஹு அக்பர் என கூறவும், மேலும் முஅத்தின் அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு என கூறினால் அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு என்றே கூறட்டும்.மேலும் முஅத்தின் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்றால் அஷ்ஹது அன்ன முஹம்மதர்**

ரஸூலுல்லாஹ் என்றே கூறட்டும்,முஅத்தின் ஹய்யா அலஸ்ஸலாஹ் எனக் கூறினால் லா ஹவ்ல வலா குவ்வத எனகூறட்டும் இன்னும் ஹய்யா அலல் ஃபலாஹ் எனக்கூறினால் மீண்டும் லாஹவ்ல வலா குவ்வத என கூறட்டும்.பின்னர் அல்லாஹு அக்பர் என கூறினால் அல்லாஹு அக்பர் என கூறட்டும்,பின்னர் லா இலாஹ இல்லல்லாஹு என கூறினால் இவ்வாறே லா இலாஹ இல்லல்லாஹ் என்றே கூறட்டும்.இவ்வாறே ஒருவர் உள்ளத்தால் கூறினால் சுவனம் நுழைந்து விடுவார்.(நூல் முஸ்லிம் எண்,385).

الصلاة خير من النوم

ஃபஜ்ர் தொழுகையில் தஸ்வீபின் "**அஸ்ஸலாத்து கைருன் மினன்னவ்ம்**" எனும் வார்த்தையின் -போது.முஅத்தின் கூறுவது போன்றே கூறல் வேண்டும்.

## 2 இரு ஷஹாதாக்களுக்கும்- சாட்சியங்களுக்கும்- பின்னர் பின்வரும் துஆவை ஓதல்.

أَشْهَدُ أَنْ لاَ إِلهَ إِلاَّ الله وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ، رَضِيتُ بِالله رَبّاً، وَبِمُحَمَّدٍ رَسُولاً، وَبِالإِسْلاَمِ دِيناً

முஅத்தின் "அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரஸூ லுல்லாஹ்" என இரண்டாவது தடவை கூறிய பின்னர் ஸஅத் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் வரக் கூடிய பின்வரும் துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும்.அதில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:தொழுகை அறிவிப்பாளரின் அறிவிப்பைக் கேட்கக்கூடியவர் (அறிவிப்பு முடிந்த பின்பு) "**அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு,லா ஷரீக்க லஹு,வ அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு, ரளீத்து பில்லாஹி ரப்பன், வபி முஹம்மதின் ரசூலன், வபில் இஸ்லாமி தீனன் என்று சொன்னால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்.**" (நூல் முஸ்லிம்,எண்.386).

## 3 அதானுக்கு பின்னர் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்வது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**தொழுகை அறிவிப்பாளரின் அறிவிப்பை நீங்கள் செவியுற்றால் அவர் கூறுவதைப் போன்றே நீங்களும் கூறுங்கள்.பின்பு என்மீது ஸலவாத் சொல்லுங்கள். ஏனெனில்,என்மீது யார் ஒருமுறை ஸலவாத் சொல்கிறாரோ அதன் காரணத்தால் அவருக்குப் பத்து முறை அல்லாஹ் அருள் புரிகின்றான். பின்பு எனக்காக அல்லாஹ்விடம் வஸீலாவைக் கேளுங்கள்.வஸீலா என்பது சொர்க்கத்திலுள்ள (உயர்) பதவியாகும்;அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவருக்குத்தான் அது கிடைக்கும்.அந்த ஒருவர் நானாகவே இருக்க விரும்பு கிறேன்.எனவே,எனக்காக அந்தப் பதவியை (அல்லாஹ்விடம்) கேட்பவருக்கு (மறுமை நாளில்) எனது பரிந்துரை அவசியம் கிடைக்கும்.**" இதை அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்ள். (நூல் முஸ்லிம், எண்.384).

اللهم صلِّ على محمد وعلى آل محمد ، كما صليت على إبراهيم ...


நபிகளார் மீது சொல்லப்படும் "**ஸலவாத்துக்களில்**" மிகச்சிறப்பான வகை ஸலவாத்து,ஸலாத்து இப்றாஹிமிய்யா எனும் பின்வரும் ஸலவாத்து ஆகும். **அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லய்த அலா இப்றாஹீம.........** "

## 4 அதானுக்கு பின்னால் சொல்லப்பட வேண்டிய துஆவை ஓதுவது.

اللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ, وَالصَّلَاةِ الْقَائِمَةِ , آتِ مُحَمَّدًا الْوَسِيلَةَ وَالْفَضِيلَةَ , وَابْعَثْهُ مَقَامًا مَحْمُودًا الَّذِي وَعَدْتَهُ

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் "**எவர் ஒருவர் முஅத்தின் அதான் கூறிய பின்னர்"அல்லாஹும்ம ரப்பஹாதிஹித் தஃவதித் தாம்மா,வஸ்ஸலாதில் காஇமா,ஆதி முஹம்மதினில் வஸீலத வல் ஃபதீலா,வப்அஸஉ மகாமன் மஃமூதன் இல்லதீ வஅத்தா என ஓதுவாரோ அவருக்கு மறுமையில் எனது சிபாரிசு கிடைக்கும்**".(நூல் புகாரி,எண்.:614).

## 5 அதானுக்கு பின்னால் பிரார்த்தனை செய்தல்.



அப்துல்லாஹ் பின் அம்ர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் ஹதீஸில் முஅத்தின்கள் எம்மை விட மிகச்சிறப்பானவர்களாக இருக்கின்றனர், என நபிகளாரிடம் ஒரு மனிதர் குறிப்பட அப்போது நபிகளார் "**முஅத்தின் கூறுவதை நீரும் கூறுவீராக,மேலும் அவர் அதானை முடித்தவுடன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவீராக அது-கேட்பது- வழங்கப்படும்.என கூறினார்கள்.**" (நூல் அபூதாவுத்,எண் 524, இதை இமாம் இப்னும் ஹஜர் அவர்கள் ஹஸன் தரத்தை கொண்டது என குறிப்பிட்டுள்ளார்,நதாஇஜுல் அஃப்கார் (1/367),(மேலும் இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் அல் கலிமுத்தய்யிப் எனும் நூலில் பக்கம் 73 ல் குறிப்பிட்டுள்ளார்கள்.)

மேலும் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். "**அதானுக்கும், இகாமத்துக்கும் இடைப்பட்ட நேர்த்தில் -கேட்கப்படும்- பிரார்த்தனை மறுக்கப்பட மாட்டாது.**" (நூல் ,அந்நஸாஈ, எண் :9895). (இதை இப்னு குஸைமா அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள் 1/221/425).

## ஃபஜ்ரின் ஸுன்னத்தும் அதிலுள்ள பல்வேறு ஸுன்னத்துகளும்.

ஃபஜ்ருடைய ஸுன்னத்து காலையின் ஆரம்பத்திலிருந்து நிறைவேற்றப்படும் முதல் ஸுனன் ரவாத்திபுகளில் உள்ளது. இதை பற்றிய விடயங்களுக்கு முன் ஸுனன்

ரவாத்திபுகள் என்றால் என்ன என நோக்கும் போது அவை ஃபர்ளான தொழுகைகளை தொடர்ந்துள்ள ஸுன்னத்தான தொழுகைகளாகும்.இவை 12 ரக்அத்துக்களை கொண்டது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:"**ஒருவர் ஒவ்வொரு நாளும்-கடமையான தொழுகைகள்-தவிர கூடுதலாகப் பன்னிரண்டு ரக்அத்கள் தொழுதால்" அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் ஓர் இல்லத்தை எழுப்புகிறான்"** இதை உம்முஹபீபா (ரலியல் லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(நூல், முஸ்லிம்,எண்:728).மேலும் திர்மிதியில் இடம் பெற்றுள்ள ஹதீஸில் இதற்கு மேலதிகமாக லுஹருக்கு முன் நான்கும், அதற்கு பின் இரண்டும்,மக்ரிபுக்கு இரண்டும்,இஷாவுக்கு இரண்டும் ஃபஜ்ருக்கு முன்னர் இரண்டும் என வந்துள்ளது. (நூல்,திர்மிதி,எண்-415). இமாம் - திர்மிதி-அவர்கள். ஹஸன் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.


## மிகச்சிறப்பானது இத்தகைய ஸுனன் அர்ரவாத்திபுகளை வீட்டில் நிறைவேற்றுவதாகும்.

ஸைத்பின் ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கின்றார்கள்."மனிதர்களே நீங்கள் உங்கள் தொழுகைகளை உங்கள் வீடுகளிலேயே தொழுவுங்கள்.மேலும் ஒருவர் கடமையல்லாத தொழுகைகளை வீட்டில் தொழுவது தான் மிகச்சிறப்பானது. (நூல்,புகாரி, எண்-7290,முஸ்லிம் எண்:781)

### மிகப்பிரதானமான ஸுனன் அர்ரவாத்திபுகளாவன.

மிகப்பிரதானமான ஸுனன் அர்ரவாத்திபுகளில் ஃபஜ்ருடைய ரவாத்திபு மிகப்பிரதானமானது. **இதை பின்வரும் ஹதீஸ்கள் தெளிவு படுத்துகிறது.**

1. அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். வேறு எந்த ஸுன்னத்தான தொழுகைகளுக்கும் காட்டாத அதிக கரிசனையையும் அக்கரையையும் ஸுபஹ் தொழுகைக்கு முன்னராக தொழப்படும் இரண்டும் ரக்அத்துக்களுக்கு காட்டினார்கள். (நூல், புகாரி, எண்:1196, முஸ்லிம்,எண்:724).



2. அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **ஃபஜ்ருடைய இரு ஸுன்னத்துக்களும் இவ்வுலகம் இவ்வுலகில் இருப்பவைகளை விட மிகச்சிறப்பானது .** (நூல்,முஸ்லிம்,எண்:725).

### ஃஜ்ருடைய ஸுன்னத்து தொழுகையானது பல்வேறு வகையில் தனித்து விளங்குகிறது.

**முதலாவது-**புகாரி,முஸ்லிம் கிரந்தங்களில் வருவது போன்று அது ஊரிலும், பிரயாணத்திலும் ஸுன்னத்து ஆகும்.லுஹர், மக்ரிப்,இஷா ஆகிய ஏனைய ஸுனன் அர்ரவாத்திபுகளை பிரயாணத்தின் போது விட்டு விடல்.

**இரண்டாவது-**இதன் கூலி முன்சென்ற ஹதீஸ்களில் வந்துள் ளதை போல் இவ்வுலகம் இதில் உள்ளவைகள் அனைத்தையும் விட மிகச்சிறப்பானது ஆகும்.

**மூன்றாவது-**முன்சென்ற ஹதீஸ்களில் வந்துள்ளதை போன்று இதை நிறைவேற்றும் போது மிகச்சுறுக்கமாக நிறை வேற்றுவதும் ஸுன்னத்து ஆகும்.

இதற்கான சான்றாக அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் அமைகிறது. அதில் "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத்களில் அல்ஹம்து ஓதினார்களா? என்று நான் நினைக்குமளவுக்குச் சுருக்கமாகத் தொழுவார்கள்".(நூல் புகாரி,எண்:1171,முஸ்லிம்,எண்:724).

எனினும் இவ்வாறு தொழும் போது அதன் அடிப்படை நிபந்தனைகள் பாதிக்கும் விதமாகவும்,அதை காகம் கொத்துவது போல் கொத்துவதன் மூலம் தடைசெய்யப்பட்ட அம்சம் **ஏற்படாது இருப்பது.கட்டாய நிபந்தனையாகும்.**

{قُولُواْ آمَنَّا بِاللّهِ وَمَا أُنزِلَ إِلَيْنَا وَمَا أُنزِلَ إِلَى إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ وَيَعْقُوبَ وَالأسْبَاطِ وَمَا أُوتِيَ مُوسَى وَعِيسَى وَمَا أُوتِيَ النَّبِيُّونَ مِن رَّبِّهِمْ لاَ نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهُ مُسْلِمُونَ}[البقرة: 136]

**நான்காவது-**ஃபஜ்ருடைய ஸுன்னத்து தொழுகையின் போது அத்தியாயம் அல் ஃபத்திஹாவுக்கு பின்னராக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக முஸ்லிம் கிரந்தத்தில் வந்துள்ளது போன்று முதல் ரக்அத்தில் அத்தியாயம் குல் யாஅய்யுஹல் காஃபிரூனும், இரண்டாவதில் குல் ஹுவல்லாஹு அஹத் அத்தியாயத்தையும் ஓதுவது. அல்லது அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு பின்னர் முதல் ரக்அத்தில் "**கூலூ ஆமன்னா பில்லாஹி,வமா உன்ஸில இலய்னா வமா உன்ஸில இலா இபராஹீம வஇஸ்லமாஈல வஇஸ்ஹாக வயஃகூப வல்அஸ்பாதி வமா ஊதிய மூஸா வஈஸா வமா ஊதியன்னபிய்யூன மின் ரப்பிஹிம் லா நுஃபர்ரிகு பய்ன அஹதின் மின்ஹும் வனஹ்னு லஹு முஸிலிமூன்.**"(அத்தியாயம்-அல் பகரா,வசனம்:136).ஓதுவதும் ஸுன்னத்து ஆகும்.

{قُلْ يَا أَهْلَ الْكِتَابِ تَعَالَوْاْ إِلَى كَلَمَةٍ سَوَاء بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلاَّ نَعْبُدَ إِلاَّ اللّهَ وَلاَ نُشْرِكَ بِهِ شَيْئاً وَلاَ يَتَّخِذَ بَعْضُنَا بَعْضاً أَرْبَاباً مِّن دُونِ اللّهِ فَإِن تَوَلَّوْاْ فَقُولُواْ اشْهَدُواْ بِأَنَّا مُسْلِمُونَ}[آل عمران: 52]

இரண்டாவது ரக்அத்தில் "**குல் யா அஹ்லல் கிதாபி தஆலவ் இலா கலிமதின் ஸவாஇன் பய்னனா வபய்னகும் அல்லா நஃபுத இல்லல்லாஹ வலா நுஷ்ரிக பிஹி ஷய்அன் வலா யத்தகித பஃலுனா பஃலன் அர்பாபன் மின் தூனில்லாஹி ஃபஇன் தவல்லவ் ஃபகூலுஷ்ஹதூ பிஅன்னா முஸ்லிமூன்.**"(அத்தியாயம், ஆலு இம்ரான், வசன, எண்:52).இவ்வதீஸ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ளது.ஆகவே இது தொடர்பாக பலாவாறும் வந்துள்ள தனால் முன்னர் குறிப்பட்டதை போன்றும் இன்னும் சில வேளையில் இதையும் ஓதுவதும் ஸுன்னத்து ஆகும்.

**ஐந்தாவது-**ஃபஜ்ர் தொழுகைக்கு பின்னர் வலது புறமாக சாய்ந்து சற்று சாய்ந்துகொள்வதும் ஸுன்னத்தாகும்.

**இதற்கான சான்றாக அமைகிறது.**

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ர் தொழுகையை தொழுது விட்டால் வலப்புறமாக சாய்ந்துக்கொள்வார்கள்.." (நூல்,புகாரி,எண்:1160, முஸ்லிம்,எண்:736).

## பள்ளியை நோக்கி செல்லுதலும். இதன் போது கடைபிடிக்க வேண்டிய ஸுன்னத்தான அம்சங்களும்.

ஒருவர் நாள் ஆரம்பத்தில் முதலில் பள்ளிக்கு செல்லும் முதல் தொழுகை ஃபஜ்ர் தொழுகையாகும்.இவ்வாறு போகும் போது கடைபிடிக்க வேண்டிய ஸுன்னத்தான வழிகாட்டல்கள் பின்வருமாறு:

### 1 பள்ளிவாயிலுக்கு நேரகாலத்துடன் செல்வது ஸுன்னத்து ஆகும்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"மக்கள் தொழுகைக்கு நேரகாலத்துடன் செல்வதற்குரிய பயனை அறிவார்கள் எனின் அதற்கு போட்டிப் போட்டுக்கொள்வார்கள்."** (நூல்,புகாரி,எண், 615. முஸ்லிம்,எண்:437).

### 2 அவரின் வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லும் போது அவரின் பாத எட்டுக்களுக்கள் நன்மைகளாக எழுதப்படும் பொருட்டு அங்க சுத்தி வழூஃ -செய்தவாராக வெளியேறிச் செல்லல்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிடும் போது: **"ஒருவர் தமது வீட்டில் தொழு வதை விடவும், தமது கடைத்தெருவில் தொழுவதை விடவும் அவர் ஜமாஅத்துடன் தொழுவது இருபதுக்கும் மேற்பட்ட மடங்கு அதிகச் சிறப்புடையதாகும். ஏனெனில், உங்களில் ஒருவர் அங்கத் தூய்மை (உளூ) செய்து,அதைச் செம்மை யாகவும் செய்து, தொழ வேண்டும் என்ற ஆர்வத்தில், தொழுகின்ற ஒரே நோக்கத்துடன் பள்ளிவாசலுக்கு வந்தால் அவர் பள்ளிவாசலுக்குள் நுழையும்வரை அவர் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் ஒரு தகுதி அவருக்கு உயர்த்தப்படுகிறது,இன்னும் ஒரு தவறு அவருக்காக மன்னிக்கப்படுகிறது.**



அவர் பள்ளிவாசலுக்குள் நுழைந்து விட்டால்,தொழுகையை எதிர்பார்த்து அவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் வரை அவர் தொழுது கொண்டிருப்பவராகவே கருதப்படுகிறார். உங்களில் ஒருவர் தாம் தொழுத இடத்திலேயே வீற்றிருக்கும் வரை அவருக்காக வானவர்கள் பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறார்கள்."இறைவா! இவருக்குக் கருணை புரிவாயாக! இறைவா! இவருக்கு மன்னிப்பளிப்பாயாக! இறைவா! இவரது பாவமன்னிப்பை ஏற்பாயாக! "என்று அவர்கள் கூறுகின்றனர்.அவருக்கு சிறு துடக்கின் மூலம் தொல்லை ஏற்படாத வரைக்கும் (இது நீடிக்கும்)."இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:649)

## 3 தொழுகைக்கு நிதானத்தைக் கடைப்பிடித்தவாறும் (மெதுவாகவும்) வெளியேறிச் செல்லுங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**தொழுகைக்காக இகாமத் சொல்லப் பட்டால் தொழுகைக்கு ஓடிச்செல்லாதீர்கள்; நிதானத்தைக் கடைப்பிடித்தவாறு (மெதுவாகச்) செல்லுங்கள். உங்களுக்குக் கிடைத்த (ரக்அத்)தை (இமாமுடன்) தொழுங்கள்; தவறிப் போனதை (பின்னர் எழுந்து) நிறைவு செய்து கொள்ளுங்கள். இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.**" (நூல்,புகாரி,எண் 636.முஸ்லிம்,எண்:602).

இமாம் நவவி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது அஸ்ஸகீனா..... என்பது வீணானவைகளை விட்டும் நீங்கிய நடையின் போதான அமைதியும்,அல் வகார் என்பது திரும்பிப் பார்க்காதும்,சப்தத்தை தாழ்த்தியும் காணப்படும் நிலையாகும். (இமாம் நவவியவர்களின் ஷரஹ் முஸ்லிம் ஹதீஸ்,எண்:602),தொழுகைக்கு தட்டுத்தடுமாறி பரபரப்புடன் செல்லாது அமைதியாகவும்,கண்ணியாமாகவும் செல்வது ஸுன்னத்தாகும்.எனும் பாடத்தில்.குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4 பள்ளிக்குள் நுழையும் போது வலது காலை முற்படுத்துவதும் பள்ளியை விட்டு வெளியேறும் போது இடது காலை முற்படுத்துவதும் ஸுன்னத்தாகும்.



அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் "நீர் பள்ளிக்குள் நுழையும் போது வலது காலை முற்படுத்துவதும் அதிலிருந்து வெள்யேறும் போது இடது காலை முற்படுத்துவதும் ஸுன்னத்து ஆகும்".(நூல்,அல் ஹாகிம்.1/338.) இதை அவர்கள் இமாம் முஸ்லிம் அவர்களின் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஸஹீஹான ஹதீஸ் எனவும் குறிப்பிடுள்ளார்கள்.


## 5 பள்ளியில் நுழையும் போதும் அதை விட்டு வெளியேறும் போதும் நபிவழிகாட்டலில் வந்துள்ள துஆவை ஓதுவது.

اللّهُمَّ افتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

اللّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

அபீ ஹுமைத்,அல்லது அபீ உஸைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படும் ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்."உங்களில் ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால் "**அல்லாஹும்ம ஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக**" எனவும் **அதிலிருந்து வெளியேறும் போது "அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் ஃபத்லிக**" எனவும் கூறட்டும். (நூல் முஸ்லிம்,எண்:713).

## 6 பள்ளிக்கு -தஹிய்யதுல் மஸ்ஜித்- காணிக்கையாக இரு ரக்அத்துக்களை தொழுவது.



அதாவது ஒருவர் பள்ளிக்குள் நேரகாலத்துடன் வந்து விட்டால் அவர் இரு ரக்அத்துக்கள் தொழாத வரைக்கும் உட்காராது இருத்தல் ஸுன்னத்து ஆகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய ஹதீஸை அபூகதாதா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்."உங்களில் ஒருவர் பள்ளிவாசலுக்குள் நுழைந்ததும் அமர்வதற்கு முன்பு இரண்டு ரக்அத்கள் தொழட்டும்." (நூல்,புகாரி,எண்-1163,முஸ்லிம்,எண்,714).

ஃபஜ்ர்,லுஹர் போன்று பர்ளான தொழுகைகளுக்கு முன் ஸுன்னத்தான தொழுகைகளாக இருக்குமாயின் அதை நிறை வேற்றலும்,லுஹா தொழுகையின் நேரத்தில் லுஹாதொழுகையையும்,வித்ர் தொழுகையை ஆகியவற்றை பள்ளியில் நிறைவேற்றுதல்,பர்ளான தொழுகையையை பள்ளியில் நிறை வேற்றுதல் போன்றுள்ள தொழுகைகள் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகைக்கு நிகராக போதுமானதாகும். இவ்வாறுள்ள தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகையின் நோக்கம் பள்ளியில் தொழுவதற்கு முன்னராக உட்காராமல் இருத்தல் ஆகும்.

## 7 ஆண்கள் தொழுகையின் போது முதல் வரிசைக்கு முந்தி கொள்ளல் ஸுன்னத்தாகும், மேலும் இதுவே ஆண்களுக்கு மிகச்சிறந்தது. பெண்ணுக்கு மிகச் சிறப்பானது இறுதியணியாகும்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்."**தொழுகையில்- ஆண்களுக்கு மிகச் சிறப்பான அணி,வரிசை முதல் அணியாகும்.மிக மோசமானது இறுதியாகும்.மேலும் பெண்களுக்கு மிகச்சிறப்பான அணி,வரிசையின் இறுதியானது மிக மோசமானது முதல் வரிசையாகும்**". என்றார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:440).

மிகச்சிறப்பானது:என்பது அதிக கூலியும்,மகிமையும் மிக்கது என்பதாகும்.மிக மோசமானது:என்பது கூலியிலும்,சிறப்பிலும் குறைந்துள்ளது.என்பதாகும்.

இந்த ஹதீஸின் விளக்கத்தின்படி ஆண்கள்,பெண்கள் என அனைவரும் கூட்டாக ஜமாத்தாக எவ்வித திறையும்,தடுப்புச் சுவறும் இல்லாது தொழும் வேளையில் ஆகும். ஆகவே இதன் போது பெண்களுக்கு மிகச்சிறப்பான அணி இறுதி வரிசை, அணியாகும். ஏனெனில் இதுவே அவர்கள் ஆண்களின் கண்ணிலிருந்து தம்மை மறைத்து கொள்ள மிக ஏதுவானதாக அமையும்.எனினும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பிரிக்கும் திறைகள்,மதில்கள்,அல்லது இன்றைய காலத்தில் அதிகம் எமது பள்ளிகளில் பெண்களுக்கான பிரத்தியேக தனியான இடங்கள் காணப்படுவது போன்றுள்ள நிலைகளில் ஆண்களின் நெறுக்கத்தை விட்டும் அவர்கள் ஒதுங்கிய நிலையில் உள்ளதால் இதன்போது அவர்களுக்கும் மிகச் சிறப்பான அணி முதல் அணியாகும்.இதன் சட்ட வரையறை தடைக்கான காரணியும்,அக்காரணி இல்லாமல் போவதுமாகும். மேலும் முதல் அணியின்,வரிசையின் சிறப்பு தொடர்ப்பாக பொதுவாக வந்துள்ள ஹதீஸ்களுமாகும்.இவ்வாறான ஹதீஸ்களில் சில பின்வருமாறு:

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **"பாங்கு சொல்வதற்குரிய நன்மையையும் முதல் வரிசையில் நின்று (தொழுவதற்குரிய) நன்மையையும் மக்கள் அறிவார்களானால் அதற்காக அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவர்.யாருக்கு அந்த இடம் கொடுப்பது என்பதில் சீட்டுக் குலுக்கியெடுக்கப்படும் நிலையேற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவர்.தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற் றுவதிலுள்ள நன்மையை அறிவார்களானால் அதற்காக விரைந்து செல்வார்கள். ஸுபுஹ் தொழுகையிலும் இஷா (அதமா)த் தொழுகையிலும் உள்ள நன்மையை அறிவார்களானால் தவழ்ந்தாவது (ஜமாஅத்) தொழுகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்."** என அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(நூல்,புகாரி,எண் :610,முஸ்லிம்,எண்:437)

### 8 மஃமூன்கள்-இமாமை பின்பற்றி தொழுபவர்கள்-இமாமுக்கு அண்மித்திருப்பது ஸுன்னத்தாகும்.

முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று மஃம்மூன்களுக்கு மிகச் சிறப்பான அணி,வரிசை முதல் அணியாகும்.பின்னர் இமாமுக்கு வலது இடது புறமாக மிக அண்மித்து நெறுக்கமாக இருப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்.இதுவே சிறப்பானதுமாகும்.

**இதற்கானசான்றாக அமைகிறது:**

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கிறார்கள். ரஸுலுல்லாஹி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"ஞானம்-கல்வியறிவு- உள்ளவர்களும், அறிஞர்களும் எனக்கு நெறுக்கமாக இருந்துக்கொள்ளுங்கள்".** என (நூற்கள்-அபூதாவுத்,எண், 674),(திர்மிதி,எண்:228).இதில் வந்துள்ள **"லியலினி"** எனும் அறபு வார்த்தையின் அர்த்தம் என்னை நெறுங்கி வாருங்கள் என்பதாகும்.ஆகவே இவ்வதீஸின் பிரகாரம் இமாமுக்கு எத்திசையிலும் சரி அவருக்கு மிக நெறுக்கமாக அண்மித்து இருப்பது வேண்டப்பட்டதொரு அம்சம் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது.

## தொழுகையின் ஸுன்னத்துக்கள்



உமது தொழுகை பள்ளியில் கூட்டாக தொழுவதை விட்டும் தப்புவதனால் அதிகமான நன்மைகளும் தப்பிச் செல்கின்றன.பள்ளிக்கு எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் நன்மையானது அதனால் ஒவ்வொரு பாவங்கள் மன்னிக்கப்பட்டு அந்தஸ்த்துக்கள் உயர்த்தப்படுகின்றன.

**தொழுகையின் ஸுன்னத்துக்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை நாம் பின்வருமாறு குறிப்பிடுகின்றோம்.**

### 1 அஸ்ஸுத்ரா- தடுப்பு அது தொடர்பில் பின்வருவன ஸுன்னாத்தானவையாகும்.

### 1 ஸுத்ராவை -தடுப்பை- வைத்துக்கொள்வது எடுத்துக் கொள்வது ஸுன்னத்தாகும்.

இமாமுக்கும்-தொழுவிப்பவருக்கும்-முன்ஃபரிதுக்கும் -தனித்து தொழுபவருக்கும் -ஸுத்ரா ஸுன்னத்தாகும்.மேலும் மஃமூம்களுக்கு-இமாமை பின்பற்றி தொழுபவர்-இமாமின் ஸுத்ரா இவர்களது ஸுத்ராவாகவும் அமைகிறது.மேலும் ஸுத்ரா வைத்துக் கொள்ளலும் ஸுன்னத்தாகும்.

அபீ ஸஈத் அல் குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிக்கும் ஹதீஸில் அவர்கள் கூறுகின்றார்கள்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "**உங்களில் ஒருவர் மனிதர்களை விட்டும் அவர்கள் கடந்து செல்லாது இருக்க -தடுத்துக்கொள்ளும் -ஒன்றின் பால் தொழுதால்....**" என கூறினார்கள்.(நூல்,புகாரி, எண்:509,முஸ்லிம்,எண்:505).இவ்வாறே இந்த ஸுத்ரா -தடுப்பு-என்பது ஸுன்னத்தாகும் என்பதற்கு பல ஆதாரங்களும் காணப்படுகின்றன.

மேலும் நபிகளார் கட்டில்,சுவர்,மரக்குற்றி, பலகை,ஈட்டி,மிருகங்களை ஓட்டும் விதமான அனஸா எனும் குச்சி,வாகனம் என பலதையும் ஸுத்ராவாக வைத்துள்ளார்கள்.

இவ்வாறு இந்த ஸுத்ரா பயணத்திலும்,ஊரிலும்,கட்டிடத்திலும், திறந்த வெளியிலும்,ஒருவர் தொழும் போது ஏதும் அவரை கடந்து செல்வார் என அச்சப்பட்டாலும் அல்லது அச்சப்படாது விட்டாலும் சரி ஒரு ஸுத்ராவை வைத்துக் கொள்ளல் வேண்டும்.ஏனெனில் ஹதீஸ்களில் கட்டிடங்கள்,திறந்த வெட்ட வெளி என பிரித்து நோக்கப்படவில்லை.மேலும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபீ ஜுஹைஃபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று ஸுத்ரைவை பயணத்திலும்,ஊரிலும் என பிரித்து நோக்காது ஸுத்ராவை வைத்துக் கொண்டார்கள்.(நூல் புகாரி,எண்:501, முஸ்லிம்,எண்:503)

## 2 ஸுத்ராவுக்கு அண்மித்து நெறுக்கமாக இருப்பதும் ஸுன்னத்தாகும்.



இவ்வாறு ஸுத்ராவுக்கு அண்மித்து நெறுக்கமாக இருக்கும் போது அவருக்கும் ஸுஜூத் செய்யும் இடத்துக்கும் இடையிலான இடைவெளி ஒரு ஆடு கடந்து செல்லும் அளவுக்கு இருத்தல்.

ஸஹ்ல் பின் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸின் பிரகாரம். அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்கள் தொழுமிடத்துக்கும் முன்னரான சுவருக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி ஒரு ஆட்டுக்குட்டி கடந்து செல்லும் அளவுக்கானதாக காணப்பட்டது.(நூல்,புகாரி,எண்:496,முஸ்லிம்,எண்:508)இதில் முஸல்லா என்பதன் கருத்து ஸுஜூத் செய்யும் இடமாகும். மேலும் அஹ்மத்,அபூதாவுத்,ஆகிய கிரந்தங்களில்"அவருக்கும் ஸுத்ராவுக்குமான இடைவெளி மூன்று முழமாக காணப்பட்டது எனவும் வந்துள்ளது.(அஹ்மத்,எண்:6231,அபூதாவுத், எண்:2024). மேலும் இதை இமாம் அல் பானி அவர்கள் ஸஹீஹ் அபூ தாவுதில் 6/263. ஸஹீஹ் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.இதன் அடிப்படை,புகாரியில் இலக்கம் 506ல் இடம் பெற்றுள்ளது.அதாவது அவர் -தொழுகைக்காக- நிற்பதை பொறுத்து ஆகும்.

## 3 தொழுபவருக்கு முன்னால் கடந்து செல்பவரை தடுப்பது ஸுன்னத்தாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **"உங்களில் ஒருவர் தொழும் போது எவரையும் தமக்கு முன்னே கடந்துசெல்ல அவர் அனுமதிக்க வேண்டாம். (அவரைத் தடுக்கட்டும்.) அவர் (விலகிக்கொள்ள) மறுக்கும் போது சண்டையிட(நேர்ந்தால்**



**சண்டையிட்டுத் தடுக்க) ட்டும்! ஏனெனில், அவன் (ஷைத்தான்) ஆவான். இதை அபீ ஸஈத் அல் குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்."** (நூல்,முஸ்லிம்,எண்:505).

எனினும் இவ்வாறு கடந்து செல்வது பெண,கறுப்பு நிற நாய்,கழுதை எனின் மிகச்சரியான கருத்தின்படி தடுப்பது கட்டாயம். இமாம் முஸ்லிம் அவர்கள் பதிவு செய்துள்ள அபீ தர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் வந்துள்ளதன் பிரகாரம் இவர்கள்- இவ்வாறு கடந்து செல்வது தொழுகையை முறித்து விடும் என்பதனாலாகும்.இதற்கு மாறாக ஏனையவை கடந்து செல்வது தொழுகையை முறித்து விட மாட்டாது. **இதுவே எமது ஆசான்-ஷைக்- பின் உஸைமீன் ரஹிஹுல்லாஹ் அவர்களினதும் தெரிவுமாகும்.**

### 4 ஒவ்வொறு தொழுகையிலும் மிஸ்வாக் செய்வது - குச்சியை- கொண்டு பல் துலக்குவது-ஸுன்னத்தாகும்.



மேலும் இதுவே இவ்வாறு மிஸ்வாக் செய்யுமாறு மிகவும் வலியுறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் மூன்றாவது சந்தர்ப்பமாகும்.

**இதற்கான ஆதாரமாக அமைகிறது.**

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் **"என் சமுதாயத்தாருக்குச் சிரமம் ஏற்படும் என்று நான் கருதியிராவிட்டால், (எல்லாத் தொழுகைகளிலும் கட்டாய மாகப்) பல்துலக்கும் படி (மிஸ்வாக் செய்யும்படி) மக்களுக்கு நான் கட்டளையிட்டிருப்பேன்.என அபூ ஹுரைரா (ரலியல் லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார்கள்."** (நூல்,புகாரி,எண்: 887)

## 2 தொழுகைக்காக கியாமில் -ஆரம்ப நிலையில்- நிற்கும் போது பின்வருவன ஸுன்னத்தாகும்.

### 1 தக்பீரதுல் இஹ்ராம்-ஆரம்ப தக்பீர்-இன் போது இரு கைகளையும் உயர்த்தல்.



سَمِعَ اللهُ لمن حَمِدهِ ربَّنا ولكَ الحمدُ

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையை ஆரம்பிக்கும் போது தம் தோள் புஜங்களுக்கு நேராக இரண்டு கைகளையும் உயர்த்துவார்கள்.ருகூவுக்காகத் தக்பீர் கூறும் போதும் இவ்வாறு செய்ததை பார்த்திருக்கிறேன். ருகூவிலிருந்து தலையை உயர்த்தும் போதும இவ்வாறு செய்வார்கள். **'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா'** என்றும் அப்போது கூறுவார்கள்.எனினும் ஸஜ்தாவின் போது இவ்வாறு செய்ய மாட்டார்கள். (நூற்கள்,புகாரி,735,முஸ்லிம்,390).

இப்னு ஹுபைரா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது அனைத்து -மார்க்க-அறிஞர்களும் தக்பீரதுல் இஹ்ராமின்-ஆரம்ப தக்பீரின்- போது இருகைகளையும் உயர்த்துவது கட்டாயமானதல்ல,மாறாக அது ஸுன்னத்தானது என்பதில் ஏகோபித்த கருத்தை கொண்டுள்ளனர்.(பார்க்க:நூல், அல் இஃப்ஸாஹ். (1/123).

**கையை உயர்த்துவது தொடர்பாக ஹதீஸ்களில் நான்கு இடங்கள் வந்துள்ளன**

- தக்பீதுல் இஹ்ராம் ஆரம்ப தக்பீரின் போது
- ருகூவின் போது
- அதிலிருந்து எழும் போது

முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று இவை மூன்றும் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக இரு ஸஹீஹான கிரந்தங்களிலும் இடம் பெற்றுள்ளன-நான்காவது இடம்

- முதல் தஷஹ்ஹுதிலிருந்து எழும் போது

மேலும் இதுவும் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக ஸஹீஹ் புகாரியில் இடம்பெற்றுள்ளது.

### 2 கைகளை உயர்த்தும் போது கைவிரல்கள் நீட்டிய வண்ணம் இருத்தல் ஸுன்னத்தாகும்.

அபீ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "தொழுகைக்காக நின்றால் -நிலையில்-அவர்களது இரு கைகளையும் உயர்த்துவார்கள்." (நூல்:அஹ்மத்,எண்:8875, அபூ தாவுத்,எண்:753. அத்திர்மிதி,எண்:240),இதை இமாம் அல்பானி -ரஹ்மதுல்லாஹ்- அவர்கள் தமது அஸ்ஸஹீஹ் அபூ தாவுத் எனும் நூலில் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.(3/341).

### 3 இரு கைகளையும் உயர்த்தும் போது ஸுன்னத்தான இடம் வரையில் உயர்த்துவதும் ஸுன்னத்தாகும்.





இரு கைகளையும் உயர்த்தக்கூடிய எல்லை தொடர்பாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தொட்டும் இரு வகையில் ஹதீஸ் கூற்றுக்கள் வந்துள்ளன. இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக புகாரி,எண்: 735),(முஸ்லிம்,எண்:390) ஆகிய கிரந்தங்களில் அதன் எல்லை காது வரை என வந்துள்ளது.மேலும் காதுச் சோனை வரையிலாகும் என முஸ்லிமில் (391) மாலிக் பின் ஹுவைரிஸ் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக மற்றொரு அறிவிப்பும் இடம் பெற்றுள்ளது.ஆகவே இதன்படி தொழுபவர் இவ்விடயத்தில் ஒரு முறை இவ்வாறும் மறுமுறை மற்ற விதமாகவும் செய்து கொள்வார்.

### 4 தொழுபவர் முதல் தக்பீருக்கு பின்னர் தமது வலது கரத்தை இடது கரத்தின் மீது வைப்பதும் ஸுன்னத்தான வழிமுறை ஆகும்.

இப்னு ஹுபைரா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வாயிலாக வந்துள்ள அவர்களது கருத்தின் பிரகாரம் இவ்விடயத்தில் அனைத்து மார்க்க அறிஞர்களினதும் ஏகோபித்த முடிவும் இதுவாகும்.(பார்க்க,அல் இஃப்ஸாஹ்.(1/124).

## 5 வலக்கரத்தால் இடக்கரத்தை பிடித்துக் கொள்ளலும் ஸுன்னத்தான வழிமுறையாகும்.

**இதன் முதல் வழிமுறை:** வலக்கரத்தை இடக் கரத்தின் மீது வைத்துக் கொள்ளல். இது தொடர்ப்பாக வாயில் பின்ஹுஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கும் ஹதீஸில்,அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்காக நின்றால் வலக்கரத்தால் இடக் கரத்தை பற்றிப்பிடித்துக் கொள்வதை நான் கண்டேன் என அறிவிக்கின்றார்கள்.(நூல்,அபூதாவுத்,எண்:577). (அந்நஸாஈ, எண் 888),இதை இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

**இரண்டாவது வழிமுறை:** வலக்கரத்தை இடக்கரத்தின் முழங்கையின் மீது வைத்தல். இது தொடரப்பாக ஸஹ்ல் பின் ஸஅத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக ஒரு ஹதீஸில் அவர்கள் மனிதர்கள்,ஆண்கள் அவர்களது வலக்கரங்களை அவர்களது இடக்கரங்களின் மீது தொழுகையின் போது வைக்கும் படி ஏவப்பட்டார்கள். (நூல்,புகாரி,எண்:740).

எனவே இவ்விடயத்தில் பல ஸுன்னாக்களை பின்பற்றும் விதமாக ஒரு தடவை கையின் மீதும்,இன்னொரு தடவை முழங்கையின் மீதும் வைத்துக்கொள்வார்.





## 6 தொழுகையின் -ஆரம்ப துஆ- துஆஉல் இஸ்திஃப்தாஹ் ஓதுவது ஸுன்னத்தாகும்.

தொழுகையின்-ஆரம்ப துஆ-துஆஉல் இஸ்திஃப்தாஹ்வின் ஓதல்கள் பல வடிவங்களில் வந்துள்ளன.ஆகவே இதன் ஸுன்னத்தான வழிமுறை ஹதீஸ்களில் வந்துள்ளதன் பிரகாரம் பல்வேறுபட்ட வகைகளிலும் மாற்றிமாற்றி ஓதுவாதாகும். அவ்வாறு வந்துள்ள வடிவங்கள் பின்வருமாறு.

1) سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ ، تَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ ، وَلاَ إِلَهَ غَيْرُكَ

**"ஸுப்ஹானகல்லாஹும்ம, வபிஹம்திக, தபாரகஸ்முக வதஆலா ஜத்துக."** (நூல், அஹ்மத், எண் 11473). (அபூதாவுத், எண்-776) (அத்திர்மித்,எண்:243), (அந்நஸாஈ,எண்:900). இவ்வதீஸ் அபீ ஸஈத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாகும்,இவ்வதீஸ் தொடர்பாக

பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.இருந்த போதிலும் இதை பலப்படுத்தும் விதமான ஹதீஸ் அறிவிப்புக்களும் உள்ளன.எனவே தான் இந்த ஹதீஸை இமாம் இப்னு ஹஜர் அவர்கள் ஹஸன் தரத்தை கொண்டது எனக்குறிப்பிட்டுள்ளார்கள்.(நதாஇஜுல் அஃப்கார், 1/412).

2 الْحَمْدُ لِلهِ حَمْداً كَثِيراً طَيِّباً مُبَارَكاً فِيهِ

**"அல் ஹம்துலில்லாஹி ஹம்தன் கஸீரன் தையிபன் முபாரகன் ஃபீஹி."** இதன் மகிமை தொடர்ப்பாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது:**"இதை அல்லாஹ்வின் பால் உயர்த்துபவர் யார் என்பதற்காக பன்னிரெண்டு வானவர்கள் முந்திக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன் என குறிப்பிட்டார்கள்."**(நூல், முஸ்லிம்,எண்:600).அறிவிப்பாளர் அனஸ் பின்மாலிக் ரலியல்லாஹு அன்ஹு.

3 اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ، اللَّهُمَّ نَقِّنِي مِنْ خَطَايَايَ كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، اللَّهُمَّ اغْسِلْنِي مِنْ خَطَايَايَ بِالثَّلْجِ وَالْمَاءِ وَالْبَرَدِ

**"அல்லாஹும்ம பாஇத் பைனீ வ பைன கத்தாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிக்கி வல்மஃக்ரிப்.அல்லாஹும்ம நக்கினீ மின் கத்தாயாய கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யளு மினத் தனஸ். அல்லாஹும்மஃக்ஸில்னீ மின் கத்தாயாய பிஸ்ஸல்ஜி வல்மாயி வல்பரத்"**.(நூல்,புகாரி,எண்:744, முஸ்லிம்,எண்:598).அறிவிப்பாளர்,அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு.

4 اللهُ أَكْبَرُ كَبِيراً ، وَالْحَمْدُ لِلهِ كَثِيراً ، وَسُبْحَانَ اللهِ بُكْرَةً وَأَصِيلاً

**"அல்லாஹு அக்பர் கபீரா, வல்ஹம்து லில்லாஹி கஸீரா, வ சுப்ஹானல்லாஹி புக்ரத்தவ் வ அஸீலா"** இதன் மகிமை தொடர்ப்பாக அல்லாஹ்வின் தூதர் அவர்கள் குறிப்பிடும் போது. **"நான் இதைக் கேட்டு வியப்புற்றேன். இதற்காக வானத்தின் வாசல்கள் திறக்கப்பட்டன"** என கூறினார்கள்.இது இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வாயிலாக முஸ்லிம் கிரந்தத்தில் (601) பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 7 அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடல்.

அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத்தேடல் ஸுன்னத்தான வழி காட்டலாகும்.இவ்வாறு பாதுகாப்பு தேடலின் போது வந்துள்ள பல்வேறு வடிவங்களிலும் ஒரு தடவை ஒன்றையும் இன்னொரு தடவை மற்றொன்றுமாக செயற்படுத்துவதும் ஸுன்னத்தாகும். அவ்வாறு வந்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு:

1 أعوذ بالله من الشيطان الرجيم

**"அஊது பில்லாஹி மினஷ்ஷைதானிர்ரஜீம்."**

இதுவே அதிகமான மார்க்க அறிஞர்களின் -ரஹிமஹு முல்லாஹ் -அவர்களின் தெரிவாக அமைகின்றது.அல்லாஹ் குறிப்பிடும் போது **"மேலும் (நபியே!) நீர்**

**குர்ஆனை ஓதுவீராயின் (முன்னதாக) வெருட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக்கொள்வீராக."** (அத்தியாயம்,அந்நஹ்ல்,வசனம்,98).

2 أعوذ بالله السميع العليم من الشيطان الرجيم

**"அஊது பில்லாஹிஸ்ஸமீஉல் அலீம் மினஷ் ஷைதானிர்ரஜீம்."**

அல்லாஹ் குறிப்பிடும் போது **"உங்களுக்கு ஷைத்தானிடமிருந்து ஏதேனும் ஊசலாட்டம் -தீயதைசெய்ய - உம்மை தூண்டுமாயின்,உடனே அல்லாஹ்விடத்தில் பாதுகாவல் தேடிக் கொள்வீராக ...!நிச்சயமாக அவன் யாவற்றையும் செவியேற் பவன் நன்கறிபவன்."** (அத்தியாயம்,அல் ஃபுஸ்ஸிலத்:36)

## 8 பிஸ்மில்லாஹ் கூறல்.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

பாதுகாப்பு தேடியதன் பின் பிஸ்மில் கூறல் ஸுன்னத்தாகும். அதாவது **"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்"**,எனக் கூறல் ஆகும்.நுஅய்ம் பின் முஜ்மிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் அவர்கள் கூறும் போது நான் அபீ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பின்னாலிருந்து தொழுதேன். **"அவர்கள் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்"** என ஓதிய பின்னர் -உம்மில் குர்ஆனை -அத்தியாயம் அல் ஃபாத்திஹாவை-.ஓதினார்கள்.பின்னர் அதில் அவர்கள் எனதுயிர் எவன் கை வசம் இருக்கின்றதோ அவன்மீது ஆணையாக.எனது இத்தொழுகை ரஸூல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகைக்கு ஒப்பானதாக இருக்கின்றது.என குறிப்பிட்டார்கள்.(நூல் அந்நஸாஈ,எண்:906).இதை இப்னு குஸைமா அவர்கள் ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.(1/251).மேலும் இமாம் தாரகுத்னி அவர்கள் குறிப்பிடும் போது இது ஒரு ஸஹீஹான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்கள் அனைவரும் நம்பகமானவர்களாவர்.

மேலும் இது கட்டாயமில்லாது ஸுன்னத்தான நிலைக்கு மாற்றி விடக்கூடிய அம்சம் என்னவெனில் புகாரி (757). முஸ்லிமில் (397).அபீ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வரக்கூடிய ஹதீஸில்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை பிழையாக தொழுதவருக்கு அதை கற்றுக்கொடுக்கும் போது அதை -பிஸ்மில்லாஹ்வை- கற்றுக்கொடுக்காது அத்தியாயம் அல் ஃபாத்திஹாவை ஓதும் படி தான் வழிகாட்டினார்கள்.

## 9 இமாமுடன் ஆமீன் எனக்கூறல்.

அதாவது பரகசியமாக சத்திமிட்டு ஓதப்படக்கூடிய தொழுகைகளில் இமாம் அத்தியாயம் அல் ஃபாத்திஹாவை ஓதி முடித்தவுடன் மஃமூன்கள் ஆமீன் என கூறுவது ஸுன்னத்தாகும். இதற்கான சான்றாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"இமாம் ஆமீன் எனக்கூறினால் நீங்களும்**

**ஆமீன் எனக் கூறுங்கள்.ஏனெனில் எவரது ஆமீன் வானவர்களது ஆமீனுக்கு நிகராகின்றதோ அதனால் முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன."** (நூல்,புகாரி,எண்:780),(முஸ்லிம்,எண்:410)

### 10 அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு பின்னர் ஒரு அத்தியாயத்தை ஓதல்.

இவ்வாறு இதை முதலாவது இரண்டாவது ரக்அத்துக்களில் ஓதுவது ஸுன்னத்தாகும். இதுவே அதிகமான மார்க்க அறிஞர்களினதும்-ரஹிமஹுமுல்லாஹ்- கருத்தாகும். அபீ கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படும் ஹதீஸின் பிரகாரம்.அதில் அவர்கள் கூறுகின்றார்கள் "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் லுஹர் தொழுகையின் முதலாவது இரண்டாவது ரக்அத்துக்களில் அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு பின்னர் வேறு அத்தியாயங்களை ஓதுவார்கள்,மேலும் முதலாவதில் நீளமாகவும் இரணடாவதில் முதலாவதை விட சுருக்கமாகவும் ஓதுவார்கள்" . (நூல்,புகாரி, எண்:759,முஸ்லிம்எண்:451).

எனினும் மஃமூன் பரகசியமாக ஓதக்கூடிய -இமாம் சப்தமிட்டு ஓதக்கூடிய- தொழுகைகளின் போது அத்தியாயம் அல் ஃபாத்திஹாவுக்கு பின்னரான அத்தியாயத்தை ஓதாமல் இமாமின் ஓதலை செவிசாய்க்க வேண்டும்.

## 3 ருகூவின் போது பின்வருவன ஸுன்னத்தாகும்.

### 1 கைவிரல்களை விரித்து முழங்காலை கைகளால் பிடித்துக் கொண்டிருப்பதை போன்று கைகளை முழங்காலில் வைத்தல் ஸுன்னத்தாகும்.



அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் அறிந்திருக்கிறேன். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தக்பீர் கூறும் போது தம் இரண்டு கைகளையும் தம் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்துவார்கள்.ருகூவு செய்யும் போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது படியச் செய்வார்கள்.பின்னர் தம் முதுகை (வளைவு இன்றி) நேராக்கு வார்கள்.(நூல்,புகாரி,எண்:828).மேலும் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஹதீஸில் அவர்கள் அவர்களது கைவிரல்களை விரித்து வைத்துக்கொள்வார்கள் என வந்துள்ளது.(நூல்:அஹ்மத், எண்: 17081),அபூ தாவத்,எண்:863,அந்நஸாஈ,எண்:1038). இது ஹஸன் எனும் தரத்தை கொண்டமைந்த அறிவிப்பாளர் தொடரை கொண்டது.மேலும் பின் குஸைமா (598) -ரஹிம ஹுல்லாஹ்- அவர்களின் நூலில் வாயின் பின்ஹுஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக வரும் ஹதீஸ் இதற்கு சான்றாக இருக்கின்றது.

**2 ருகூஃ செய்பவர் அவரது முதுகை நீட்டி நேராக வைத்துக் கொள்வது ஸுன்னத்தாகும்.**



ஹதீஸ் அபீ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹ் அவர்கள் வாயிலாக வந்துள்ள ஹதீஸில்,அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அவர்கள்.ருகூவு செய்யும் போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது படியச் செய்வார்கள்.பின்னர் தம் முதுகை (வளைவு இன்றி) நேராக்குவார்கள். (நூல்,புகாரி,எண்:828).இதில் வந்துள்ள தமது முதுகை நேராக வைப்பார்கள் என்பதன் கருத்து அவர்கள் ருகூஃவின் போது வில் போன்று வளைக்காது நேராக வைப்பார்கள் என்பதாகும். மேலும் அவரது தலையை அதிகம் உயர்த்தாதும் ,தாழ்த்தாமலும் முதுக்கு நேராக வைப்பதிருப்பதும் ஸுன்னத்து ஆகும்.இதனையே இமாம் முஸ்லிம் அவர்கள் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரது ருகூஃ செய்யும் முறையை வர்ணிக்கும் ஹதீஸும் குறிப்பிடுகின்றது.

"ருகூவின் போது அவர்களின் தலையை உயர்த்தவும் மாட்டார்கள், ஓரேயடியாக தாழ்த்தவும் மாட்டார்கள். மாறாக நடு நிலையாக வைத்துக்கொள்வார்கள்" (நூல், முஸ்லிம்,எண்:494).

**3 தொழுபவர் ருகூஃசெய்யும் போது அவரது இரு விலாப் பகுதிகளையும் இணைக்காது அகற்றி வைத்து கொள்வது ஸுன்னத்தாகும்.**



அதாவது இணைத்து சேர்த்து வைக்காது வேறுபடுத்தி தூரமாக அகற்றி வைத்துக்கொள்ளல். முன்னர் குறிப்பிடப்பட்ட அபூ மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸின் பிரகாரம்,அதில் "பின்னர் அவர்கள் ருகூஃ செய்து, அவரது இரு கைகளையும் விரல்களையும் விரித்த வண்ணம் அவர்களது முழங்காலில் வைத்தார்கள்..... என வந்துள்ளது. அதன் பின்னர் அவர்கள் இவ்வாறு தான் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுவதை நான் கண்டேன் என கூறினார்கள். (நூல்,அஹ்மத்,எண்:17081, அபூதாவத்,எண்,863, அந்நஸாஈ,எண்.1038,பார்ரக்க,ஹாஷியா 02).

இவ்வதீஸில் வந்துள்ள "முஜாஃபா" எனும் அறபு வார்த்தையின் அர்த்தம் தூரப்படுத்தி கொள்ளல் என்பதாகும். இவ்வாறு செய்வது பக்கத்தில் உள்ள சக தொழுகையாளிகளுக்கு இடையூறுகள் ஏதும் ஏற்பாடாத போது தான்.ஏனெனில் ஒரு தொழுகையாளி ஏனைய தொழுகையாளிகளுக்கு இடையூறுகள் விளைக்கும் விதமாக ஒரு ஸுன்னத்தை செய்வது பொறுத்தமாதும் அல்ல.

இமாம் நவவி -ரஹ்மஹுல்லாஹ்- அவர்கள் குறிப்பிடும் போது இவ்வாறு இரு விலாப்பகுதியையும் -அப்புறப்படுத்துவது- தூரப்படுத்துவது குறித்து குறிப்பிடும் போது "இவ்வாறு செய்வது ஸுன்னத்தான அம்சமாகும்.எனும் விடயத்தில் கருத்து வேறுபடக்கூடிய எந்தவொரு அறிஞரையும் நான் காணவில்லை.மேலும் இமாம் திர்மிதி அவர்கள் இவ்வாறு செய்வது ருகூஃவிலும்,ஸுஜூதிலும் பொதுவாகவே அறிஞர்க ளிடத்தில் ஸுன்னத்தாகும்.எனும் கூற்றும் இடம் பெற்றுள்ளது." (பார்க்க:அல் மஜ்மூஃ(3/410).

## 4 ருகூவில் ஓதப்படக்கூடிய அத்கார்களை ஓதுவது ஸுன்னத்தாகும்.

سبحان ربي العظيم

ருகூஃ செய்பவர் அவர் **(ஸுப்ஹான ரப்பியல் அலீம்)**.எனும் துஆவுடன் மேலும் -ஹதீஸ்களில்- வந்துள்ள துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும்.இவ்வாறு வந்துள்ள துஆக்கள் பின்வருமாறு:

1. سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ، اللَّهُمَّ اغْفِرْ لِي
**"ஸுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக, அல்லா ஹும்மக்ஃபிர்லீ."** (நூல்,புகாரி,எண்:794,முஸ்லிம்,எண்:484). இவ்வதீஸை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

2. سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوحِ
**"ஸுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாஇகது வர்ரூஹ்"**. (நூல்: முஸ்லிம்,எண்:487) .இவ்வதீஸை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

3. اللَّهُمَّ لَكَ رَكَعْتُ ، وَبِكَ آمَنْتُ ، وَلَكَ أَسْلَمْتُ ، خَشَعَ لَكَ سَمْعِي، وَبَصَرِي ، وَمُخِّي ، وَعَظْمِي ، وَعَصَبِي
**"அல்லாஹும்ம லக ரகஃது, வபிக ஆமன்து, வலக அஸ்லம்து, கஷஅ லக ஸம்ஈ, வபஸரீ, வமுக்கீ,வஅதமீ, வஅஸபீ."** (நூல்: முஸ்லிம், எண், 771).இவ்வதீஸை அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

4. سبحانَ ذِي الجَبَرُوتِ وَالمَلَكوتِ وَالكِبْرِياءِ وَالعَظَمَة
**"ஸுப்ஹான தில் ஜபரூதி வல்மலகூதி வல்கிப்ரியாஇ வல் அதமதி."** (நூல்,அஹமத்,எண்:23411,அபூ தாவத்,எண்:873, அந்நஸாஈ,எண்:1050). இவ்வதீஸ் அவ்ஃப் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது.இமாம் அல் பானி அவர்கள் ஸஹீஹ் அபூதாவுத் எனும் நூலில் "ஸஹீஹ்" என குறிப்பிட்டுள்ளார்கள்.(4/27).

## 4 ருகூஃவிலிருந்து எழுதலும், இதிலுள்ள பல்வேறு ஸுன்னத்தான வழிகாட்டல்களும்.

### 1 இந்த ருகுனை நீளப்படுத்தல்.



ஸாபித் அல்புனானீ (ரஹ்மதுல்லாஹ்) அவர்கள் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக அறிவிக்கின்றார்கள்.

அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் (எங்களிடம்), அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்களுக்குத் தொழுவித்ததைப் போன்றே நான் உங்களுக்குத் தொழுவிக்கிறேன்;அதில் எந்தக் குறையும் வைக்கமாட்டேன் என கூறினார்கள். (பிறகு அவர்கள் தொழுவித்தார்கள்.) அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் (தொழுவித்த போது) ஒன்றைச் செய்வார்கள். ஆனால்,அவ்வாறு நீங்கள் செய்வதை நான் பார்த்ததில்லை. அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் குனிந்து (ருகூஉ செய்து) நிமிர்ந்ததும் (நீண்ட நேரம்) நேராக நிற்பார்கள்.எந்த அளவிற்கென்றால் அவர்கள் அதை மறந்து விட்டார்களோ! என்று எவரேனும் கூறிவிடுவார்.மேலும் அவர்கள் (சஜ்தா) செய்து தலையை உயர்த்தியதும் இருப்பில் (நீண்டநேரம்) நிலைகொண்டிருப்பார்கள்.எந்த அளவிற்கென்றால் அவர்கள் அதை மறந்து விட்டார்களோ! என்று எவரேனும் கூறிவிடுவார்.(இந்தளவுக்கு இவற்றை நீண்டதாக அமைத்துக்கொண்டார்கள்).(நூல்,புகாரி,எண்:821,முஸ்லிம், எண்:472).

### 2 "ரப்பனா வலகல் ஹம்து" எனும் சொற்றொடரினை அது -ஹதீஸ்களில் வந்துள்ளதன் பிரகாரம்- பல்வேறு வகையிலும் ஓதிவரல்.அவ்வாறு வந்துள்ள முறைகளாவன:

1. اللَّهُمَّ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

**அல்லாஹும்ம ரப்பனா வலகல் ஹம்து.** (நூல், புகாரி, எண் : 795, இவ்வதீஸை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்).

2. اللَّهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

**"அல்லாஹும்ம ரப்பனா லகல் ஹம்து"** (நூல்,புகாரி,எண்: 796,முஸ்லிம் எண்.404. இவ்வதீஸை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்).

3. رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

**"ரப்பனா வலகல் ஹம்து".** (நூல்,புகாரி,எண்:799). இவ்வதீஸை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்).

4 رَبَّنَا لَكَ الْحَمْدُ

**"ரப்பனா லகல் ஹம்து"**.(நூல் புகாரி,எண்:722).இவ்வதீஸை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்).

ஆகவே ஒரு தடவை இதுவும் இன்னொரு முறை மற்றொன்றுமாக ஓதிவர வேண்டும்.

## 3 ருகூஃவிலிருந்து எழுந்தவுடன் ஓதப்பட வேண்டிய துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும்.

ருகூஃவிலிருந்து எழுந்தவுடன் ஓதவேண்டிய துஆக்கள் பின்வருமாறு:

1 رَبَّنَا لَكَ الْحَمْدُ ، مِلْءُ السَّمَاوَاتِ وَالأَرْضِ ، وَمِلْءُ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ ، أَهْلُ الثَّنَاءِ وَالْمَجْدِ، أَحَقُّ مَا قَالَ الْعَبْدُ ، وَكُلُّنَا لَكَ عَبْدٌ ، اللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ ، وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ ، وَلاَ يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

**"ரப்பனா! ல(க்)கல் ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வல்அர்ளி, வ மில்அ மா ஷிஃத்த மின் ஷைஇம் பஅது. அஹ்லஸ் ஸனாயி வல்மஜ்த்.அஹக்கு மா காலல் அப்து,வ குல்லுனா ல(க்)க அப்துன்.அல்லாஹும்ம,லா மானிஅ லிமா அஉதைத்த,வலா முஉத்திய லிமா மனஉத்த, வலா யன்ஃபஉ தல்ஜத்தி மின்க்கல் ஜத்"** .(இது அபூசயீத் அல்குத்ரீ (ரலியல் லாஹு அன்ஹு) அவர்கள் வாயிலாக முஸ்லிம்,கிரந்தத்தில் 477 ல் இடம் பெற்றுள்ளது).

2 الْحَمْدُ لِلهِ حَمْداً كَثِيراً طَيِّباً مُبَارَكاً فِيهِ

**"அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி"** அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இதன் மகிமையை பற்றி கூறும் போது "பன்னிரண்டு வானவர்கள் தமக்கிடையே "இதை எடுத்துச் செல்பவர் யார்" எனும் விஷயத்தில் போட்டியிட்டுக் கொண்டிருந்ததை நான் கண்டேன்" என்று கூறினார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:600,புகாரி,எண்: 799).


3 اللَّهُمَّ طَهِّرْنِي بِالثَّلْجِ وَالْبَرَدِ وَالْمَاءِ الْبَارِدِ ، اللَّهُمَّ طَهِّرْنِي مِنَ الذُّنُوبِ وَالْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الْوَسَخِ

**"அல்லாஹும்ம, தஹ்ஹிர்னீ பிஸ்ஸல்ஜி வல்பரதி வல்மாயில் பாரித். அல்லாஹும்ம,தஹ்ஹிர்னீ மினத் துனூபி வல்கத்தாயா கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யளு மினல் வஸ(க்)கி** ".(நூல்,முஸ்லிம்,எண்:476).

ஒரு முஸ்லிம் இவ்வாறு வந்துள்ள துஆக்களை ஓதும் போது இந்த ருகூனை நீட்டிக்கொள்ள முடிகிறது.

## 5 ஸுஜூத் செய்தல்,இதில் பல்வேறு ஸுன்னத்துக்கள் காணப்படுகின்றன.

### 1 ஸுஜூத் செய்கின்றவர் அவரது இரு புயங்களையும் விலாவுடனும்,இரு தொடைகளையும் வயிற்றுடனும் இணைக்காது தூரப்படுத்திகொள்வதும், ஸுன்னத்தாகும்.



அப்துல்லாஹ் பின் புஹைனா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடும் போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையில் சுஜூத் செய்யும் போது தங்களின் இரு கைகளையும் அவர்களது அக்குளின் வெண்மை தெரியும் அளவுக்கு விரித்து வைப்பார்கள். (நூல்,புகாரி,எண்:390,முஸ்லிம்,எண்: 495) .அன்னை மைமூனா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுஜூத் செய்யும் போது ஒரு கால் நடை -இதில் அல் பஹ்மா என்பது ஒருமையாகும்.இதன் கருத்தாவது ஆட்டுக்குட்டிகள் என்பதாகும்- அவர்களை கடந்து செல்ல நாடினால் அது கடந்து செல்ல முடியுமாக காணப்பட்டது.(நூல்:முஸ்லிம்,எண்:496). இவ்விடயத்தில் இவ்வாறு கைகளை அகற்றி வைக்கும் போது இதற்கு முன்னர் ருகூஃவுடைய விடயத்தில் குறிப்பிடப்பட்டது போன்று தன்னை சூழ உள்ளவர்களுக்கு தீங்கிழைக்காத அமைப்பில் இருகும் நிலையில் தான் இவ்வாறு பரிபூரணமாக இதை செய்தலும் ஸுன்னத்தாகும்.

மேலும் ஸுஜூத் செய்யும் போது அவரது இரு தொடைப் பகுதிகளையும் ஒன்றிணைத்து வைத்துக் கொள்ளாது அகற்றி வைத்துக் கொள்வதும்,வயிற்றை அவரின் தொடைப்பகுதியை விட்டும் தூரப்படுத்திக்கொள்ளலும் ஸுன்னத்தாகும்.அபீ ஹுமைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகையை வர்ணிக்கும் விதமாக வந்துள்ள ஹதீஸின் படி அதில் அவர்கள் குறிப்பிடும் போது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையில் ஸுஜூத் செய்தால் அவர்களது தொடையை அகற்றியும் அவர்களது வயிற்றை அதனுடன் இணைக்காமலும் வைத்துக் கொள்வார்கள். (நூல்,அபூ தாவுத்:எண்:735).இவ்வாறு செய்வது இமாம் ஷவ்கானி மற்றும் ஏனைய மார்க்க அறிஞர்களை தொட்டும் வந்துள்ள கூற்றுக்களுக்கு ஏற்ப ஸுன்னத்தான அம்சமாகும்.

இமாம் ஷவ்கானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது இந்த ஹதீஸ் சுஜூதின் போது இரு தொடைகளையும் அகற்றி வைத்துக் கொள்வதையும்,அவற்றை விட்டு வயிற்றை உயர்த்தி வைத்துக் கொள்வதையும் உணர்த்துகிறது.மேலும் இவ்விடயத்தில் கருத்து வேறுபாடுகளும் கிடையாது. (நய்லுல் அவ்தார் 2/257)

## 2 ஸுஜூத் செய்கின்றவரின் கால் விரல் நுணிகள் கிப்லாவை முன்னோக்கியதாக இருப்பது ஸுன்னத்தாகும்.



அபீ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் வாயிலான ஹதீஸின் பிரகராம், அவர்கள் நான் தான் உங்களில் அதிகம் அல்லாஹ்வின் தூதரின் தொழுகையை பற்றி நன்கு அறிந்தவன் என கூறிவிட்டும். அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "சுஜூத் செய்தால் தமது கால் விரல்களின் முனைகளை கிப்லாவை நோக்கியதாக வைத்து கொள்வார்கள்.என கூறினார்கள்". (நூல்,புகாரி, எண்:828)

எனினும் சுஜூதின் போது கை விரல்களை ஒன்றாக இணைத்து கிப்லாவை முன்நோக்கியதாக வைத்துக்கொள்வது தான் ஸுன்னத்தாகும்.இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா,வாயிலாக இமாம் மாலிக் அவர்கள் தமது முஅத்தாவிலும் (முஅத்தாவை-பார்க்க),மேலும் இப்னு அபீ ஷைபா அவர்கள் ஹஃப்ஸ் பின் ஆஸிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக தமது முஸன்னஃபிலும், பதிவாகியுள்ள ஹதீஸில். "தொழுகையில் இரு கைகளையும் விரித்து அதன் விரல்களை இணைத்தும் அவற்றை கிப்லாவின் திசையில் வைத்திருப்பது ஸுன்னத்தாகும்". (பார்க்க, இப்னு அபீ ஷைபா.(1/236).மேலும் வாயில் பின் ஹுஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான பின் வரும் ஹதீஸ் இதறாகான மற்றுமொரு சான்றாகவும் அமைகிறது. "அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுஜூத் செய்தால் கை விரல்களை ஒன்றிணைத்து வைத்துக் கொள்வார்கள்".இதை ஹைஸமீ அவர்கள் தமது மஜ்மஉஸ் ஸவாஇதில் 2/135 ஹஸன் என குறிப்பிட்டுள்ளார்கள்.

## 3 ஸுஜூதின் போது ஓதுமாறு வந்துள்ள துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும்.

سبحان ربي الأعلى

ஆகவே சுஜூத் செய்பவர் "**ஸுப்ஹான ரப்பியல் அஃலா**" எனும் துஆவுடன் மேலும் இதில் ஓதுமாறு வந்துள்ள துஆக்களை ஓதுவது ஸுன்னத்தாகும். **அவ்வாறு வந்துள்ள துஆக்கள் பின்வருமாறு:**

1 سُبْحَانَكَ اللَّهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ، اللَّهُمَّ اغْفِرْ لِي

"**ஸுப்ஹானகல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக, அல்லா ஹும்மக்ஃபிர்லீ**". (நூல்,புகாரி,எண் 794,முஸ்லிம்,எண்:484). இவ்வதீஸை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

2) سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوحِ

**"ஸுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாஇகது வர்ரூஹ்."** (நூல், முஸ்லிம், எண்:487.இவ்வதீஸ் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வாயிலாக வந்துள்ளது).

3) اللَّهُمَّ لَكَ سَجَدْتُ ، وَبِكَ آمَنْتُ ، وَلَكَ أَسْلَمْتُ ، سَجَدَ وَجْهِي لِلَّذِي خَلَقَهُ وَصَوَّرَهُ، وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ، تَبَارَكَ الله أَحْسَنُ الخَالِقِينَ

**"அல்லாஹும்ம லக ஸஜத்து,வபிக ஆமன்து,வலக அஸ்லம்து, ஸஜத வஜிஹிய லில்லதீ கலகஹு,வஸவ்வரஹு, வஷக்க ஸம்அஉ வபஸரஹு, தபாரகல்லாஹு அஹ்ஸனுல் காலிகீன்."** (நூல்,முஸ்லிம்,எண்:771). இதை அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

4) اللَّهُمَّ اغْفِرْ لِي ذَنْبِي كُلَّهُ دِقَّهُ وَجِلَّهُ ، وَأَوَّلَهُ وَآخِرَهُ، وَعَلاَنِيَتَهُ وَسِرَّهُ

**"அல்லாஹும்ம இஃகிஃபிர்லீ தன்பீ குல்லஹு திக்கஹு வஜில்லஹு, வஅவ்வலஹு வஆகிரஹு, வஅலானியதஹு வஸிர்ரஹு."** (நூல், முஸ்லிம், எண்:483) .இதை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

5) اللَّهُمَّ أَعُوذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ ، وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ ، وَأَعُوذُ بِكَ مِنْكَ ، لاَ أُحْصِي ثَنَاءً عَلَيْكَ ، أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

(سبحان ربي العظيم) (سبحان ربي الأعلى)

**"அல்லாஹும்ம அஊது பிரிலாக மின் ஸகதிக,வபிமு ஆஃபாதிக மின் உகூபதிக,வஅஊது பிக மின்க,லா உஹ்ஸீ ஸனாஅன் அலைக,அன்த கமா அஸ்னய்த அலா நஃப்ஸிக."** இவ்வதீஸ் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வாயிலாக வந்துள்ளது.எனவே இவ்வாறு வந்துள்ள துஆக்களில் முடியுமானவரை மாற்றிமாற்றி அவரது ஸுஜூதில் ஓதுவது ஸுன்னத்தாகும். மேலும் ருகூஃவில் அறியப்பட்ட ஒன்றுதான **"ஸுப்ஹான ரப்பியல் அலீம்"** என ஒரு தடவை ஓதுவது கட்டாயமாகும். மேலதிகமாக ஓதுவது ஸுன்னத்தாகும்.அவ்வாறே ஸுஜூதிலும் ஒரு தடவை **"ஸுப்ஹான ரப்பியல் அஃலா"** என ஒரு தடவை ஓதுவதும் கட்டாயமாகும். இரண்டாவது,மூன்றாவது தடவைகள் ஓதுவது ஸுன்னத்தாகும்.

## 4 ஸுஜூதில் அதிகம் பிரார்த்தனை செய்வது ஸுன்னத்தாகும்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வரக்கூடிய ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **"சுஜூத் அதில் நீங்கள் அதிகம் பிரார்த்தனை செய்யுங்கள்.அது உங்கள் பிரார்த்தனை ஏற்றுக் கொள்வதற்கு மிக ஏற்புடையதாக இருக்கும்"** என கூறினார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:479).



## 6 இரு ஸுஜூதுகளுக்கும் மத்தியிலான அமர்வின் போதுள்ள ஸுன்னத்துக்களாவன.

### 1 இடக்காலின் மீது அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக் கொள்ளல்.



அபீ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் நபிகளாரை தொட்டும் வந்துள் ளது அதில் "அவர்கள் இரு ரக்அத்துக்களுக்கு மத்தியில் உட்கார்ந்தால் இடது காலின் மீது அமர்ந்து வலக் காலை நட்டி வைப்பார்கள்".(நூல்,புகாரி,எண்:828)

### 2 இந்த ருகுனை நீட்டுதல்.

முன் சென்ற ஸாபித் அல் புனானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் இதனை அறிவிக்கின்றது.

### 3 ஒருவர் இரண்டாவது, நான்காவது ரக்அத்துக்களுக்காக எழும் போது எழும்புவதற்கு முன்னர் சற்று அமர்வது ஸுன்னத்தாகும்.

இவ்வாறு இதை உறுதிப்படுத்தும் விதமாக மூன்று ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. அவையாவன:

மாலிக் இப்னு அல்ஹுவைரிஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுததை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் தொழுகையின் ஒற்றைப் படையிலான ரக்அத்களின் போது உட்காராமல் (அடுத்த ரக்அத்துக்காக) ஏழ மாட்டார்கள்.(நூல்,புகாரி,எண்:823). மேலும் நபிகளாரை தொட்டும் "**என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்**". என வரக்கூடிய ஹதீஸையும் இந்த மாலிக் பின் அல் ஹுவைரிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களே அறிவிக்கின்றார்கள்.

**(ஜல்ஸதுல் இஸ்திராஹா)** ஸுன்னத்து எனும் விடயம் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.எனினும் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸின் பிரகாரம் மிகச்சரியானது.பொதுவாகவே அது ஸுன்னத்தாகும். இவ்வாறு இது பொதுவான ஸுன்னத்தான அம்சம் என்பதை இமாம்களான அந்நவவி,அஷ்ஷவ்கானி, இப்னு பாஸ், அல்பானி -ரஹிமஹுமுல்லாஹ்- ஆகியோரும், மார்க்க விளக் கங்களுக்கான ஆய்வுக்கும் விளக்கங்களுக்குமான நிலைக் குழுவும் - அல்லஜ்னுதுல் தாஇமா லில் ஃபுஹூஸி இல் மிய்யதி வல் இஃப்தாஹ் வும் -குறித்துக் காட்டுகின்றனர். (பார்க்க:இதன் பல்வேறுபட்ட ஆய்வுகளும் கட்டுரைகளும்: 11/99).(அல்லஜ்னா அத்தஇமா-(6/445-446).

மேலும் இமாம் அந்நவவி ரஹ்மஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது இதுவே சரியானதுமாகும்.இதைனையே ஸஹீஹான ஹதீஸ்களும் உறுதிப்படுத்துகின்றன. (பார்க்க:அல் மஜ்மூஃ 3/441).

## 〈7〉 தஷஹ்ஹுதின்-இறுதி அமர்வு- போதான ஸுன்னத்துக்கள்.

### 1 தொழுபவர் அவரது இடக்காலில் அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக்கொள்வது ஸுன்னத்தாகும்.



இச்செயலை ஒருவர் அவரது தொழுகையின் இரண்டாவது ரக்அத்தின் ருகூஃ, ஸுஜூத்,கியாம், -நிலையில் நிற்றல்-அமர்வுகள் ஆகிய அனைத்தையும் முடித்து விட்டதன் பின்னர் தான் இவ்வாறு அமர்ந்து கொள்வார்.இது நான்கு, இரண்டு,மூன்று ரக்அத்துகள் கொண்டமைந்த எத்தொழுகையாயினும் சரியே.ஆகவே எந்தவொரு தொழுகையிலும் அதன் இரண்டாவது ரக்அத்தின் பின்னரான அமர்வு அபீ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸின் பிரகாரம் இவ்வாறு தான் இருக்கும். அவ்வதீஸில் குறிப்பிடப்படுவதாவது.ஒவ்வொரு இரண்டு ரக்அத்துக்களுக்கு மத்தியிலும் அத்தஹிய்யாத்து ஓதுவார்கள்.அந்த அமர்வில் இடது காலை விரித்து வைத்து வலது காலை நட்டி வைப்பார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:494).

எனினும் நான்கு,மூன்று ரக்அத்துக்கள் கொண்டமைந்த தொழுகைகளின் போதான இறுதி அமர்வின் செயல் வடிவம் பின்னர் குறிப்பிடப்படும்.

### 2 தஷஹ்ஹுதின் போது கைகளை வைக்கும் போது பல்வேறு வழிமுறைகளையும் பின்பற்றுவது ஸுன்னத்தாகும்.

தஷஹ்ஹுதின் போது கைகளை வைக்கும் வழிமுறைகள் இரு முறைகளாகும். அவையாவன:

**முதலாவது:**இரு கைகளையும் தொடையின் மீது வைத்தல்.

**இரண்டாவது:**-இரு கைகளையும் முழங்கால்கள் மீது வைத்து கொள்ளல்,அதாவது வலக் கரத்தை மடக்கியவாறு சுட்டிக் காட்டி,இடக்கரத்தால் முழங்காலை பிடித்துக் கொள்ளலும் ஆகும்-இது பற்றிய தெளிவும்,விளக்கமும் பின்னர் குறிப்பிடப்படும்-இதன் போது இடக்கரம் எப்போதும் விரித்த நிலையில் தான காணப்படும்.





இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையில் (அத்தஹிய்யாத்) அமர்வில் உட்கார்ந்தால்,தம் கைகளை முழங்கால்கள் மீது வைப்பார்கள். பெருவிரலை ஒட்டியுள்ள வலக் கை(சுட்டு) விரலை உயர்த்தி பிரார்த்திப்பார்கள்.ஏனையவற்றை மடித்துக் கொள்வார்கள். மேலும் இடக் கையை இடது கால் மூட்டின் மீது விரித்து வைத்திருப்பார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:580).முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் இடக்கையை இடக்காலின் மீது வைத்து பிடித்துக் கொள்வார்கள்.(முஸ்லிம்,எண்:579).

### 3 தஷஹ்ஹுத் அமர்வில் கையை வைக்கும் போது -ஹதீஸ்களில் வந்துள்ள- வழிமுறைகளில் பல்வேறு முறைகளையும் செயற்படுத்தல் ஸுன்னத்து ஆகும்.

தஷஹ்ஹுதின் போது கையை வைக்கும் முறைகள் இரண்டு காணப்படுகின்றன:

**முதல் வழிமுறை-**வலது கையின் அனைத்து விரல்களையும் மடித்து ஆட்காட்டி வரலால் சுட்டிக் காட்டிக் கொள்ளல், மேலும் இடக்கை விரல்கள் அனைத்தும் நீட்டிய நிலையில் வைத்துக்கொள்ளல்.

முன்னைய இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸில் அவர்கள் கூறுகிறார்கள்:"நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைத்து விரல்களையும் மடக்கி பெருவிரலுக்கு முன்னுள்ள விரலால் சுட்டிக் காட்டுவார்கள்". (நூல்,முஸ்லிம்,எண்:580).

**இரண்டாவது வழிமுறை-**(அரபியர் வழக்கில்) ஐம்பத்து மூன்று என எண்ணுவதைப் போன்று (சிறு விரல்,மோதிர விரல்,நடு விரல் ஆகிய மூன்று விரல்களையும் உள்ளங் கையுடன் சேர்த்து) சுட்டு விரலால் சைகை செய்தல்.இடக்கை எப்போதும் விரித்த வண்ணமே காணப்படும்.




இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அத்தஹிய்யாத் அமர்வில் உட்கார்ந்தால் தமது இடக் கையை இடது கால் மூட்டின் மீதும்,வலக்கையை வலது கால் மூட்டின் மீதும் வைப்பார்கள்.(அரபியர் வழக்கில்) ஐம்பத்து மூன்று என எண்ணுவதைப் போன்று (சிறு விரல், மோதிர விரல்,நடு விரல் ஆகிய மூன்று விரல்களையும் உள்ளங்கையுடன் சேர்த்து) சுட்டு விரலால் சைகை செய்வார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:850)

### 4 மேலும் தஷஹ்ஹுதை அதன் -ஓதப்படக்கூடிய துஆக்களை- பல்வேறுபட்டவகையிலும் அமைத்துக் கொள்ளல் ஸுன்னத்தாகும்.

எனவே இவ்வாறு வந்துள்ளவைகளில் ஒரு தடவை ஒன்றையும் மற்றைய தடவை இன்னொன்றையுமாக கூறுவார். இவ்வாறு வந்துள்ளவைகள் பின்வருமாறு:

1. التَّحِيَّاتُ لِلَّهِ ، وَالصَّلَوَاتُ ، وَالطَّيِّبَاتُ ، السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللَّهِ وَبَرَكَاتُهُ ، السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللَّهِ الصَّالِحِينَ ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

   **"அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து,அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு,வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்,அஷ்ஹது அல்லாயி லாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்".**(இதை அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்,புகாரி,எண்:1202,முஸ்லிம்,எண்:402)

2. التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ ، الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلَّهِ ، السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ

   **"அத்தஹிய்யாத்துல் முபாரக்காத்துஸ் ஸலவாத்துத் தய்யிபாத்து லில்லாஹி,அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு..."** (இதன் பின்னர் இறுதி வரை பூரணப்படுத்தல்).(நூல், முஸ்லிம்,எண்:403), இதை இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

3. التَّحِيَّاتُ الطَّيِّبَاتُ الصَّلَوَاتُ لله ، السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ

   **"அத்தஹிய்யாதுத் தய்யிபாத்துஸ் ஸலவாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹந்நபிய்யு....."** (இதன் பின்னர் இறுதி வரை பூரணப்படுத்தல்) (நூல்,முஸ்லிம்,எண்:404), இதை அபூ மூஸா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்).

### 5 தொழுபவர் அவரின் தொழுகை நான்கு மூன்று ரக்அத்துக்கள் கொண்டமைந்து காணப்படும் போது-அத்தஷஹ்ஹுதுல் அகீர்- இறுதி அமர்வின் போது தவர்ருக் முறையில் அமர்வது ஸுன்னத்தாகும்.

அதாவது இறுதி அமர்வின் போது இடது காலை (வலப் புறமாகக்) கொண்டு வந்து,வலது காலை நட்டி வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படியுமாறு உட்காருதல். இவ்வாறு -தவர்ருக்-முறையிலான அமர்வு பல முறைகளிலும் வந்துள்ளன.

**இவ்வாறான வழிமுறைகளாவன:-**

1. இடது காலை (வலப் புறமாகக்) கொண்டு வந்து, வலது காலை நட்டி வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படியுமாறு உட்காருதல்.



இந்த முறை புகாரியில் (828) இடம்பெற்றுள்ள அபீ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் இடம்பெற்றுள்ளது.



2 இரு கால்களின் மீதும் அமர்ந்து அவற்றை வலப்புறத்தால் வெளிப்படுத்தி தம் இருப்பிடம் தரையில் படியுமாறு உட்காருதல்.

இந்த முறையும் அபூ ஹுமைத் அஸ்ஸாஇதீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் வந்துள்ளது. (நூற்கள்,அபூ தாவுத் (731), இப்னு ஹிப்பான்(1867), பைஹகீ, (2/128). இதை இமாம் அல்பானி -ரஹிமஹுமுல்லாஹு- அவர்கள் ஸஹீஹ் எனக்குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் இந்த தவர்ருக் அமர்வு சரியான கருத்தின் பிரகாரம் அனைத்து இறுதி தஷஹ்ஹுதின் போதும் காணப்பட மாட்டாது.மாறாக அது மூன்று,நான்கு ரக்அத்துக்களை கொண்டமைந்துள்ள தொழுகைகளில் மாத்திரம் காணப்படும், இரண்டு ரக்அத்துக்கள் கொண்ட தொழுகைகளில் அல்ல என்பதையும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

## 6 நபிகளார் மீது ஸலவாத்து சொல்லுவதில் வந்துள்ள பல்வேறுமுறைகளையும் செயற்படுத்தல் ஸுன்னத்து ஆகும்.

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து சொல்வது தொடர்பாக பல்வேறு வழிமுறைகள் வந்துள்ளன.அவற்றை பல்வேறு முறைகளிலும் சொல்வதும் ஸுன்னத்தாகும்.**அவ்வாறு வந்துள்ளவைகள் பின்வருமாறு:**

1 اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ ، كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ ، وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ ، اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ ، كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ ، وَعَلَى آلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹமமதின் வஅலா ஆலி முஹம்மதின்,கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம,வஅலா ஆலி இப்றாஹீம,இன்னக ஹமீதுன் மஜீத்,அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின்,கமா பாரக்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இபாறாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்". (நூல், புகாரி, எண்:3370), இதை கஃப் பின் உஜ்ரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

2 اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ ، فِي الْعَالَمِينَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

"அல்லாஹும்ம, ஸல்லி அலா முஹம்மதின், வ அலா ஆலி முஹம்மதின்,கமா ஸல்லய்த்த அலா ஆலி இப்றாஹீம, வ பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின், கமா பாரக்த அலா ஆலி இப்றாஹீம ஃபில் ஆலமீன இன்னக்க ஹமீதும் மஜீத்".இதை அபூ மஸ்ஊத் அல்அன்சாரி (ரலில்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல், முஸிலிம்,எண்:405).

3. اللَّهُمَّ صَلِّ عَلى مُحَمَّدٍ وَعَلَى أَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى أَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ، كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

**"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹமமதின் வஅலா அஸ்வாஜிஹி வ துர்ரியத்திஹி,கமா ஸல்லய்த்த அலா ஆலி இப்ராஹீம.வ பாரிக் அலா முஹம்மதின் வஅலா அஸ்வாஜிஹி,வதுர்ரியத்திஹி,கமா பாரக்த அலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்".**இதை அபூ ஹுமைத் அஸ்ஸாஇதீ (ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கி ன்றார்கள்).(நூல் ,புகாரி,எண்:3369,முஸ்லிம்,எண்:407)

## 7 தொழுகையில் ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் நான்கு விடயங்களை விட்டும் பாதுகாப்புத்தேடல் ஸுன்னத்தாகும்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஒரு ஹதீஸின் பிரகாரம் அதிகமான மார்க்க அறிஞர்களின்-ரஹிமஹுல்லாஹும்- கருத்தும் இதுவாகவே-ஸுன்னத்தாக- இருக்கின்றது.இதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது **"உங்களில் ஒருவர் இறுதி தஷஹ்ஹுதில் -அமர்வில்-அமர்ந்தால் அதில் நரக்கத்தின் வேதனை, மண்ணரை வேதனை, வாழ்க்கை மற்றும் மரணத்தின் வேதனைகள், மஸீஹ் தஜ்ஜாலின் தீங்குகள் ஆகிய நான்கு விடயங்களை விட்டும் பாதுகாப்பு தேடிக்கொள்ளட்டும்".** (நூல்,முஸ்லிம்,எண்:588, புகாரி,எண்:832).

மேலும் ஸலாம் கொடுப்பதற்கு முன்னராக ஓதப்படக் கூடிய பல்வேறு துஆக்களும் வந்துள்ளன.எனவே தொழுபவர் அவற்றை பல்வேறு விதமாகவும் செயற்படுத்துவது ஸுன்னத்தாகும். **அவ்வாறானவைகள் பின வருமாறு.**

1. اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ من المَأْثَمِ والمغْرَمِ

**"அல்லாஹும்ம! இன்னீ அஊது பிக்க மினல் மஃஸமி வல் மஃக்ரமி."** (நூல்,புகாரி,எண்:832,முஸ்லிம்,எண்:589).

2. اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الجَنَّةَ وَأَعوْذُ بِكَ مِنَ النَّارِ

**"அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஜன்னத வஅஊது பிக மினன்னார்".** (நூல்,அபூ தாவுத், எண்: 792, இவ்வதீஸின் அறிவிப்பாளர் தொடரை இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் அபூதாவுத் (3/377) இல் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

3. اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِي ، إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ

**"அல்லாஹும்ம இன்னீ ழுலம்த்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா யஃக்ஃபிருத் துனூப இல்லா அன்த்த. ஃபஃக்ஃபிர்லீ மஃக்ஃபிரத்தம் மின் இந்திக்க வர்ஹம்னீ.இன்னக்க அன்த்தல் ஃகஃபூருர் ரஹீம்".** இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நூல்,முஸ்லிம்,எண்: 2705)

4) اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ ، وَشُكْرِكَ ، وَحُسْنِ عِبَادَتِكَ

**"அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக, வ ஷுக்ரிக, வஹுஸ்னி இபாததிக".** (நூல், அஹ்மத், எண்:22119, அபூதாவுத், எண்:1522, அந்நஸாஈ, எண்:1304. இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் அல் ஜாமிஃ (2/1320) ல் ஸஹீஹ் என குறிப்பிட் டுள்ளார்கள்.

5) اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْبُخْلِ ، وَأَعُوذُ بِكَ مِنَ الْجُبْنِ ، وَأَعُوذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ، وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا ، وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

**"அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மினல் புக்லி, வ அஊது பிக்க மினல் ஜுப்னி, வ அஊது பிக்க அன் உறத்த இலா அர்தலில் உமுரி, வ அஊது பிக்க மின் ஃபித்னத்தித் துன்யா, வ அஊது பிக்க மின் அதாபில் கப்ர்".** (நூல், புகாரி, எண்:6370)

6) اللَّهُمَّ حَاسِبْنِي حِسَابًا يَسِيرًا

**"அல்லாஹும்ம ஹாஸிப்னீ ஹிஸாபன் யஸீரா".** (நூல் அஹ்மத், எண் : 24215, இமாம் அல்பானி அவர்கள் தஹ்கீக் மிஷ்காதுல் மஸாபிஹ் (2/1320) ல் ஸஹீஹ் என குறிப்பிட் டுள்ளார்கள்).

பின்னர் இறுதியாக திரும்பியவராக ஸலாம் கொடுப்பார். இவ்வாறு தொழுகையில் -ஸலாத்தின் போது-திரும்புவதும் இதை மிகப்பூரணமாக செய்வதும் ஸுன்னத்தாகும். ஏனெனில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். அவர்களது வெண்ணிற கண்ணம் தெரியும் அளவு திரும்பியுள்ளார்கள். இதை சஅத் பின் அபீவக்காஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (தொழுகை முடிக்கும் போது) வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் (முகத்தைத் திருப்பி இருமுறை) சலாம் கூறுவார்கள். (அவ்வாறு திரும்பும்போது) அவர்களுடைய கன்னத்தின் வெண்மையை நான் காண்பேன். (நூல், முஸ்லிம், எண்:582)

## 8) கடமையான தொழுகைகளுக்கு பின்னராக ஓதப்பட வேண்டிய துஆக்கள் ஸுன்னத்தாகும்.

இமாம் அந்நவவியவர்கள் குறிப்பிடும் போது -கடமையான- தொழுகைகளுக்கு பின்னராக ஓதப்பட வேண்டிய துஆக்கள் ஸுன்னத்தாகும். என்பதில் அனைத்து மார்க்க அறிஞர்களும் கருத்தொற்றுமை கொண்டுள்ளனர். (பார்க்க: அல் அத்கார், பக்கம். 66).

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வரக்கூடிய ஹதீஸின் பிரகாரம் இவ்வாறான துஆக்களை ஓதும் போது அவற்றை சப்தமிட்டு ஓதுவதும் ஸுன்னத்தாகும். இதில் அவர்கள் குறிப்பிடும் போது கடமையான தொழுகை முடித்து திரும்பும் போது துஆக்களை உரக்க சப்தமிட்டு ஓதுவது நபிகளாரின் காலத்தில் காணப்பட்டது. (நூல், புகாரி, எண்:841. முஸ்லிம், எண் :583).

அவ்வாறு வந்துள்ள துஆக்கள் பின்வருமாறு:

1. اللَّهُمَّ أَنْتَ السَّلاَمُ وَمِنْكَ السَّلاَمُ ، تبَارَكْتَ ذَا الْجَلاَلِ وَالإِكْرَامِ

"மூன்று தடவைகள் இஸ்திக்ஃபார் செய்வார்-பாவ மன்னிப்பு வேண்டுவார். (அதாவது "அஸ்தக்ஃபிரு ல்லாஹ்" எனக் கூறல்.) "பின்னர் அல்லாஹும்ம அன்தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம்,தபாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்" (நூல்,முஸ்லிம், எண்:591) இதை ஸவ்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

2. لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ، لاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَلاَ نَعْبُدُ إِلاَّ إِيَّاهُ، لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ ، وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ ، لاَ إِلَهَ إِلاَّ اللهُ مُخْلِصِينَ لَهُ الدِّينَ ، وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ

"லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு,லஹுல் முல்க்கு, வ லஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ். லா இலாஹ இல்லல்லாஹு, வ லா நஅபுது இல்லா இய்யாஹு லஹுந் நிஅமத்து வ லஹுல் ஃபள்லு. வ லஹுஸ் ஸனாஉல் ஹசனு. லா இலாஹ இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலவ் கரிஹல் காஃபிரூன்"(நூல், முஸ்லிம்,எண்:596).

3. لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ، اللَّهُمَّ لاَ مَانِعَ لِمَا أَعْطَيْتَ، وَلاَ مُعْطِيَ لِمَا مَنَعْتَ ، وَلاَ يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

"லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு,லா ஷரீக்க லஹு,லஹுல் முல்க்கு, வ லஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லா மானிஅ லிமா அஃதைத்த வலா முஉத்திய லிமா மனஉத்த. வலா யன்ஃபஉ தல்ஜத்தி மின்க்கல் ஜத்" (நூல்,புகாரி,எண்:844, முஸ்லிம்,எண்: 593).

4. பின்னர் வந்துள்ள தஸ்பீஹ் வழிமுறைகளை கூறுவார். அவ்வாறு வந்துள்ள வழிமுறைகளாவன:

سبحان الله، والحمد لله، والله أكبر

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

முதலாவது-"ஸுப்ஹானல்லாஹ் (33) தடவைகள்.அல் ஹம்து லில்லாஹ் (33) தடவைகள், அல்லாஹு அக்பர் (33) தடவைகள்.நூறை பூரணப்படுத்துவதற்காக லாஇலாஹ இல்லலாஹு வஹ்தஹு......."எனக்கூறல்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:யார் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் முப்பத்து மூன்று முறை "சுப்ஹானல் லாஹ்" என்றும், முப்பத்து மூன்று முறை "அல்ஹம்து லில்லாஹ்" என்றும், முப்பத்து மூன்று முறை "அல்லாஹு அக்பர்" என்றும் ஆக மொத்தம் தொன்னூற்று ஒன்பது

**முறை கூறி, இறுதியில் நூறாவது முறையாக "லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு,லா ஷரீக்க லஹு,லஹுல் முல்க்கு, வ லஹுல் ஹம்து. வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்" என்று நிறைவு செய்கிறாரோ அவருடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்படுகின்றன.அவை கடலின் நுரையளவு இருந் தாலும் சரியே!** (நூல்,முஸ்லிம்,எண்:597)

**سبحان الله، والحمد لله، والله أكبر**

**இரண்டாவது- ஸுப்ஹானல்லாஹ் (33) தடவைகள். அல் ஹம்துலில்லாஹ் (33) தடவைகள், அல்லாஹு அக்பர் (34) தடவைகள்.** இதைக் கஅப் பின் உஜ்ரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:தொழுகைக்குப் பின் ஓதப்படும் சில துதிச் சொற்கள் உள்ளன.அவற்றை ஓதிவருபவர் நட்டம் அடைய மாட்டார்.(அவையாவன) ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் முப்பத்து மூன்று முறை "**சுப்ஹானல்லாஹ்**" என்றும் முப்பத்து மூன்று முறை "**அல்ஹம்து லில்லாஹ்**" என்றும் முப்பத்து நான்கு முறை "**அல்லாஹு அக்பர்**" என்றும் கூறுவதாகும்.

ஸுப்ஹானல்லாஹ் 33 தடவைகள்.அல் ஹம்துலில்லாஹ் 33 தடவைகள்,அல்லாஹு அக்பர் 34 தடவைகள். (நூல்,முஸ்லிம்,எண்:596)

**سبحان الله، والحمد لله، والله أكبر، ولا إله إلا الله**

**மூன்றாவது- {ஸுப்ஹானல்லாஹ் (25) தடவைகள்}.{அல் ஹம்துலில்லாஹ் (25) தடவைகள்},{அல்லாஹு அக்பர் (25) தடவைகள், லாஇலாஹ இல்லல்லாஹு (25) தடவைகள்}.**

இந்த வழிமுறைக்கான ஹதீஸ் அப்தில்லாஹ் பின் ஸைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக திர்மிதியில் இடம் பெற்றுள்ளது.(3413).இமாம் அல்பானி அவர்கள் (தஹ்கீக் மிஷ்காதுல் மஸாபிஹ் (2/307) ல் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

**سبحان الله، والحمد لله، والله أكبر**

**நான்காவது- {ஸுப்ஹானல்லாஹ் 10 தடவைகள்}.{அல் ஹம்துலில்லாஹ் 10 தடவைகள்},{அல்லாஹு அக்பர் 10 தடவைகள்}.**

இந்த வழிமுறைக்கான ஹதீஸ் அப்தில்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக திர்மிதியில் இடம் பெற்றுள்ளது.(3410).இமாம் அல்பானி அவர்கள் (தஹ்கீக் மிஷ்காதுல் மஸாபிஹ் (2/743) ல் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

முன்னர் சொல்லப்பட்ட ஒரு பொதுவான விதியின் பிரகாரம் வணக்கங்களில் பல்வேறு வழிமுறைகள் காணப்படும் போது அவ்வாறே அவற்றுள் ஒரு தடவையும் மறு தடவை மற்றொன்றையுமாக பல்வேறு முறைகளையும் செயற்படுத்துவது ஆகும்.

மேலும் அஹ்மத்,திர்மிதி ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் இடம் பெற்றுள்ள ஹதீஸின் பிரகாரம் கைவிரல்களால் தஸ்பீஹ் செயவது தான் ஸுன்னத்தாகும்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது "**நிச்சயமாக தஸ்பீஹ் செய்யும் போதும் அதை கணக்கிடும் போது கைவி ரல்களால் கணக்கிட்டுக்**

**கொள்ளுங்கள் ஏனெனில் அவை வினவப்பட கூடியவைகளாகவும்,பேசப்படக் கூடியவைகளாகவும் இருக்கின்றன."** (நூல்,திர்மிதி,எண்.3486, இமாம் அல்பானி அவர்கள் (ஸஹீஹ் அல் ஜாமிஃ (2/753) ல் ஹஸன் என குறிப்பிட்டுள்ளார்கள்.

### 5 ஆயத்துல் குர்ஸியை ஓதுவது.

அபீ உமாமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.எவர் ஒருவர் கடமையான அனைத்து தொழுகைகளுக்கு பின்னரும் ஆயத்துல் குர்ஸியை ஓதிவருவாராயின் அவரின் சுவன நுழைவுக்கு மரணம் தவிர வேறு ஒன்றும் தடையாக அமைந்து விடாது.(நூல்,அந்நஸாஈ அஸ்ஸுனன் அல் குப்ரா, எண்:9928,இதை இமாம் அல் முன்திரி அவர்கள் அவர்களது அத்தர்ஹீப் வத்தர்ஹீப்,எண் (2373) எனும் நூலில் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.மேலும் இமாம் அப்துல் ஹாதீ அவர்கள் அல் முஹர்ரர் (1/198) எனும் நூலிலும் இப்னு கையிம் அவர்கள் ஸாதுல் மஆதிலும் (1/303).லும் குறிப்பிட்டுள்ளனர்.

### 6 அல் முஅவ்விதைதன் -{குல் அஊது பிரப்பில் ஃபலக்}, {குல் அஊது பிரப்பின் நாஸ்}. எனும் இரு அத்தியாயங்களையும் -ஓதுவது.


உக்பத் பின் ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் "ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்கு பின்னரும் அல் முஅவ்விதைதனை ஓதும் படி எனக்கு கட்டளையிட்டார்கள்.என கூறுகின்றார்கள் (நூல்,அபூதாவுத், எண்:1525),மேலும் இமாம் அல்பானி அவர்கள் "நான் இதன் அறிவிப்பாளர் தொடர் சீரானது" என கூறினேன்.இதை இமாம் இப்னு குஸைமா,இப்னு ஹிப்பான் ஆகியோர் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளனர்.ஸஹீஹ் அபூ தாவுத்(5/254).

இவை தான் ஒரு தொழுகையாளினுடைய தொழுகை தொடர்பான ஸுன்னத்தான அம்சங்களின் தொகுப்பு.இன்னும் நாம் ஃபஜ்ரின் ஸுன்னத்துக்கள் தொடர்பான அம்சங்களை தான் குறிப்பிட்டுக்கொண்டிருக்கின்றோம்.ஆயினும் இவை ஒவ்வொரு தொழுகையின் போதும் முன்னிறுத்திக்கொள்ளும் தேவையின் காரணமாகவே இங்கு இவற்றை நாம் குறிப்பிட்டுள்ளோம்.-யாவற்றையும் மிக நன்கறிந்தவன் அல்லாஹ்வே-

## 9 ஃபஜ்ர் தொழுகை நிறைவேற்றிய பின்னர் சூரிய உதயம் வரை தொழுமிடத்திலேயே அமர்ந்து இருப்பது ஸுன்னத்தாகும்.

ஜாபிர் பின் சமுரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுது விட்டு தொழுத இடத்திலேயே சூரியன் நன்கு உதயமாகும் வரை அமர்ந்திருப்பார்கள். (முஸ்லிம்,எண்.670),

இவ்வஹீஸில் வந்துள்ள "ஹஸனன்" எனும் வார்த்தையின் அர்த்தம் நன்கு உதிக்கும் வரை என்பதாகும்.



- ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் எந்த நிழலும் அற்ற அந்த நாளில் ஏழு நபர்களுக்கு அவனின் நிழலின் கீழ் நிழல் அளிப்பான் அதில் ஒருவராக பள்ளியுடன் தொடர்ப்பை பேணும் உள்ளத்தை கொண்ட ஒரு மனிதர் என குறிப்பிட்டார்கள்.

## காலை நேர திக்ருகள்



காலை நேர திக்ர்களின் நேரம் ஃபஜ்ர் உதயத்திலிருந்து ஆரம்பமாகும். எனவே முஅத்தின் ஃபஜ்ர் தொழுகைக்கு அதான் கூறியது முதல் காலை நேர திக்ருகளின் நேரம் ஆரம்பமாகிறது.நிச்சயம் இந்த திக்ருகள் ஒரு அடியானின் பலமான கோட்டையாகவும்,கேடயமாகவும்,மறுமையில் மிகப் பெரிய பொக்கிஷமாகவும் திகழ்கின்றன.

## காலை மாலை திக்ருகள்.பின்வருமாறு.

1 لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

"எவர் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)க லஹு,லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்". என காலையை அடையும் போது பத்து தடவைகள் கூறுகின்றாரோ அவருக்கு நூறு பாவங்கள் அழிக்கப்பட்டு நூறு நன்மைகள் எழுதப்படும்.மேலும் இது ஒரு அடிமையை விடுதலை செய்தமைக்கு நிகராகும்.இன்னும் அன்றைய தினம் மாலையை அடையும் வரை வானவர்களின் பாதுகாப்பும் கிட்டுகிறது.இவ்வாறே ஒருவர் மாலையில் கூறும் போதும் இவ்வாறே இதன் -பலன்கள்- உள்ளன".(நூல்,அஹ்மத், எண்8719,இமாம் இப்னு பாஸ் ரஹ்மதுல்லாஹ் அவர்கள் இதன் அறிவிப்பாளர் தொடர் வரிசையை ஹஸன் என குறிப் பிட்டுள்ளார்கள்.

2 أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلَّهِ ، وَالْحَمْدُ لِلَّهِ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ خَيْرِ هَذِهِ اللَّيْلَةِ وَخَيْرِ مَا فِيهَا، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا فِيهَا ، اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْكَسَلِ وَالْهَرَمِ ، وَسُوءِ الْكِبَرِ، وَفِتْنَةِ الدُّنْيَا ، وَعَذَابِ الْقَبْرِ

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلَّهِ... أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذَا الْيَوْمِ وَخَيْرَ مَا بعده، وَأَعُوذُ بِك مِنْ شَرِّ مَا فِي هَذا الْيَوم وَشَر مَا بَعْدِه

"அம்ஸைனா வஅம்ஸல் முல்(க்)கு லில்லாஹி, வல்ஹம்து லில்லாஹி, லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீ(க்)க லஹு, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக அஸ்அலு(க்)க கைர மாஃபீ ஹாதிஹில் லைலத்தி வ கைர மா ஃபீஹா,வஅவூது பி(க்)க மின் ஷர்ரிஹா,வஷர்ரி மா ஃபீஹா, அல்லாஹும்ம இன்னீ அவூது பி(க்)க மினல் கஸ்லி, வல்ஹரமி,வஸூயில் கிபரி, வஃபித்னதித் துன்யா, வஅதாபில் கப்ரி, எனவும் மேலும் காலையை அடையும் போது அஸ்பஹ்னா வஅஸ்பஹல் முல்(க்)கு லில்லாஹி..... அஸ்அலுக கைர மா ஃபீ ஹாதல் யவ்மி வகைர மா பஃதஹு,வஅஊது பிக மின் ஷர்ரி மா ஃபீ ஹாதல் யவ்மி வஷர்ரி மா பஃதஹு....." (நுல்,முஸ்லிம்,எண் 2723)

3 اللَّهُمَّ أَنْتَ رَبِّي لَا إِلَهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِي,وَأَنَا عَبْدُكَ,وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

பாவமன்னிப்பு கோருவதில் தலையாய துஆ **"அல்லாஹும்ம! அன்த்த ரப்பீ.லா இலாஹ இல்லா அன்த்த. கலக்த்தனீ.வ அன அப்துக்க.வ அன அலா அஹ்திக்க, வ வஅதிக்க மஸ்ததஅத்து.அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஅத்து.அபூ உ லக்க பி நிஅமத்திக்க அலய்ய, வ அபூ உ லக்க பி தன்பீ. ஃபஃக்பிர்லீ. ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துனூப இல்லா அன்த்த"** என்று ஒருவர் கூறுவதே தலை சிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறப்பவர் சொர்க்க வாசிகளில் ஒருவராக இருப்பார். **இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்து விடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.**(நூல் புகாரி,எண் 6306)

4 اللَّهُمَّ بِكَ أَصْبَحْنَا، وَبِكَ أَمْسَيْنَا، وَبِكَ نَحْيَا، وَبِكَ نَمُوتُ، وَإِلَيْكَ النُّشُورُ

اللَّهُمَّ بِكَ أَمْسَيْنَا وَبِكَ أَصْبَحْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوتُ وَإِلَيْكَ الْمَصِيرِ

**"உங்களில் ஒருவர் காலையை அடைந்தால் அவர் அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா,வபிக அம்ஸய்னா,வபிக நஹ்யா, வபிக நமூது வஇலைகன் நுஷூர்,எனவும் மாலையை அடைந்தால் அவர் அல்லாஹும்ம பிக அம்ஸய்னா வபிக அஸ்பஹ்னா வபிக நஹ்யா,வபிக நமூது வஇலைகல் மஸீர் என கூறிக்கொள்ளட்டும்"** (நூல்,அபூதாவுத்,எண்: 5069, திர்மிதி, எண்:3391), அந்நஸாஈ அஸ்ஸுனன் அல் குப்ராவிலும், (9836), இப்னு மாஜா,எண்:3868),ஆகியோர் பதிவு செய்ய இமாம் பின் பாஸ் ரஹ்மதுல்லாஹ் அவர்கள் இதை ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

5 اللَّهُمَّ فَاطِرَ السَّمَوَاتِ وَالْأَرْضِ ، عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيكَهُ ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي وَمِنْ شَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ ، وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوءًا ، أَوْ أَجُرَّهُ إِلَى مُسْلِمٍ

**"அல்லாஹும்ம ஃபா(த்)திரஸ் ஸமாவாத்தி வல் அர்ளி, ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாத(த்)தி , லாஇலாஹ இல்லா அன்த ரப்ப குல்லி ஷையின் வமலீ(க்)கஹு, அஊது பி(க்)க மின் ஷர்ரி நஃப்ஸீ வஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி, வஅன் அக்தரிஃப அலா நஃபஸீ ஸூஅன்,அவ் அஜுர்ரஹு இலா முஸ்லிமின்.** நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் **"நீர் நித்திரை கொள்ளும் போதும், காலையையும், மாலையையும் அடையும் போதெல்லாம் இதை கூறிக்கொள்வீராக என".** (நூல்,அஹ்மத்,எண்:6597,அபூ தாவுத், எண்:5076,அத்திர்மிதி,எண்:3529,அந்நஸாஈ,எண்: 7699). இமாம் இப்னு பாஸ் ரஹ்மதுல்லாஹ் அவர்கள் இதன் அறிவிப்பாளர் தொடர் வரிசையை சீரானது ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்).

6 بِسْمِ اللَّهِ الَّذِي لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ

**எவரொருவர் ஒவ்வொரு காலை மற்றும் மாலைப்பொழுதின் போது "பிஸ்மில்லாஹில்லதீ லா யதுர்ரு மஅஸ்மிஈ ஷய்உன் ஃபில் அர்லி வலா ஃபிஸ்ஸமாஇ" என மூன்று தடவைகள் ஓதுவார் எனின் அவருக்கு எந்த தீங்கும் ஏற்பட மாட்டாது.** (நூல்,அஹமத்,எண்:446,அத்திர்மிதீ,எண்:10179, இப்னு மாஜா எண்:3869,இப்னு பாஸ் ரஹ்மஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது இதை இமாம் திர்மிதி அவர்கள் இவ்வதீஸ் ஹஸன்,ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.இது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியது போன்றே ஆகும்.

7 رَضِيتُ بِاللَّهِ رَبًّا , وَبِالْإِسْلَامِ دِينًا , وَبِمُحَمَّدٍ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ نَبِيًّا

**"எந்தவொரு முஸ்லிம் அடியானும் அவன் காலை,மாலை அடையும் போது" ரலீது பில்லாஹி ரப்பா,வபில் இஸ்லாமி தீனா,வபிமுஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம நபிய்யா" எனக்கூறினால் அவரை அல்லாஹ் மறுமை நாளில் பொறுந்திக்கொள்வது கட்டாயமாகி விடுகிறது.** (நூல்,அஹ்மத், எண்: 18967, அத்திர்மிதி, எண்:3389, இப்னு மாஜா,எண்: 3870, இதன் அறிவிப்பாளர் தொடர் வரிசையை ஹஸன் என இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

8 اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ ، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي دِينِي وَدُنْيَايَ ، وَأَهْلِي وَمَالِي ، اللَّهُمَّ اسْتُرْ عَوْرَاتِي، وَآمِنْ رَوْعَاتِي، اللَّهُمَّ احْفَظْنِي مِنْ بَيْنِ يَدَيَّ وَمِنْ خَلْفِي ، وَعَنْ يَمِينِي وَعَنْ شِمَالِي ، وَمِنْ فَوْقِي ، وَأَعُوذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِي

**"அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக அல் ஆஃபியத ஃபித்துன்யா வல் ஆகிரா,அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக அல் அஃப்வ வல் ஆஃபியத ஃபீ தீனீ வதுன்யாய,வஅஹ்லீ வமாலீ,அல்லாஹும்ம ஸ்துர் அவ்ராதீ,வஆமின் ரவ்ஆதீ, அல்லாஹும்மஹ்ஃபத்னீ மின் பய்னி யதய்ய வமின் கல்ஃபீ, வஅன் யமீனீ,வஅன் ஷிமாலீ,வமின் ஃபவ்கீ, வஅஊது பிஅதமதிக அன் உக்தால மின் தஹ்தீ".**(நூல்,அஹ்மத் அவர்களது முஸ்னத் கிரந்தத்தில்,எண்:4785,அபூ தாவுத், எண்:5074,இமாம் அந்நஸாஈ அவர்களது அல் குப்ரா எனும் நூலில்,எண்:10401,இப்னு மாஜா எண்:3871,மேலும் இதை இமாம் ஹாகிம் அவர்கள் ஸஹீஹ் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

9 أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

**"அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மாதி மின் ஷர்ரி மா அலக்."** (நூல், அஹ்மத், எண் 7898, திர்மிதி, எண்:3437). இவ்வதீஸை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். மேலும் இமாம் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இது ஹஸன் என குறிப்பிடுகி றார்கள்.

10 أَصْبَحْنَا عَلَى فِطْرَةِ الْإِسْلَامِ ، وَكَلِمَةِ الْإِخْلَاصِ، وَدِينِ نَبِيِّنَا مُحَمَّدٍ – صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ –وَمِلَّةِ أَبِينَا إِبْرَاهِيمَ حَنِيفًا، وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ

அல்லாஹ்வின் தூதரவர்கள் காலையில் **"அஸ்பஹ்னா அலா ஃபித்ரதில் இஸ்லாமி, வகலிமதில் இக்லாஸி வதீனி நபிய்யினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம, வமில்லதி அபீனா இப்றாஹீம ஹனீஃபன்,வமா கான மினல் முஷ்ரிகீன்"**.என கூறுவார்கள். (நூல்,அஹ்மத், எண்: 21144, 15367, மேலும் மாலையில் **"அம்ஸய்னா அலா ஃபித்ரதில் இஸ்லாமி.."** எனவும் ஓதுவார்கள்.இமாம் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதன் அறிவிப்பாளர் தொடரை ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

முன் குறிப்பிடப்பட்ட அனைத்தும் இமாம் பின்பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் **(துஹ்ஃபதுல் அக்யார் பிபயானி ஜும்லதன் நாஃபிஆ மிம்மா வரத ஃபில் கிதாபி வஸ்ஸுன் னதி மினல் அத்இயதி வல் அத்கார்)** எனும் நூலின் காலை மாலை அத்கார்கள் தொடர்பான பாடம் எனும் பகுதியிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்டவைகளாகும்.


11 يَا حَيُّ يَا قَيُّومُ بِرَحْمَتِكَ أَسْتَغِيثُ أَصْلِحْ لِي شَأْنِي كُلَّهُ ، وَلَا تَكِلْنِي إِلَى نَفْسِي طَرْفَةَ عَيْنٍ

**"யா ஹய்யூமு பிரஹ்மதிக அஸ்தகீஸு அஸ்லிஹ் லீ ஷஃனீ குல்லஹு,வலா தகில்னீ இலா நஃப்ஸீ தரஃபத அய்னின்."** (நூல்,அந் நஸாஈ,எண்:10405),அல்பஸ்ஸார்.(2/282). இமாமகளான இப்னு ஹஜர்,அல் பானி ஆகியோர் இவ்வதீஸை ஹஸன் என குறிப்பிட்டுள்ளனர்.(பார்க்க நதா இஜுல் அஃப்கார்,177,அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா (1/449).

12 حَسْبِيَ الله لاَ إِلهَ إِلاَّ هُوَ عَلَيْهِ تَوَكَّلتُ وَهُوَ رَبُّ الْعَرشِ الْعَظِيمِ

**"ஹஸ்பியல்லாஹு லா இலாஹ இல்லா ஹுவ தவக்கல்து வஹுவ ரப்புல் அர்ஷில் அதீம்"** என ஏழு தடவைகள் கூறினால் அனைத்து கவலைகளுக்கும் அல்லாஹ்வே போதுமானவன்.(நூல்,அபூதாவுத்,எண்:5081, இவ்வதீஸ் அபூ தர் ரலியல்லாஹு அன்ஹு வாயிலான அறிவிப்பாளர் தொடர் நபிகளார் வரை சென்றடையாது துண்டித்த வகையில் வந்துள்ள போதிலும் இதில் மிகச் சரியானது நபிகளாரை விட்டும் துண்டிக்கப்பட்ட -அதாவதுமவ்கூஃப்- தரத்தை கொண்டது.எனினும் இமாம் அல் பானி அவரிகள் குறிப்பிடுவது போன்று.இதன் சட்டம் நபிகளாரை விட்டும் துண்டிக் காத தொடரை கொண்டதாகும்.(பார்க்க:அஸ்ஸில்ஸிலா: 11/449)

## மூன்றாவது: லுஹாவின் நேரம்



லுஹாவின் நேரத்தில் ஒரு அடியான் **(லுஹாத்)** தொழுகை தொழுவது ஸுன்னத்தாகும்.

### பின்வரும் ஹதீஸ் இதற்கான சான்றாக இருக்கிறது.

1. அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்:"**என் உற்ற தோழர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது,இரண்டு ரக்அத்கள் ளுஹாத் தொழுவது, வித்ர் தொழுது விட்டு உறங்குவது ஆகிய மூன்று விஷயங்களையும் எனக்கு அறிவுறுத்தினார்கள். மேலும் இதை நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூ தர்தா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் உபதேசம் செய்தார்கள்**".(முஸ்லிமில்,எண்:722)ல் இடம் பெற்றுள்ளது. மேற்கண்ட ஹதீஸ் எனக்கு எனது உற்ற நண்பர் உபதேசம் செய்தார்கள் என அபூ தர்தா ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக.அந்நஸாஈ இமாமின் அஸ்ஸுனன் அல் குப்ராவில் இலக்கம் 2712) ல் இடம் பெற்றுள்ளது. மேலும் இமாம் அல் பானியவர்கள் தமது அஸ்ஸஹீஹா (2166) எனும் நூலில் இதை ஸஹீஹ் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

2 அபீ தர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:"**ஒவ்வொரு மனிதரும் அவரது மூட்டுக்களுக்கும்.அவை ஒவ்வொன்றுக்கும் தர்மம் செய்ய வேண்டும்,எனவே ஒவ்வொரு தஸ்பீஹும்-ஸுப்ஹான ல்லாஹ்-வும் ஸதகாவாகும்,ஒவ்வொரு தஹ்லீலும் -லா இலாஹ இல்லல்லாஹு -வும் தர்மமாகும்,ஒவ்வொரு தக்பீரும் -அல்லாஹு அக்பர் -உம் தர்மம் ஆகும்.நன்மையை ஏவுவதும் தர்மம் ஆகும்,தீமையை தடுப்பதும் தர்மம் ஆகும். லுஹாவின் நேரத்தில் தொழக்கூடிய இரண்டு ரக்அத்துக்கள் இவை அனைத்துக்கும் நிகரானது,போதுமானது ஆகும்**". (நூல்,முஸ்லிம்,எண்:720)

ஸஹீஹ் முஸ்லிம் கிரந்தத்தில் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா வாயிலாக வந்துள்ள ஹதீஸின் படி மனிதன் முன்னூற்றி அறுபது மூட்டுக்களை கொண்டு படைக்கப்பட்டுள்ளான்.இவை ஒவ்வொன்றுக்குமாக ஸதகாவை நிறை வேற்றும் போது கொடிய நரக நெறுப்பை விட்டும் தன்னை தூரப்படுத்திக் கொண்டவாராக பயணிக்கின்றார்.

## நிறைவேற்றப்படுவதற்கான நேரம்.

இதன் நேரம் -சூரியன் உதித்து ஒரு ஈட்டியின் அளவு உயர்ந்தது- முதல் ஆரம்ப மாகிறது.அதாவது தொழுவதற்கு தடுக்கப்பட்ட நேரம் முடிந்தது முதல் ஆகும்.

மேலும் இதன் நேரம் முடிவடைவது ஸவாலுடைய நேரத்துக்கு சற்று முன்னர் ஆகும்.அதாவது சுமார் லுஹர் தொழுகையின் நேரத்துக்கு பத்து நிமிடங்களுக்கு முன்னர்.

இதை பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.அமர் பின் அபஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஹதீஸில் நபிகளார் குறிப்பிடுகின்றாரிகள்."**நீர் ஸுபஹ் தொழுகையை தொழுது விட்டால் பின்னர் சூரியன் உதித்து அது உயரும் நேரம் வரை தொழாது தவிர்ந்து இருப்பீரக.இதன் பின்னர் நிழல் ஒரு ஈட்டியின் அளவு நிலைக்கும் வரை தொழுவீராக ஏனெனில் இத்தொழுகை சாட்சியமளிக்கக்கூடியதும்,சமூகமளிக்கப்படக் கூடியதுமாகும். பின்னர் தொழுவதை விட்டும் தவிர்ந்து கொள்வீராக. ஏனெனில் இந்நேரத்தில் தான் நரகம் எறியூட்டப்படுகிறது**". (நூல்,முஸ்லிம்,எண்:832)

## இது -நிறைவேற்றுவதற்கான- மிகச்சிறப்பான நேரம்.

இதன் கடைசி நேரமாகும்.அதாவது ஒட்டக குட்டிகள்-வெப்பம்-காரணமாக ஒதுங்கும் நேரத்திலாகும்.

ஸைத் பின் அர்கம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் **"சுடுமணலில் ஒட்டகக்குட்டியின் கால் குழம்புகள் கரிந்து விடும் நேரமே அவ்வாபீன் தொழுகையின் நேரமாகும்" எனக் கூறினார்கள்".** (முஸ்லிம்,எண்:748)

## அதன் ரக்அத்துக்களின் எண்ணிக்கை.

லுஹாத் தொழுகையின் மிக குறைந்த ரக்அத்துக்களின் எண்ணிக்கை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் இரண்டு ஆகும். அந்த ஹதீஸில் "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு மூன்று விடயங்களை கொண்டு உபதேசம் செய்தார்கள்,அதில் இரு ரக்அத் லுஹா தொழுகையையும் குறிப்பிட்டார்கள்".(நூல்,புகாரி,எண்:1981,முஸ்லிம், எண்:721).

எனினும் இதன் அதிகப்படியான ரக்அத்துக்களின் எண்ணிக்கையை -நோக்குமிடத்து- இதன் கூடிய ரக்அத்துக்கள் எட்டு ரக்அத்துக்கள் தான் என வரையறை செய்தவர்களுக்கு மாற்றமாக மிகச்சரியான கருத்து,அதற்கென குறித்ததொரு எண்ணிக்கை கிடையாது.அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் ஒருவர் தான் நாடினால் அல்லாஹ் அவருக்கு வசதியை ஏறபடுத்தினால் எட்டு ரக்அத்துக்களை விடவும் அதிகரித்தும் தொழுது கொள்ள முடியும்.அவ்வதீஸில் அவர்கள் குறிப்பிடும் போது அல்லாஹ்வின் தூதர் லுஹா தொழுகையை நான்கு ரக்அத்துக்களாக தொழுவார்கள்.மேலும் இதை அல்லாஹ்வின் நாட்டப்படி அதிகரித்தும் தொழுவார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்: 719).



◆ லுஹா தொழுகையின் மகத்துவம் காரணமாக அவரது தோழர்களுக்கு அதை கடைப்பிடிக்கும் படி நல்லுபதேசம் செய்தார்கள்.

## நான்காவது:லுஹருடைய நேரம்



இதன் போது செய்ய வேண்டிய பல அம்சங்கள் உள்ளன:

### முதல் அம்சம்:லுஹர் தொழுகையின் முன் பின் ஸுன்னத்து தொழுகை.

ஸுனன் அர்ரவாதிப் எனும் பகுதியில் அன்னை ஆயிஷா, உம்மு ஹபீபா,இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் அறிவிக்கும் ஹதீஸ்களின் பிரகாரம் லுஹருக்கு முன்னர் நான்கும் பின்னர் இரண்டுமாக தொழுவது ஸுன்னத்தாகும் இது ஏலவே குறிப்பிடப்பட்டது.

### இரண்டாவது அம்சம்:லுஹர் தொழுகையின் முதல் ரக்அத்தை நீட்டித் தொழுவது ஸுன்னாவாகும்.

அபூசயீத் அல்குத்ரீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள்:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது காலத்தில் லுஹர் தொழுகைக்காக இகாமத் சொல்லப்படும்.அப்போது ஒருவர் பகீஉல் கர்கத் பகுதிக்குச் சென்று இயற்கைக் கடனை நிறைவேற்றி,அங்கத் தூய்மை செய்து விட்டுத் திரும்பி வந்து விடுவார். அப்போதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முதல் ரக்அத்திலேயே இருந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் (முதல் ரக்அத்தில்) நீண்ட நேரம் (குர்ஆன் வசனங்களை) ஓதிவந்ததே இதற்குக் காரணம்.(நூல்,முஸ்லிம், எண்:454)

ஆகவே இமாம் லுஹரின் முதல் ரக்அத்தை நீட்டி தொழுவதும்,அவ்வாறே தனித்து தொழுபவரும்,பெண் அவரது லுஹர் தொழுகையின் போதும் நீட்டித் தொழுவதும் ஸுன்னத்தாகும்.இது மறக்கடிக்கப்பட்ட ஒரு ஸுன்னாவாகவே காணப்படுகிறது.இதை மிகப்பரிபூரணமாகவும் ஆர்வத்துடனும் செயற்படுத்த அல்லாஹ்வின் துணையை வேண்டுகிறேன்.

### மூன்றாவது அம்சம்: வெப்பமான காலப்பகுதியில் லுஹர் தொழுகையையை வெப்பம் தணியும் வரை பிற்படுத்துவது ஸுன்னத்தாகும்.

**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கின்றது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். **"வெப்பம் நிறைந்த நாளில் அது தணியும் வரை (லுஹர்) தொழுகையை தாமதப் படுத்துங்கள். ஏனெனில்,கடுமையான வெப்பம், நரக நெருப்பின் பெருமூச்சு காரணமாகவே உண்டாகிறது"**. இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்,புகாரி, எண்:533,534. முஸ்லிம்,எண்:615).

எமது மார்க்க ஆசிரியரான அஷ்ஷைக் பின் உஸைமீன் ரஹ்மஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது உதாரமாணமாக நாம் கோடைக்காலத்தில் சுமாராக பன்னிரெண்டு மணிக்கு சூரியன் நடு உச்சியிலிருந்து சாயும்-ஸவாலுடைய நேரம்- என வைத்து கணிப்பிட்டால்,சுமாராக அஸர் தொழுகையின் நேரம் நான்கரை (4:30pm) மணியளவிலாகும்.ஆகவே -இதன் பிரகாரம்- வெப்பம் தணியும் நேரம் -லுஹரை வெப்பம் தணியும் வரை பிற்படுத்துவது- சுமாராக நான்கு மணி வரையிலாகும்.(பார்க்க:ஸாதுல் மும்திஃ (2/104)

இதன் பிரகாரம் ஜமாத்துடன் கூட்டமாக தொழுபவர்,தனித்து தொழுபவர் என அனைவருக்கும் இவ்வாறு லுஹரை வெப்பம் தணியும் வரை பிற்படுத்துவது மிகச் சரியான கருத்தின் பிரகாரம் பொதுவானதொரு அம்சமாகும்.இதுவே எமது ஆசிரியர் அஷ்ஷைக் பின் உஸைமீன் ரஹ்மஹுல்லாஹ் அவர்களது தெரிவுமாகும்.எனவே இதன் படி பெண்களும் இச்சட்டத்திற்குள் நுழைந்து விடுவர்.எனவே அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் பொதுவாகவே வந்துள்ள ஹதீஸின் பிரகாரம் பெண்களும் அவர்களது தொழுகையை வெப்ப நிலையின் போது வெப்பம் தணியும் வரையும் பிற்படுத்துவது ஸுன்னத் ஆகும்.



- ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் -அவர்கள் குறிப்பிடும் போது இவ்வுலகிலும்,மறுவுலகிலும் உமக்கு தொழுகை ஒளியாகும் என்றார்கள்.

## ஐந்தாவது:அஸருடைய நேரம்



ஸுனன் அர்ரவாதிப்கள் தொடர்பான விடயங்கள் முன்னர் தெளிவு படுத்தப்பட்டன. மேலும் அஸர் தொழுகைக்கு முன்னராக எவ்வித -அவ்வாறான அர்ரவாதிபுகளும்- கிடையாது.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது எனினும் அஸர் தொழுகைக்கு முன்னராக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுதார்கள் என பலவீனமான,மற்றும்,தவறான விடயங்களை தவிர எவரும் -சரியான தகவல்களை- குறிப்பிடவில்லை.(ஃபதாவா:23/125)

மிகச்சரியானது -அல்லாஹ் மிக அறிந்தவன்- அஸருக்கு முன்னராக குறிப்பான ஸுன்னத்து ஏதும் கிடையாது.எனினும் பொதுவான ஸுன்னத்து எனும் விடயம் மாத்திரம் உள்ளன. இதன்படி தடுக்கப்பட்ட நேரங்களில் அல்லாது ஏனைய ஸுன்னத்தான தொழுகைகளுக்கு முன்னராக தொழும் பொதுவான ஸுன்னத்துக்களை போன்று எவர் நாடுகிறாரோ அவர் இரண்டு ரக்அத்துக்களை அல்லது அவர் நாடிய எண்ணிக்கையை தொழுது கொள்வார்.மேலும் அஸருக்கு என குறிப்பான ஸுன்னத்துக்கள் என எதுவும் பிரத்தியேகமாக கிடையாது.

## காலை மாலை துஆக்கள்.-அத்கார்கள்-

காலை மாலை துஆக்களை.-அத்கார்களை- எப்போது ஆரம்பம் செய்வார்.?.

## காலை நேர அத்கார்களின் நேரம்.

தெளிவாக ஃபஜ்ர் உதயமானது முதல் அதாவது ஃபஜ்ர் தொழுகையின் நேரத்திலிருந்து ஆரம்பமாகிறது.எனவே முஅத்தின் ஃபஜ்ர் தொழுகைக்கு அதான் சொன்னது முதல் காலை நேர அத்காரின் நேரம் ஆரம்பமாகிறது.மேலும் இதுவே மார்க்க அறிஞர்களின் -ரஹிமஹுா முல்லாஹ்- அதிகமானோரின் கருத்தாகவும் இருக்கிறது.இன்னும் சூரிய உதயத்துக்கு பின்னர் இவ்வாறு இந்த திக்ருகளை ஓதினாலும், இதிலும் குறிப்பாக ஏதும் தக்க காரணிகளால் இதை இந்த நேரம் வரை பிற்படுத்தினாலும் பரவாயில்லை. ஏனெனில் சூரிய உதயத்துக்கு பின்னரான இந்நேரம் காலை எனப்படும். இதனால் இந்த ஓதலின் சிறப்பும்,மகிமையும்,அபிவிருத்தியும் கிட்டுகிறது.எஞ்சிய நாட்களில் இது மறக்கடிக் கடிக்கப்பட்டு, விடுப்படுவதை விட இது மிக ஏற்றமானது.

## மாலை நேர அத்கார்களின் நேரம்.

**மிகத்தெளிவானது -அல்லாஹ் மிக அறிந்தவன்-:** இதன் நேரம் அஸர் தொழுகையின் முடிவிலிருந்து சூரியன் மறையும் வரையாகும்.எனினும் இதை சூரிய மறைவுக்கு பின்னரும், இதிலும் குறிப்பாக,ஏதும் தக்க காரணிகளால் தப்பி விட்டது எனின் இவற்றை ஓதலாம்.இன்னும் சூரிய மறைவுக்கு பின்னரும் மாலை எனப்படுவதாலும்.இதனால் இந்த ஓதலின் சிறப்பும், மகிமையும், அபிவிருத்தியும் கிட்டுகிறது.இன்னும் வரக்கூடிய நாட்களில் இது மறக்கடிக்கடிக்கப்பட்டு,விடுப்பட்டு விடுவதையும் விட இது-இவ்வாறு ஓதுவது- மிக ஏற்றமானது.

## ஏழாவது:- மக்ரிபுடைய நேரம்



இந்நேரத்தில் -செய்யப்படவேண்டிய-பல்வேறு அம்சங்கள் உள்ளன:-

- **முதல் விடயம்:-மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் சிறு குழந்தைகளை வெளியில் விடாதிருத்தல் ஸுன்னத் ஆகும்.**
- **இரண்டாவது:-மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் அல்லாஹ்வின் பெயரைக் கூறலும் வீட்டுக்கதவுகளை மூடி விடுவதும் ஸுன்னத் ஆகும்.**

இவ்விரு ஒழுக்க வழிகாட்டல்களும் ஷைத்தான்,ஜின் ஆகியவற்றை விட்டும் பாதுகாப்பாக அமைகிறது.மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் ஷைத்தான்கள் குறிப்பாக இந்நேரத்தில் பரந்து காணப்படுவதால் சிறு குழந்தைகளை வெளியில் விடாது இருப்பது அவர்களுக்கான பாதுகாப்பாகும். இவ்வாறே இந்நேரத்தில் அல்லாஹ்வின் பெயர் கூறி -பிஸ்மில் லாஹ்- எனக் கூறலும், கதவுகளை மூடி விடலும்-பாதுகாப்பாக அமைகிறது-. இந்நேரத்தில் பல வீடுகளையும், சிறார்களையும் ஷைத்தான்கள் ஆக்கிரமித்துக் கொள்ளும் இவ்வேளை இஸ்லாம் எவ்வளவு தூரம் எமது வீடுகள்,சிறார்கள் விடயத்தில் கரிசணையும் அக்கறையும் கொண்டிருக்கிறது.....!

**இதற்கான சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது:-**

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **"இரவின் முற்பகுதி வந்து விட்டால் அல்லது நீங்கள் மாலை நேரத்தை அடைந்தால் உங்கள் குழந்தைகளை (வெளியே அனுப்பாமல்) தடுத்து விடுங்கள்.ஏனெனில், அப்போது ஷைத்தான்கள் (வெளியே) பரவுகின்றன.**

**இரவில் சிறிது நேரம் கழிந்து விட்டால் அவர்களை (சுதந்திரமாக வெளியே செல்ல) விட்டு விடுங்கள். மேலும், (இரவு நேரத்தில்) கதவுகளைப் பூட்டி விடுங்கள்.அப்போது, அல்லாஹ்வின் பெயரைச் சொல்லுங்கள், ஏனெனில், ஷைத்தான் மூடப்பட்ட கதவைத் திறக்க மாட்டான்".** என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்,புகாரி,எண்,3304முஸ்லிம்,எண்:2012).



மக்ரிபின் ஆரம்ப நேரத்தில் சிறார்களை வெளியில் விடாது இருத்தல்,வீட்டுக்கதவுகளை மூடிவிடல் என்பன ஸுன்னத்தான விடயங்களாகும்:-(பார்க்க-மார்க்க தீர்ப்புகளுக்கான நிலைக் குழு(அல்லஜ்னதுல் தாஇமா).(26/317).

### மூன்றாவது விடயம்:-மக்ரிப் தொழுகைக்கு முன்னராக இரு ரக்அத்துக்கள் தொழல்.

அப்துல்லாஹ் பின் அல் முகப்பல் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **"மக்ரிப் தொழுகைக்கு முன்னர் தொழுது கொள்ளுங்கள்"** என கூறிவிட்டு பின்னர் அதை மக்கள் ஒரு ஸுன்னத்தாக எடுத்துக்கொள்வார்கள் என்பதை வெறுத்தவர்களாக **"நாடியவர் இதை தொழுது கொள்ளட்டும்"** என கூறினார்கள். (நூல்,புகாரி,எண்:1183)

**மேலும் அனைத்து அதானுக்கும் இகாமத்துக்கும் இடைப் பட்ட நேரத்தில் இரு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தாகும்.**

இவ்வாறு இரு ரக்அத்துக்கள் ஃபஜ்ர், லுஹர் தொழுகைகளின் ராதிபானவைகள் போன்று இருப்பினும் சரி இதன் போது இவ்விரு ரக்அத்துக்களும் இதற்கு நிகராகின்றன. அல்லது ஒருவர் பள்ளியில் அமர்ந்து இருக்கின்ற நிலையில் முஅத்தின் அஸர் தொழுகைக்கு, அல்லது இஷாத் தொழுகைக்கு அதான் சொல்லுகிறார் எனின் இதன் போது அவர் எழுந்து இரு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தாகும்.

**இதற்கான சான்றாக அமைகிறது:-**

அப்துல்லாஹ் இப்னு முகப்பல் அல் முஸனி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.அவர்கள் இவ்வாறு கூறினார்கள். '**ஒவ்வொரு பாங்குக்கும் இகாமத்துக் குமிடையில் ஒரு தொழுகை உண்டு**' என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரண்டு முறை கூறி விட்டு மூன்றாம் முறை '**விரும்பியவர்கள் தொழலாம்**' என்றார் (நூல்,புகாரி,எண்:624,முஸ்லிம்,எண்:838).

மக்ரிப் தொழுகைக்கு முன்னரும் அல்லது ஒவ்வொரு அதானுக்கும் இகாமத்துக்கும் இடையிலும் இரு ரக்அத்துக்கள் தொழுவது ஸுனன் ரவாத்திபுகள் போன்று மிக முக்கியமான ஸுன்னத்துக்கள் கிடையாது என்பதில் சந்தேகம் ஏதும் கிடையாது. இவைகள் சில போது நிறை வேற்றப்படும்.மற்றும் சில போது விடப்படும்.எனவே தான நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கள் இதை ஸுன்னத்து என எண்ணிக்கொள்ளாது இருக்க மூன்றாவது தடவை குறிப்பிடும் போது யார் "விரும்புகின்றாரோ" எனக் குறிப்பிட்டார்கள்.

### நான்காவது விடயம்:-இஷாவுக்கு முன்னர் நித்திரை கொள்வது மக்ரூஹ்-வெறுக்கத்தக்கது- ஆகும்.

அபூ பர்ஸா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.இஷாவைப் பிற்படுத்துவதை விரும்புபவர்களாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இருந்தார்கள்.மேலும் இஷாவுக்கு முன் உறங்குவதையும் இஷாவுக்குப் பின் பேசிக் கொண்டிருப்பதையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெறுப்பவர்களாக இருந்தார்கள்.(நூல்,புகாரி,எண்:599,முஸ்லிம்,எண்:647)

அதாவது இவ்வாறு மக்ரிப் நேரத்தில் இஷாவுக்கு முன்னர் நித்திரை கொள்வது மக்ரூஹ் ஆக இருப்பதற்கான காரணி இவ்வாறான நித்திரை இஷாத் தொழுகை சில போது தப்பி விட வழி வகுக்கும்.



◆ இரவிலும் பகலிலும் அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்பு வேண்டுவது அல்லாஹ்வின் பால் செல்லும் பாதையை சீராக்குவதாகும்.நபிகளார் குறிப்பிடும் போது நச்சயமாக அல்லாஹ் பகலில் அவனது அடியார்கள் செய்த பாவத்துக்கு அவர்கள் பாவ மன்னிப்பு வேண்டுவதற்காக இரவில் அவனது கைகளை விரித்து வைத்துக் கொண்டிருக்கின்றான்.மேலும் இரவில் செய்த பாவங்களுக்கு பகலில் அவர்கள் பாவமன்னிப்பு வேண்டும் பொருட்டு பகலில் கையை விரித்து வைத்துக் கொண்டிருக்கின்றான்.

## ஏழாவது:இஷாவுடைய நேரம்.



**இந்நேரத்தில் -செய்ய வேண்டிய-பல அம்சங்கள் உள்ளன:-**

**முதல் விடயம்: இஷாவுக்கு பின்னர் பேசிக்கொண்டு இருப்பதும், கூட்டமாக ஆலோசித்துக் கொண்டிருப்பதும் வெறுக் கப்பட்டதாகும்.**

அபூ பர்ஸா (ரலியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில். "நபி (ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்) அவர்கள்.இஷாவுக்கு முன் உறங்குவதையும் இஷாவுக்குப் பின் பேசிக் கொண்டிருப்பதையும் வெறுப்பவர்களாக இருந்தார்கள்". **எனினும் இவ்வாறு பேசிக்கொண்டிருப்பது தேவையின் நிமித்தம் எனின் அது வெறுப்பானதாக மக்ரூஹ் ஆனதாக காணப்பட மாட்டாது.**

**இவ்வாறு வெறுக்கப்படுவதற்கான-மக்ரூஹ்-ஆன காரணி-அல்லாஹ் மிக அறந்தவன்-** இதனால் நித்திரை கொள்வது தாமதமாகிறது. இதன் விளைவாக வழக்கமாக இரவில் நின்று வணங்குபவராயின் அவரது இரவுத் தொழுகையும்,ஸுபஹ் தொழுகையும் தப்பி விடலாம்,அல்லது அவற்றை உரிய நேரத்தில் நிறைவேற்றி விட முடியாது போய் விடலாம்.

**இரண்டாவது அம்சம்:-மஃமூன்கள்- இமாமை பின்பற்றி தொழுபவர்களுக்கு- கடினமான ஒரு அம்சம் இல்லை எனும் சமயத்தில் இஷாத்தொழுகையை பிற்படுத்தி தொழுவது மிகச்சிறப்பானது.**

**இதற்கான சான்றாக அமைகிறது:-**

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகிறார்கள்:ஓர் இரவில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஷாத் தொழுகையை நன்கு இருள் படரும் வரைத் தாமதப்படுத்தினார்கள்.எந்த அளவிற்கென்றால் இரவின் கணிசமான பகுதி கடந்து விட்டது;பள்ளிவாசலில் இருந்தவர்கள் உறங்கியும் விட்டனர்.பிறகு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் புறப்பட்டு வந்து தொழுவித்து விட்டு, "இதுதான் என் சமுதாயத்தாருக்குச் சிரமம் ஏற்பட்டு விடும் என்ற அச்சம் எனக்கில்லையாயின் இஷாத் தொழுகைக்கான (மிகச்சிறந்த) நேரமாகும்." என கூறினார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:638).

இவ்வாறே பெண்களும் அவர்களின் தொழுகை ஜமாத்துடன் தொடர்ப்பு இல்லாத சமயத்தில் அவர்களுக்கும் கடினம் இல்லை எனும் போது இஷாத்தொழுகையை பிற்படுத்தி தொழுவது ஸுன்னத்தாகும்.இவ்வாறே ஆணும் பிரயாணங்களில் ஈடுபட்டிருப்பது போன்று அவரது தொழுகை ஜமாத்துடன் தொடர்ப்பு அற்றதாக காணப்படும் எனின் அவரும் இஷாத் தொழுகையையை பிற்படுத்தி தொழுவது ஸுன்னத்து ஆகும்.

**ஒவ்வொரு இரவிலும் அத்தியாயம் அல் இக்லாஸை ஓதுவது ஸுன்னத்தாகும்.**

அபூத்தர்தா(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: **"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (மக்களை நோக்கி) "ஓர் இரவில் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் ஒருவரால் ஓத முடியாதா?" என்று கேட்டார்கள்." (ஒரே இரவில்) எவ்வாறு குர்ஆனின் மூன்றிலொரு பகுதியை ஓத இயலும்?" என்று மக்கள் கேட்டனர்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "குல் ஹுவல்லாஹு அஹத் (என்று தொடங்கும் 112 ஆவது அத்தியாயம்) குர்ஆனின் மூன்றிலொரு பங்கிற்கு ஈடானதாகும்" என்று கூறினார்கள்.** (நூல்,முஸ்லிம்,எண்: 811,புகாரி,எண்:5015).

## நித்திரையின் போதான ஸுன்னத்துக்கள்

**நித்திரை, இதன் போதான ஸுன்னத்துக்கள் பல உள்ளன. அவையாவன:**

### 1 நித்திரை கொள்ளும் போது வீட்டுக்கதவுகளை மூடி விடல்.



அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்."**உங்கள் விளக்குகளை அணைத்து விடுங்கள். உங்கள் (வீட்டின்) கதவுகளைத் தாழிட்டு விடுங்கள். உங்கள் தண்ணீர் பையின் வாய்ப் பகுதியைச் சுருக்கிட்டு மூடி விடுங்கள்.உங்களுடைய உணவுகளையும், பானங்களையும் மூடி வையுங்கள்**".இதை ஜாபிர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.(நூல்,புகாரி,எண்:5624,முஸ்லிம், எண்:2012)

இவ்வாறு வீட்டுக்கதவுகளை மூடுவதற்கான காரணி முன்னர் கூறப்பட்ட ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் குறிப்பிடப்பட்டது போல் ஷைத்தான்கள் உள் நுழையாது இருத்தல் ஆகும்.அவர்களின் மற்றுமொரு ஹதீஸின் படி.அதில் அவர்கள்

"**நீங்கள் உங்கள் வீட்டு கதவுகளை மூடி விடுங்கள், அப்போது அல்லாஹ்வின் பெயரைச் சொல்லுங்கள். ஏனெனில், ஷைத்தான் மூடப்பட்ட எந்தக் கதவையும் திறப்பதில்லை**". (நூல்,புகாரி, எண்:5623, முஸ்லிம்,எண்:2012).

### 2 நித்திரைக்கு முன்னர் நெறுப்பை அணைத்து விடல்.



மேலும் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் அதில் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "**நீங்கள் நித்திரை கொள்ளும் போது உங்கள் வீட்டில் நெறுப்பை அணைக்காது விட்டு வைக்காதீர்கள்-மாறாக அதை அணைத்து விடுங்கள்**". (நூல்,முஸ்லிம்,எண்:2015)

இவ்வாறே வீட்டிற்கும் அதிலுள்ளவர்களுக்கும் தீ பரவலை ஏற்படுத்தும் காரணியாக அமையும் அனைத்து விடயங்களும் இதனுடன் ஒப்பீடு செய்யப்படும்.உதாரணமாக குளிரை தனிக்கும் சாதனங்கள் அண்மித்த விதமாக இருத்தல் இவ்வாறானவைகள் சில போது தீ பரவலுக்கு காரணியாகி விடலாம்,ஏனெனில் இதன் காரணி ஒன்றாகவே காணப்படுகிறது.மேலும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிட்டது போன்று எப்போதும் நெறுப்பு மனிதனுக்கு எதிரியே.

**இவ்வாறான கருதுகோள்களுக்கு ஏற்ப.** தீ ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாத போது இவ்வாறு அவற்றை அனைத்து விடாது இருப்பது தவறில்லை. ஏனெனில் இவ்வாறு தீ பரவலுக்கான காரணிகள் இல்லாது இருக்கின்ற நிலையாகும். இது தொடர்ப்பான அனைத்து சட்டங்களும் இந்த -அபாயம்-எனும் நிலையும் அது இல்லாமல் இருக்கும் நிலையுமாகும்.

## 3 நித்திரைக்கு முன்னராக வுழூஃ செய்து கொள்ளல்.


اللَّهُمَّ اني أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ



பராஉ இப்னு ஆஸிப் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒருவருக்கு அறிவுரை கூறினார்கள். அப்போது **"நீ படுக்கைக்குச் செல்லும் போது தொழுகைக்கு வுழூஃ செய்வது போன்று வுழூஃ செய்து கொள்வீராக,பின்னர் வலது பக்கமாக சாய்ந்து படுத்துக் கொள்வீராக,பின்னர் அல்லாஹும்ம இன்னீ அஸ்லம்து வஜ்ஹீ இலைக என ..... (இறுதி வரை).ஓதுக்கொள்வீராக"**.(நூல்,புகாரி,எண்:247, முஸ்லிம், எண்:2710)

## 4 நித்திரை கொள்ளும் முன்னர் உறங்குமிடத்தை தட்டி உதறிக்கொள்ளல்.

بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي



இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் **"நீங்கள் படுக்கைக்குச் சென்றால் உங்கள் கீழங்கியின் ஓரத்தால் விரிப்பைத் தட்டி விடுங்கள். ஏனெனில், அதில் என்ன (விஷ ஜந்து) ஒளிந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. பிறகு (பின்வருமாறு) பிரார்த்தியுங்கள்: "பிஸ்மிக்க ரப்பீ வளஅத்து ஜன்பீ........**(இறுதிவரை). என அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கின்றார்கள். (நூல்,புகாரி,எண்:6320,முஸ்லிம்,எண்:2714)

முன்னர் கடந்து சென்றவைகளின் பிரகாரம் இவ்வாறு வேட்டியையும்,அவரின் படுக்கை விரிப்பையும் மூன்று முறை தட்டி உதறிக்கொள்ளும் போது மூன்று முறை அல்லாஹ்வின் பெயரை **-பிஸ்மில்லாஹ்-** கூறுவார்.

இவ்வாறு உதறிக்கொள்வது ஆடையின் நுணியினால் செய்வது தான் சிறப்பானது எனவும் எனினும் எதைகொண்டு உதறிக் கொண்டாலும் பரவாயில்லை,இதன் போதான முக்கிய அம்சம் உதறிக்கொள்ளுதலாகும்.என கூறக்கூடிய அறிஞர்களும் உள்ளனர்.அவர்களில் அஷ்ஷைக் பின் ஜப்ரீன் ரஹிமஹுல்லாஹ் அவர்களும் ஒருவர்.அவர்கள் குறிப்பிடும் போது "வேட்டியின் இறுதிப் பகுதியால் தான் இதை இவ்வாறு செய்ய வேண்டும் என நிபந்தனை கிடையாது.விரிப்பு முழுவதையும்,அல்லது அவரது தலைப்பாகையினால் இவ்வாறு செய்தாலும் இதனால் குறிப்பிடப்பட்ட அம்சம் நிறைவேறி விடுகிறது".(பார்க்க.அவர்களது மார்க்க தீர்ப்புகள், எண்:2693)

## 5 வலது புறமாக உறங்குவது.

## 6 வலது கரத்தை வலது கண்ணத்தின் கீழ் வைத்து கொள்ளல்.

اللَّهُمَّ اِني أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ



இதை பின்வரும் இரு வசனங்களும் தெளிவு படுத்துகினறன. பராஉ இப்னு ஆஸிப் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் ஒருவருக்கு அறிவுரை கூறினார்கள். அப்போது **'நீ படுக்கைக்குச் செல்லும் போது தொழுகைக்கு போன்றே வுழூஃ செய்துகொள்வாராக, பின்னர் வலது பக்கம் சாயந்து படுத்துகொண்டு' அல்லாஹும்ம அஸ்லம்து வஜ்ஹீ......என இறுதி வரை ஓதிக்கொள்வாராக, என குறிப்பிட்டார்கள்.** (நூல், புகாரி,எண்:247,முஸ்லிம்,எண்: 2710)

ஹுதைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தொட்டும் அறிவிக்கின்றார்கள் "நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் நித்திரை கொள்ளும் போது அவரின் கையை கண்ணத்தின் கீழ் வைத்து கொள்வார்கள்". (நூல்,புகாரி,எண்:6314)

## 7 நித்திரை கொள்ளும் போதான திக்ருகளை ஓதிக் கொள்ளல்.

நித்திரை கொள்ளும் போது ஓதப்படக்கூடிய திக்ருகள் அல் குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் வந்துள்ளன:-

### 1 அல் குர்ஆனில் உள்ளவைகளாவன.

#### 1 ஆயத்துல் குர்ஸியை ஓதிக்கொள்ளல்.

நித்திரையின் போது ஆயத்துல் குர்ஸியை ஓதிக் கொள்வது ஸுன்னத்தாகும். இதனால் காலை வரை ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு கிட்டுகிறது.



இதை பின்வரும் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சம்பவம் தெளிவுபடுத்துகிறது.அதில் அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் அறிவிக்கின் றார்கள்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) **அவர்கள் ஜகாத்தை பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்தார்கள். எனும் அவ்வதீஸ் தொடரில்** விடிந்ததும் நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 'நேற்றிரவு உம்மால் பிடிக்கப் பட்டவன் என்ன செய்தான்? என்று கேட்டார்கள். 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருவதாக அவன் கூறினான்;அதனால் அவனைவிட்டு விட்டேன்!' என்றேன்.' **அந்த வார்த்தைகள் என்ன?** என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டார்கள்.'நீ படுக்கைக்குச் செல்லும் போது ஆயத்துல் குர்சியை ஆரம்பம் முதல் கடைசி வரை ஓதும்!அவ்வாறு ஓதினால்,விடியும் வரைஅல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார்.ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்! என்று என்னிடம் அவன் கூறினான்' எனத் தெரிவித்தேன். நபித்தோழர்கள் நன்மையான (தைக்கற்றுக் கொண்டு செயல் படுத்துவதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் '**அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் அவன் உம்மிடம் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான்! மூன்று இரவுகளாக நீர் யாரிடம் பேசி வருகிறீர் என்று உமக்குத் தெரியுமா?** என்று கேட்டார்கள். 'தெரியாது' என்றேன்.'**அவன்தான் ஷைத்தான்!**' என்று இறைத்தூதர்(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் கூறினார்கள்.(நூல்,புகாரி,2311, அறிவிப்பாளர் தொடர் துண்டித்த நிலையிலிருக்க இமாம் நஸாஈ அவர்கள் தொடரான அறிவிப்பாளர் தொடருடன் அஸ்ஸுனன் அல் குப்ராவில் பதிவு செய்துள்ளார்கள்)

### 2> அத்தியாயம் அல் பகராவின் இறுதி இரு வசனங்களை ஓதிக்கொள்ளல்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **'அல்பகரா' அத்தியாயத்தின் இறுதி இரண்டு (திருக்குர்ஆன் 02:285.286) வசனங்களை இரவு நேரத்தில் ஓதுகிறவருக்கு (மனிதன் மற்றும் ஜின் இனத்தாரின் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்) போதுமானதாக அவை ஆகி விடும்.**(நூல்,புகாரி,எண்:4008),இதை அபீ மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

இவ்வத்தியாயம் அல் பகராவின் இறுதி வசனங்கள் இரண்டும் காலை மாலை திக்ருகளுடன் குறிப்பானது கிடையாது. மாறாக இது இரவில் சொல்லப்படும் திக்ராகும்

ஒருவருக்கு இது இரவில் ஞாபகம் வாராது நித்திரை கொள்ளும் போது ஞாபகம் வந்தால் அவ்விரண்டையும் அப்போதும் ஓதிக் கொள்வார்.

இவ்வதீஸில் வந்துள்ள **-கஃபதாஹ்-** எனும் வார்த்தையின் விளக்கத்தில் கருத்து வேறுபடுகள் உள்ளன.

ஒரு கருத்தின் படி இது இரவு தொழுகைக்கு போதுமானது, எனவும் ஷைத்தானை விட்டும் போதுமானது எனவும் சொல்லப்படுகின்றது.

இது ஆபத்துக்களை விட்டும் போதுமானது எனவும் சொல்லப்படுகின்றது.இமாம் அந்நவவி ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுவது போன்று இவை அனைத்தையும் பொதிந்துள்ளது.பார்க்க:இமாம் அந்நவவியவர்களது ஷரஹ் முஸ்லிம் ஹதீஸ்,எண்: 808)ஃபாத்திஹாவினதும்,அத்தியாயம் அல் பகராவின் இறுதி வசனங்களினதும்...... சிறப்பு எனும் பாடத்தில்.

### 3) அத்தியாயம் அல் இக்லாஸ்,அல் முஅவ்வித தைன் ஆகிய அத்தியாயங்களை ஓதி கைகளில் ஊதி பின்னர் அதை உடம்பில் மூன்று தடவைகள் தடவிக் கொள்ளல்.

**இதற்கான சான்றாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது.**

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா)அவர்கள் கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் படுக்கைக்குச் சென்றால் **குல்ஹுவல்லாஹு அஹத், குல்அஊது பிரப்பில் ஃபலக்,குல் அஊது பிரப்பின்னாஸ்** ஆகிய பாதுகாப்புக் கோரும் (112,113,114) அத்தியாயங்கள் மூன்றையும் ஓதித் தம் உள்ளங்கைகளில் ஊதி அவற்றால் தம் முகத்தையும்,தம் இரண்டு கரங்கள் உடலில் எங்கெல்லாம் படுமோ அந்த இடங்களையும் தடவிக் கொள்வார்கள்.இவ்வாறு இவர்கள் தலையிலிருந்து ஆரம்பித்து மூன்று தடவைகள் தடவிக் கொள்வார்கள்.(நூல்,புகாரி,எண்:5017).

**முன்சென்ற ஹதீஸின் மூலமாக திடமாக:** நபிளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு இரவிலும் அவர்கள் இந்த ஸுன்னத்தான வழிமுறையை செய்தார்கள் என்பதை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கூற்றான அனைத்து இரவுகளிலும் எனும் வார்த்தையினால் அறிந்து கொள்ள முடிகிறது.எனவே இந்த ஸுன்னத்தான வழி முறையை செயற்படுத்த விரும்புகிறவர் அவர் இரு கைகளையும் இணைத்து வைத்து கொள்வார்.பின்னர் அவர் இதில் இக்லாஸ்,அல் முஅவ்வித தைன் ஆகிய அத்தியாயங்களை ஓதி ஊதிக்கொண்டு. பின்னர் தனது உடம்பில் முடியுமான வரை தலை,முகம் என ஆரம்பித்து பூராகவும் மூன்று முறை தடவிக் கொள்வார்.

### 4) அத்தியாயம் அல் காஃபிரூனை ஓதிக்கொள்ளல்.

உர்வதிப்னு நவ்ஃபல் ரலியால்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களின் தந்தையை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவ்ஃபல் அவர்களுக்கு கூறினார்கள் **"நீர் நித்திரை கொள்ளும் போது இறுதியாக அத்தியாயம் அல் காஃபிரூனை ஓதிக் கொண்டதன்**

பின்னர் நித்திரை கொள்வீராக அது உமக்கு இணைவைத்தலை விட்டும் ஈடேற்றமானதாக இருக்கும்." (நூல், அஹ்மத், எண்: 21934, அபூ தாவுத், எண்:5055, அத்திர்மிதி, எண்: 3403, இமாம் அல் பானி அவர்கள் ஹஸன் என குறிப்பிட்டுள்ளார்கள்).

**2 அஸ்ஸுன்னாவில் அதிகமான துஆக்கள் வந்துள்ளன. அவற்றுள்.சில பின்வருமாறு.:**



1. بِاسْمِكَ اللَّهُمَّ أَمُوتُ وَأَحْيَا

"பிஸ்மிகல்லாஹும்ம அமூது வஅஹ்யா..." (நூல்,புகாரி, எண்: 6324). இதை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

2. اللَّهُمَّ خَلَقْتَ نَفْسِي وَأَنْتَ تَوَفَّاهَا، لَكَ مَمَاتُهَا وَمَحْيَاهَا، إِنْ أَحْيَيْتَهَا فَاحْفَظْهَا، وَإِنْ أَمَتَّهَا فَاغْفِرْ لَهَا، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَافِيَةَ

"அல்லஹும்ம! கலக்த்த நஃப்சீ,வ அன்த்த தவஃப் பாஹா, லக்க மமாத்துஹா வ மஹ்யாஹா, இன் அஹ்யய்த்தஹா ஃபஹ்ஃபழ்ஹா, வ இன் அமத்தஹா ஃபக்ஃபிர் லஹா, அல்லஹும்ம!இன்னீ அஸ்அலுக்கல் ஆஃபியா" (நூல், முஸ்லிம்,எண்:2712).

3. اللَّهُمَّ رَبَّ السَّمَاوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ الْعَرْشِ الْعَظِيمِ ، رَبَّنَا وَرَبَّ كُلِّ شَيْءٍ، فَالِقَ الْحَبِّ وَالنَّوَى ، وَمُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ وَالْفُرْقَانِ ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ كُلِّ شَيْءٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ اللَّهُمَّ أَنْتَ الأَوَّلُ فَلَيْسَ قَبْلَكَ شَيْءٌ ، وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ بَعْدَكَ شَيْءٌ ، وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ شَيْءٌ ، وَأَنْتَ الْبَاطِنُ فَلَيْسَ دُونَكَ شَيْءٌ ، اقْضِ عَنَّاالدَّيْنَ وَأَغْنِنَا مِنَ الْفَقْرِ

"அல்லாஹும்ம! ரப்பஸ் ஸமாவாத்தி வ ரப்பல் அர்ளி வ ரப்பல் அர்ஷில் அழீம்.ரப்பனா வ ரப்ப குல்லி ஷையின். ஃபாலிக்கல் ஹப்பி வந்நவா,வ முன்ஸிலத் தவ்ராத்தி வல்இன்ஜீலி வல்ஃபுர்கான்,அஊது பிக்க மின் ஷர்ரி குல்லி ஷையின்.அன்த்த ஆகிதும் பி நாஸியத்திஹ்,அல்லாஹும்ம! அன்த்தல் அவ்வலு; ஃப லைஸ கப்லக்க ஷைஉன், வ அன்த்தல் ஆகிரு; ஃப லைஸ பஅதக்க ஷைஉன்.வ அன்த்தழ் ழாஹிரு; ஃப லைஸ ஃபவ்கக்க ஷைஉன், வ அன்த்தல் பாத்தினு; ஃப லைஸ தூனக்க ஷைஉன், இக்ளி அன்னா அத்தைன வ அஃக்னினா மினல் ஃபக்ர்" (நூல், முஸ்லிம்,எண்:2713).

4. بِاسْمِكَ رَبِّ وَضَعْتُ جَنْبِي وَبِكَ أَرْفَعُهُ إِنْ أَمْسَكْتَ نَفْسِي فَارْحَمْهَا وَإِنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا تَحْفَظُ بِهِ عِبَادَكَ الصَّالِحِينَ

"பிஸ்மிக்க ரப்பீ வளஅத்து ஜன்பீ.வ பிக்க அர்ஃபஉஹு இன் அம்ஸக்த்த நஃப்ஸீ ஃபர்ஹம்ஹா வ இன் அர்ஸல்த் தஹா ஃபஹ்ஃபழ்ஹா பிமா தஹ்ஃபழு பிஹி இபாதக்கஸ் ஸாலிஹீன்".(நூல்,புகாரி,எண்:6302,முஸ்லிம்,எண்:2714)

5 الْحَمْدُ لِلّٰهِ الَّذِي أَطْعَمَنَا وَسَقَانَا، وَكَفَانَا وَآوَانَا، فَكَمْ مِمَّنْ لاَ كَافِيَ لَهُ وَلاَ مُؤْوِي

**"அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வ சகானா வ கஃபானா வ ஆவானா.ஃபகம் மிம்மன் லா காஃபிய லஹு, வலா முஃவிய"** மற்றுமொரு அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பின் பிரகாரம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் படுக்கைக்குச்செல்லும் போது "**அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வ சகானா வ கஃபானா வ ஆவானா.ஃபகம் மிம்மன் லா காஃபிய லஹு, வலா முஃவிய**" (நூல்,முஸ்லிம்,எண்:2715).என ஓதுவார்கள்.

6 اللَّهُمَّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

**"அல்லாஹும்ம கினீ அதாபக யவ்ம துப்அஸு இபாதக".** (நூல்அஹ்மத்,எண் 18660,இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளைர்கள்.ஸஹீஹ் அல் ஜாமிஃ (2/869).

7 **"தஸ்ஹீஹ்" ஸுப்ஹானல்லாஹ்". அத்தஹ்மீத் "அல்ஹம்து லில்லாஹ்", என முப்பத்தி மூன்று தடவைகளும், தக்பீர்- "அல்லாஹு அக்பர்" என முப்பத்தி நான்கு தடவைகளும் கூறல்.**

தஸ்ஹீஹ்-ஸுப்ஹானல்லாஹ்,முப்பத்தி மூன்று தடவைகளும், அத்தஹ்மீத்"அல்ஹம்து லில்லாஹ்",என முப்பத்தி மூன்று தடவைகளும்,தக்பீர்-"அல்லாஹு அக்பர்" என முப்பத்தி நான்கு தடவைகளும் நித்திரைக்கு முன்னர் கூறல்.இதனால் அன்றைய தினம் உடம்புக்கு வலுவும் ஆற்றலும் கிடைக்கிறது.

**இதற்கானசான்று**.அலீ (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸில் அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(என் துணைவி) 'பாத்திமா அவர்கள் மாவரைக்கும் திருகையினால் தமக்கு ஏற்பட்ட வேதனையைக் குறித்து முறையிட்டார்கள். இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சில போர்க் கைதிகள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள் (அவர்களை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஸ்லிம்களிடையே பங்கிடவிருக்கிறார்கள்) என்னும் செய்தி ஃபாத்திமா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு எட்டியது.உடனே,அவர்கள் நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் (அந்தப் போர்க் கைதிகளிலிருந்து) ஒரு பணியாளை (தமக்குக் கொடுக்கும்படி) கேட்க சென்றார்கள். ஆனால்,நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வீட்டில் இல்லாததால் அவர்களை ஃபாத்திமா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களால் அந்த நேரத்தில் சந்திக்க முடியவில்லை.எனவே, ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் (தாம் வந்த காரணத்தைக்) கூறி (விட்டுத் திரும்பி)னார்கள்.பின்னர்,நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வந்தவுடன் அவர்களுக்கு ஆயிஷா (ரலில்லாஹு அன்ஹா) விஷயத்தைச் சொன்னார்கள்.(விபரமறிந்த) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நாங்கள் படுக்கைக்குச் சென்று விட்ட பின்னால் எங்களிடம் வருகை தந்தார்கள்.அவர்களைக் கண்டவுடன் நாங்கள் எழுந்து நிற்க முனைந்தோம்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,'(எழுந்திருக்க வேண்டாம்.) உங்கள்

இடத்திலேயே இருவரும் இருங்கள்' என்று கூறினார்கள்.(பிறகு) நான் அவர்களின் பாதத்தின் குளிர்ச்சியை என் நெஞ்சின் மீது உணர்ந்தேன்.(அந்த அளவிற்கு எங்கள் அருகில் வந்து அமர்ந்தார்கள்.) பின்னர், 'நீங்கள் இருவரும் என்னிடம் கேட்டதை விடச் சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? நீங்கள் படுக்கைக்குச் செல்லும் போது '**அல்லாஹு அக்பர்** - அல்லாஹ் மிக பெரியவன்' என்று முப்பத்து நான்கு முறையும், '**அல்ஹம்து லில்லாஹ்** - புகழனைத்தும் அல்லாஹ்விற்கே' என்று முப்பத்து மூன்று முறையும், '**சுப்ஹானல்லாஹ்** - அல்லாஹ் குறைகளிலிருந்து தூய்மையானவன்' என்று முப்பத்து மூன்று முறையும் சொல்லுங்கள்.ஏனெனில்,அது நீங்கள் இருவரும் என்னிடம் கேட்டதை விடச் சிறந்ததாகும்' என்றார்கள்.(நூல்,புகாரி, எண்:3705,முஸ்லிம்,எண்:2727).

மற்றுமொரு அறிவிப்பில் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதை நான் நபிகளாரிடமிருந்து கேட்டது முதல் ஒரு போதும் விட்டது கிடையாது என குறிப்பிட்டார்கள். அப்போது அவர்களிடம் நீங்கள் இதை ஸிப்ஃஃபீன் யுத்தம் இடம் பெற்ற இரவிலும் கூடவா என வினவப்பட்டது.அதற்கு அவர்கள் ஆம் ஸிப்ஃஃபீன் யுத்தம் இடம் பெற்ற இரவிலும் தான் -இதை நான் விட்டது இல்லை-என குறிப்பிட்டார்கள். (நூல்,புகாரி,எண்:5362,முஸ்லிம்,எண்:2727).

8> اللَّهُمَّ إِنِّي أَسْلَمْتُ وَجْهِي إِلَيْكَ ، وَفَوَّضْتُ أَمْرِي إِلَيْكَ ، وَأَلْجَأْتُ ظَهْرِي إِلَيْكَ ، رَغْبَةً وَرَهْبَةً إِلَيْكَ. لاَ مَلْجَأَ وَلاَ مَنْجَا مِنْكَ إِلاَّ إِلَيْكَ، آمَنْتُ بِكِتَابِكَ الَّذِي أَنْزَلْتَ، وَبِنَبِيِّكَ الَّذِي أَرْسَلْتَ

**"அல்லாஹும்ம! இன்னீ அஸ் லம்த்து வஜ்ஹீ இலைக்க, வ ஃபவ்வள்த்து அம்ரீ இலைக்க,வ அல்ஜஃத்து ழஹ்ரீ இலைக்க; ரஃக்பத்தன் வ ரஹ்பத்தன் இலைக்க.லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க. ஆமன்த்து பி கித்தாபிக் கல்லதீ அன்ஸல்த்த. வபி நபிய்யிக்கல்லதீ அர்சல்த்த"** (நூல்,புகாரி,எண்:247, முஸ்லிம்,எண்:2710). **இவ்வதீஸின் இறுதியில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதை உமது வார்த்தைகளின் இறுதியானதாக அமைத்துக் கொள்வீராக,ஏனெனில் இவ்வாறு உமது இந்த இரவில் நீ மரணித்தால், ஃபித்ராவில் நேரான மார்க்கத்தில் மரணிக்கின்றீர்**.என குறிப்பிட்டார்கள்."**மேலும் முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் "மேலும் நீர் இதன் படியே காலையை அடைந்தால் நல்லதாகவே காலையை அடைகின்றீர்**".எனவும் குறிப்பிட்டார்கள்.

**இந்த ஹதீஸில் மற்றுமொரு ஸுன்னத்தான விடயமும் குறிப் பிடப்பட்டுள்ளது.** அதாவது இந்த திக்ரை நித்திரை கொள்வதற்கு முன்னராக இறுதியாக சொல்ல வேண்டிய வார்த்தைகளாக அமைத்துக் கொள்ளல்,இவ்வாறு இது அமையுமாயின் அவருக்கான மிகப்பெரிய வெகுமதியும் இருக்கிறது.அதுவே அவரது மரணம் அன்றைய தினம் நிச்சயிக்கபட்டதாயின் அவர் இயற்கை மார்க்கத்தில் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இயற்கை தூய மார்க்கத்தில் மரணிக்கிறார்.மேலும் அவர் காலையை அடைவார் எனின் காலைப் பொழுதை நல்லதாகவும்,அபிவிருத்தி, பாக்கியம் ஆகியவற்றுடனும் அடைகிறார்.இவ்வாறான வார்த்தை சொற்றொடர்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளதாக காணப்படுகிறது.-அல்லாஹ் மிக அறிந்தவன்.-


اللَّهُمَّ أَنْتَ رَبِّي لَا إِلَهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوءُ لَكَ بِذَنْبِي فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய மிகப்பிரதான விடயங்களில் ஒன்று,மகத்தான ஒரு திக்ர்,அதுவே மகத்தான சிறப்புக்களுக்கும் காரணியாகும்.அதை மகத்துவமிக்க கண்ணியமான இறைவன் அல்லாஹ் அருளியிருக்கின்றான்.அதுதான் புகாரி கிரந்தத்தில் ஷத்தாத் பின் அவ்ஸ் ரலியால்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படக் கூடிய பாவமன்னிப்பு கோருவதின் தலையாய துஆ-இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் "**அல்லாஹும்ம! அன்த்த ரப்பீ.லா இலாஹ இல்லா அன்த்த.கலக்த்தனீ.வ அன அப்துக்க.வ அன அலா அஹ்திக்க,வ வஅதிக்க மஸ்தத அத்து.அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஅத்து. அபூ உ லக்க பி நிஅமத் திக்க அலய்ய,வ அபூ உ லக்க பி தன்பீ. ஃபஃக்பிர்லீ.ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துனூப இல்லா அன்த்த' என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறி விட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறப்பவர் சொர்க்க வாசிகளில் ஒருவராக இருப்பார்.இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்து விடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.**(நூல்,புகாரி,எண்:6306).



◆ திக்ரு செய்தல் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தல் ஒரு பலமான கோட்டையாகும்.அதுவே உள்ளங்களுக்கு உயிரூட்டும் ஒரு காரணியாகும்.ஆகவே அல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவர்களில் ஒருவராக இருப்பீராக.நபிகளார் குறிப்பிடும் போது கூறினார்கள்'தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றுகிறவரின் நிலை உயிருள்ளவரின் நிலைக்கும்,தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாதவரின் நிலை உயிரற்றவரின் நிலைக்கும் ஒத்திருக்கிறது.

### நித்திரையில் கணவு காணும் போதான ஸுன்னத்துக்கள்.



முஸ்லிம் கிரந்தத்தில் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் நித்திரை கொள்ளும் ஒருவரது கணவு மூன்று வகைகளில் ஒன்றாகவே காணப்படும்.

1. நல்ல - ஸாலிஹான-கணவு.இது கண்ணியமிக்க அல்லாஹ்விடத்திலிருந்துள்ள நன்மாறாயங்களாகும்.இதன் போதும் சில ஒழுக்க நெறிகள் உள்ளன.அவை பின்னர் கூறப்படும்.
2. கவலை மற்றும் சஞ்சலமான கணவுகள் இவை ஷைத்தானிடமிருந்தும் உள்ளவையாகும்.பின்னர் குறிப்பிடக் கூடிய ஒழுக்க நெறிகளை கடைபிடிக்கும் போது அவை எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.
3. ஒருவரது நித்திரைக்கு முன்னரான செயற்பாடுகள் பற்றிய கணவு இதற்கு எத்தகைய தாக்கமும் கிடையாது.

### ஹதீஸ்களில் வந்துள்ள பிரகாரம் இப்பாடம் தொடர்பான ஸுன்னத்துக்களாவன:

அபூசலமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாவது:

நான் (உறக்கத்தில்) பல கனவுகளைக் கண்டு வந்தேன். அதனால் எனக்குக் குளிர் காய்ச்சல் ஏற்பட்டது.இறுதியில் (ஒரு நாள்) நான் அபூகத்தாதா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களைச் சந்தித்து அவர்களிடம் அதைப் பற்றித் தெரிவித்தேன். அப்போது அபூகத்தாதா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நல்ல கனவு அல்லாஹ்விடமிருந்து வருவதாகும்.கெட்ட கனவு ஷைத்தானிடமிருந்து வருவதாகும். உங்களில் ஒருவர் தாம் விரும்பாத (தீயகனவு) ஒன்றைக் கண்டால் அவர் தமது இடப் பக்கத்தில் மூன்று முறை துப்பட்டும்;அதிலிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் அவர் பாதுகாப்புக் கோரட்டும்.(இப்படிச் செய்தால்) அவருக்கு அது எந்தத் தீங்கும் இழைத்திட இயலாது" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

மேலும் அபூ ஸலமா அவர்கள் கூறுகின்றார்கள்.இந்த ஹதீஸை நான் கேட்(டு அறிந்துவிட்)ட காரணத்தால் மலையை விடச் சுமையான ஒரு கனவை நான் கண்டாலும் கூட அதைப் பொருட்படுத்துவதில்லை. (நூல்.புகாரி,எண்:5747, முஸ்லிம்,எண்:2261). மற்றொரு அறிவிப்பில் "**நல்ல கனவு அல்லாஹ்விடமிருந்து வருவதாகும்.கெட்ட கனவு ஷைத்தானிடமிருந்து வருவதாகும்.உங்களில் ஒருவர் தாம் விரும்பாத அச்சப்படக்கூடிய (தீய கனவு) ஒன்றைக் கண்டால் அவர் தமது இடப்**

**பக்கத்தில் மூன்று முறை துப்பட்டும்;அதிலிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் அவர் பாதுகாப்புக் கோரட்டும். (இப்படிச் செய்தால்) அவருக்கு அது எந்தத் தீங்கும் இழைத்திட இயலாது"** .(நூல்.புகாரி,எண்:5747,முஸ்லிம், எண்:2261).

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் மற்றுமொரு ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள். **"மூன்று தடவை அல்லாஹ்விடம் அதை விட்டும் பாதுகாப்பு தேடி கொள்ளட்டும். மேலும் அவர் தான் இருக்கும்-நித்திரை கொண்டுள்ள பக்கத்தை-மாற்றிக் கொள்ளட்டும்".** (நூல்,முஸ்லிம்,எண்:2262).

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் கூறினார்கள் **"உங்களில் ஒருவர் தமக்கு விருப்பமான கனவொன்றைக் கண்டால்,அது அல்லாஹ்விடமிருந்தே வந்தது (என்று தெரிந்து), அதற்காக அவர் அல்லாஹ்வைப் போற்றட்டும்".**இதை அபூ ஸயீத் அல்குத்ரீ (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(நூல்,புகாரி,எண்: 7045).

- **முன்னைய ஹதீஸ்களின் பரிகாரம் ஒருவர் ஸாலிஹான -நல்ல- கணவுகளை கண்டால் அவருக்கு பின்வருவனவற்றை செய்வது ஸுன்னத்து ஆகும். எனும் விடயங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.அவையானவன:**

1. **முதலாவது:**-அது அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் உள்ளது. எனவே அல்லாஹ்வை புகழ்தல்.

   **இரண்டாவது:**மேலும் அதை தான் விரும்புகின்றவர்களுக்கு மாத்திரம் தெரிவுபடுத்தல்.

2. **தான் விரும்பாத கணவுகளை காணும் போது அவர் பின்வருவனவற்றை செயற்படுத்துவதும் ஸுன்னத்தாகும். அவையாவன. பின்வருமாறு:**

   **முதலாவது:**அவரது இடப்புறதுக்கு மூன்று முறை எச்சில் துப்பிக்கொள்ளல்.

   **இரண்டாவது:-"அஊது பில்லாஹி மினஷ்ஷைத்தானி வமின் ஷர்ரிஹா"** என மூன்று தடவைகள் கூறுவதன் மூலம் தான் கண்ட கணவின் தீங்கை விட்டும்,ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடத்தில் மூன்று தடவைகள் பாதுகாப்புத் தேடிக் கொள்ளல்.

   **மூன்றாவது:**-அதை எவருக்கும் தெரிவுபடுத்த மாட்டார். இவ்வாறு செய்வார் எனின் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டது போன்று அவருக்கு எவ்வித தீங்கும் அதனால் ஏற்பட மாட்டாது,இவற்றுடன் பின் வருகின்றவற்றையும் செய்து கொள்ளலாம்.அவையாவன.

   **நான்காவது:**-அவர் தூங்கிக் கொண்டிருந்த பக்கத்தை மாற்றிக் கொள்ளல். உதாரணமாக அவர் முதுகின் மீது -மல்லாந்த நிலையில்-படுத்துக் கொண்டிருப்பார் எனின் ஒரு புறமாக சாய்ந்து படுத்துக் கொள்வார்.

**ஐந்தாவது:**அவர் எழுந்து இரண்டு ரக்அத்துக்கள் தொழுது கொள்ளல்.

**முன்னைய ஹதீஸ்களின் பிரகாரம்:** ஒரு முஸ்லிமின் கணவு நுபுவ்வத்தின் -நபித்துவத்தின்- ஒரு பங்கு ஆகும்.கணவின் போது உண்மையாளர் தான் விழிப்பின் போதும் பேச்சுக்களில் உண்மை பேசுபவர்.ஆகவே தூக்கத்தின் போது கூட ஒரு முஸ்லிமின் அருள் பாக்கியமும்,உண்மையின் தாக்கமும் பிரதிபலிக்கின்றன என்பது தெளிவாகின்றன.

### இரவில் நித்திரையிலிருந்து இடை நடுவில் விழித்து எழுந்து விட்டால் அவர் இந்த துஆவை ஓதுவது ஸுன்னத்து ஆகும்:-

لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ ، الْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللَّهِ ، وَلَا إِلَهَ إِلَّا اللَّهُ ، وَاللَّهُ أَكْبَرُ ، وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ

உப்பாதா பின் ஸாமித் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக வரக்கூடிய ஹதீஸின் படி நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்."**இரவில் ஒருவர் திடிக்கிட்டு நித்திரையிலிருந்து விழித்தெழுந்தால்" லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)க லஹு, லஹுல் முல்(க்)கு, வலஹுல் ஹம்து,வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்ஹம்து லில்லாஹி வஸுப்ஹானல்லாஹி வலாயி லாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலா ஹவ்ல வலா குவ்வ(த்)த இல்லா பில்லாஹி, கூறட்டும் மேலும் அவர் வுழூஃ செய்துதொழுதால் அவரின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். அல்லாஹும்மஃக்ஃபிர்லீ.என"** (நூல்,முஸ்லிம், எண்:1154)

இந்த ஹதீஸின் படி ஒருவர் நித்திரையிலிருந்து திடிக்கிட்டு விழித்தெழுந்து பின்வரும் இந்த துஆவை ஓதுகிறவருக்கு இரண்டு மிகப் பெரிய நன்மாராயங்கள் உள்ளன.அந்த துஆ பின்வருமாறு "**லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீக லஹூ, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்,அல் ஹம்துலில்லாஹி, வஸுப்ஹானல் லாஹி,வலா இலாஹ இல்லல் லாஹு, வல்லாஹு அக்பர்,வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி.என்பதாகும்".**

**ஆகவே இதை கூறுபவருக்கான இரு நன்மாராயங்களாவன.**

**முதலாவது:**-அவர் "**அல்லாஹும்ம இக்ஃபிர்லீ**" -இறைவா என்னை மன்னித்தருள்....!என அல்லது -வேறு-பிரார்த்தனை செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்படும்.

**இரண்டாவது:**-அவர் எழுந்து வுழூஃ செய்து தொழுதால் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும்.இவ்வாறான அருட்பாக்கியங்களை அளித்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.இத்தகைய செயற்பாடுகளை செயற்படுத்தவும் அல்லாஹ் எமக்கு அருள் புரியட்டும்.

காலை எழுந்து முதல் ஸுன்னத்துக்களான மிஸ்வாக் செய்தல் -பல் துலக்குவது- மற்றும் காலை எழும் போது ஓதப்படக் கூடிய "**அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாதனா வஇலைஹின்னுஷூர்**".என ஆரம்பித்து. அதை தொடர்ந்து இறுதியாக இந்த மேற்குறித்த ஸுன்னத்தை குறிப்பிடுவதனூடாக நேரம் குறிக்கப்பட்ட-ஸுனன் அல் மவ்கூதா-எனும் பகுதி முற்றுப் பெறுகிறன.







# நேரம் குறிக்கப்படாத -பொதுவான- ஸுன்னத்துக்கள்

இதுவே நாளாந்த ஸுன்னத்துகளின் இரண்டாவது பகுதி ஆகும். இவை அதிகமான எண்ணிக்கையையும், விசாலமான பரப்பையும் கொண்டமைதுள்ளது. ஆகவே கால சூழ்நிலைகள், நபர்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், இடங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வேறுபடுகின்றன.

எனினும் இரவிலும் பகலிலும் நாளாந்தம் தொடர்ச்சியான முறையிலான சில ஸுன்னத்துக்களை மாத்திரம் நாம் இங்கு முன் வைக்கின்றோம்.அல்லாஹ் இவற்றை செயற்படுத் துவதற்கான அருள் பாக்கியத்தை தந்தருள்வானாக.

**இப்பரிவின் முதல் ஸுன்னத்து:**

## உணவின் போதான ஸுன்னத்துக்கள்



### 1 உணவின் ஆரம்பத்தில் பஸ்மில் -பிஸ்மில்லாஹ்- கூறல்.

உமர் இப்னு அபீ ஸலமா (ரலியல்லாஹு அன்ஹு) கூறுகிறார்கள்.நான் ஒரு நாள் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் உணவு உண்டேன். தட்டின் ஓரங்களிலிருந்து எடுத்து உண்ணத் தொடங்கினேன். அப்போது இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னிடம், "**உண்ணும் போது அல்லாஹ்வின் பெயரை-பிஸ்மில்லாஹ்- குறிப்பிடுவீராக, இன்னும் வலக் கரத்தால் உண்ணுவீராக. மேலும் உமக்கு போதுமான அளவு சாப்பிடுவீராக**". என்று கூறினார்கள். (நூல்,புகாரி,எண்:5376, முஸ்லிம்,எண்:2022).

بسم الله أوله وآخره

மேலும் பிஸ்மில் சொல்வதை மறந்து விட்டால் ஞாபகம் வரும் போது "**பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹூ**" எனக் கூறிக் கொள்ளல்.

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"உங்களில் ஒருவர் சாப்பிட்டால் -ஆரம்பத்தில்- பிஸ்மில்லாஹ் எனக் கூறட்டும். அவர் ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் கூற மறந்து விட்டால் அவர்"பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு "என சொல்லிக் கொள்ளட்டும்".** (நூல்,அபூ தாவுத்,எண்.3767, அத்திர்மிதி, எண்.1858) முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று இந்த ஹதீஸை இமாம் அல் பானி அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

அவ்வாறே மனிதன் ஷைத்தானுக்கு ஒப்பாவாகாது இருக்க அவனது வலக்கரத்தால் உணவு உட்கொள்வான்.மேலும் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் பெயரை கூறாத போது அவ்வுண வில் ஷைத்தானும் பங்கெடுத்து கொள்கிறான்.இன்னும் ஒருவர் இடக்கரத்தால் சாப்பிட்டால் அல்லது பருகினால் ஷைத்தா னுக்கு ஒப்பாகின்றார். ஏனெனில் ஷைத்தான் இடக் கரத்தால் தான் சாபிடுகின்றான்.குடிக்கின்றான்.

பின்வரும் ஹதீஸ் இதற்கு சான்றாகும்:-

அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்ல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:இடக்கையால் உண்ணாதீர்கள்.ஏனெனில்,ஷைத்தான் இடக்கையால்தான் உண்ணவும்,பருகவும் செய்கின்றான்.மேலும் நாஃபிஉ (ரஹ்ம துல்லாஹ்) அவர்கள் தமது அறிவிப்பில் "இடக் கையால் வாங்காதீர்கள்.இடக் கையால் கொடுக்காதீர்கள்"என கூடுதலாக அறிவித்துள்ளார்கள்".(நூல்,முஸ்லிம்,எண்:2020)

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம்,ஷைத்தான் ஒருவரது வீட்டிற்குள் நுழைந்து அவரது வீட்டில் தங்குவதற்கும் உணவில் பங்கு கொள்ளவும் அதீத அக்கறை செலுத்துகிறான். இந்த ஹதீஸில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:**ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும் போதும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத் தாரிடம்)"இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை;உண்ண உணவுமில்லை"என்று கூறுகிறான்.ஒருவர் இல்லத்திற்குள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவு கூராவிட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்),"இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடமும் இரவுணவும் கிடைத்து விட்டது"என்று சொல்கிறான்.** (நூல்,முஸ்லிம்,எண்:2018)



## 2 தனக்கு போதுமான அளவு சாப்பிடுதல்.

முன்னர் கடந்து சென்ற அம்ர் பின் அபீ ஸலமா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்"**உமக்கு போதுமான அளவு சாப்பிடுவீராக**". எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## 3 கீழே சிந்திய உணவை எடுத்து அதில் அழுக்குகள் ஏதும் இருப்பின் அதை நீக்கிய பின் உட்கொள்ளல்.

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன்:அதில் "**உங்களில் ஒருவருடைய ஒவ்வொரு அலுவலிலும் ஷைத்தான் பங்கேற் கிறான்.மனிதன் உணவு உண்ணும் போதும் அவன் பங்கேற்கிறான்.(உண்ணும் போது) உங்களில் ஒருவரிடமிருந்து உணவுக் கவளம் கீழே விழுந்து விட்டால்,அதில் படுவதை சுத்தப்படுத்தி விட்டு,பிறகு அதை உண்ணட்டும். அதை ஷைத்தானுக்கு விட்டுவிட வேண்டாம். சாப்பிட்டு முடித்தவுடன் அவர் தம் விரல்களை உறிஞ்சிக் கொள்ளட்டும். ஏனெனில், அவரது எந்த உணவில் வளம் (பரக்கத்) இருக்கும் என்பதை அவர் அறியமாட்டார்**". (நூல்,முஸ்லிம்,எண்:2033).

இந்த ஹதீஸை உண்ணிப்பாக அவதானிக்கும் போது,நிச்சயம் ஷைத்தான் மனித வாழ்வின் பரக்கத்து,அபிவிருத்தி என அனைத்து விடயங்களிலும் குறுக்கிடவும்,மனிதனின் அதிக செயற்பாடுகளை நாசமாக்கி விடும் பொருட்டு பங்கெடுப்பதில் அதீத அக்கரை கொண்டுள்ளான் என்பது புலப்படுகிறது. ஆகவே ஷைத்தான் மனிதனின் அனைத்து செயற்பாடுகளிலும் ஒன்றிணைந்து காணப்படுகின்றான்.எனவே தான் நபிகளார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது "**நிச்சயமாக ஷைத்தான் உங்களின் அனைத்து கருமங்களிலும் அவன் பங்கு கொள்கின்றான்**".என குறிப்பிட்டுள்ளார்கள்.

## 4 சாப்பிட்டு முடித்தவுடன் கை விரல்களை உறிஞ்சிக் கொள்வது.சூப்புவது.



அதாவது நாக்கின் நுணியால் சாப்பிட்ட அவரது கை விரல்களை உறகிஞ்சிக் கொள்ளல் -சூப்பிக்கொள்ளல்-. அல்லது மற்றவரால் உதாரணமாக அவரது மனைவி போன்றோர்களால் சூப்புதல்-. உறிஞ்சுதல்-. இவ்வாறு செய்வதற்கு முன்னராக கை துடைப்பால் அல்லது இவை போன்றவற்றால் துடைக்காமல் இருப்பது தான் ஸுன்னத்தாகும்.

முன் சென்ற ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான **ஹதீஸ் இதற்கான சான்றாக இருக்கிறது.**

மேலும் புகாரி,முஸ்லிமில் வரக்கூடிய இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது "**உங்களில் ஒருவர் சாப்பிட்டு முடித்தால் உங்கள் கையை நீங்கள் அல்லது பிறர் சூப்பாத வரை கையை துடைக்க வேண்டாம்**". (நூல்,புகாரி,எண, 5456,முஸ்லிம்,எண் 2033).

## 5 உணவுத் தட்டை வழித்து உண்ணுதல்.



அதாவது உணவுத்தட்டை வழித்து சாப்பிடுதல் என்பது சாப்பிடுகின்றவர் அவர் உண்ணும் பாத்திரத்தின் ஓரங்களை சுத்தமாக வழித்து சாப்பிடுதல் ஆகும். உதாரணமாக சோறு சாப்பிடக்கூடியவர் உண்ணும் போது உணவுப்பாத்திரத்தில் அவற்றின் எதையும் மிச்சம் வைக்காது பாத்திரத்தின் அனைத்து பகுதிகளையும் வழித்து சாப்பிடுதல்.சில வேளை பரக்கத் அபிவிருத்தி எஞ்சிய அந்தப் பகுதிகளில் கூட இருக்கலாம்.

இதை பின்வரும் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.அதில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், (உணவு உண்டு முடித்தவர் தம்) தட்டை வழித்து உண்ணுமாறும் உத்தரவிட்டார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:2034). மேலும் முஸ்லிமில் மற்றுமொரு அறிவிப்பில்.அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வாயிலாக.வந்துள்ள ஹதீஸில். "**உங்களில் ஒருவர் உணவு உண்டால் (இறுதியில்) உணவுத் தட்டை வழித்து உண்ணட்டும்**" எனவும் இடம்பெற்றுள்ளது. (நூல்,முஸ்லிம், எண்:2035)

எமது ஆசான் அஷ்ஷைக் இப்னு உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். "அதாவது இதன் அர்த்தம் உமது விரல்களில் ஒட்டியிருக்கின்ற உணவுகளை உறிஞ்சு சாப்பிடுதல்.கவலைக்குரிய விடயம் என்னவெனில் இன்று அதிகமானவர்கள் இதையும் தாண்டி மார்க்க அறிவை தேடுபவர்களிடத்திலும் கூட மறந்து போயுள்ள ஒரு ஸுன்னத்தான அம்சமாக காணப்படுகின்றமையாகும்". (பார்க்க,ரியாழுஸ்ஸாலிஹீனுக்கான விளக்கவுரை:1/892).

## 6 மூன்று விரல்களால் சாப்பிடுதல்.



மூன்று விரல்களால் சாப்பிடுவது ஸுன்னத்து ஆகும். இவ்வாறு மூன்று விரல்களால் சாப்பிட முடியுமான பேரீத்தம் பழம் போன்றவைகளின் போது ஆகும். ஆகவே இதன் போது மூன்று விரல்களால் சாப்பிடுவது ஸுன்னத்து ஆகும்.

கஃப் பின்மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்ற **ஹதீஸ் இதற்கான சான்றாக இருக்கின்றது:**

**"அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏதேனும் உணவை உண்டால் மூன்று விரல்களால் சாப்பிடுவார்கள். பின்னர் இறுதியாக கைகளை துடைப்பதற்கு முன்னர் விரல்களையும் உறிஞ்சிக்கொள்வார்கள்".** (நூல் முஸ்லிம்,எண்:2032)

## 7 உணவுப் பாத்திரத்துக்கு வெளியில் மூன்று முறை மூச்சு விடல்.



பாத்திரங்களிலிருந்து அருந்தும் போது மூன்று தடவைகளாக அருந்துவதும், ஒவ்வொன்றின் போதும் மூச்சு விடுவதும் ஸுன்னத்து ஆகும்.

**இதற்கான சான்றாக அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் சான்றாக இருக்கின்றது.** அதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (பருகும் போது) மூன்று முறை பாத்திரத்தி (ற்கு வெளியி)ல் மூச்சு விட்டு(ப்பருகி)வந்தார்கள்.மேலும், "இதுவே நன்கு தாகத்தைத் தணிக்கக்கூடியதும் (உடல்நலப்) பாது காப்பிற்கு ஏற்றதும் அழகிய முறையில் செரிக்கச் செய்யக்கூடியதும் ஆகும்" என்று கூறினார்கள்.ஆகவேதான்,நானும் பருகும் போது மூன்று முறை மூச்சு விட்டு(ப்பருகி) வருகிறேன். (நூல்,புகாரி,எண்:5631,முஸ்லிம்:2028).

பாத்திரத்தில் மூச்சு விடல் என்பதனால் நாடப்படுவது பாத்திரத்திலிருந்து அருந்தும் போது அதனுள் மூச்சு விடாது பாத்திரத்துக்கு வெளியில் மூச்சு விடுவார்.ஏனெனில் புகாரி முஸ்லிமில் அபீ கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸின் பிரகாரம் பாத்திரத்தில் மூச்சு விடுவது மக்ரூஹ் - வெறுக்கப் பட்டது-ஆகும்.அதில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது **"உங்களில் ஒருவர் குடிபானம் அருந்தினால் பாத்திரத்தினுள் மூச்சு விட வேண்டாம்."** (நூல்,புகாரி,எண்:5630,முஸ்லிம்,எண:267).

## 8 உணவருந்திய பின்னர் அல்லாஹ்வை - அல்ஹம்து லில்லாஹ் என- புகழ்தல்.

**பின் வரும் ஹதீஸ் இந்த ஸுன்னாவை குறித்துக்காட்டுகிறது:-**




அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"நிச்சயமாக ஒரு அடியான் ஒரு கவலை உணவு அருந்திய பின்னர் அதற்காக நன்றி செலுத்துவதை,அல்லது ஒரு மிடல் தண்ணீர் அருந்திய பின் அல்லாஹ்வை புகழ்வதை அவன் பொறுந்திக் கொள்கிறான்"**. (நூல்,முஸ்லிம்,எண்:2743)

**அல்லாஹ்வை புகழ்வதற்கான வார்த்தை வடிவங்கள் பல்வேறுபடுகின்றன. அவற்றுள்.**

1. الْحَمْدُ لِلَّهِ كَثِيرًا طَيِّبًا مُبَارَكًا فِيهِ غَيْرَ مَكْفِيٍّ ، وَلَا مُوَدَّعٍ ، وَلَا مُسْتَغْنًى عَنْهُ رَبَّنَا
   **'அல்ஹம்து லில்லாஹி கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி, ஃகைர மக்ஃபிய்யின் வலா முவத்தஇன் வலா முஸ்தஃக்னன் அன்ஹு ரப்பனா'**.(நூல்,புகாரி,எண்:5458)
2. الْحَمْدُ لِلَّهِ الَّذِي كَفَانَا وَأَرْوَانَا غَيْرَ مَكْفِيٍّ، وَلَا مَكْفُورٍ
   **'அல்ஹம்துலில்லாஹில்லதீ கஅபானா வ அர்வானா ஃகைர மக்ஃபிய்யின் வலா மக்ஃபூரின்'**.(நூல்,புகாரி,எண்: 5459)

## 9 உணவில் பலரும் கூட்டுச்சேர்தல்.



தனியாக பிரிந்து விடாது உணவின் போது ஒன்றாக கூட்டுச் சேர்ந்து இணைந்து சாப்பிடுவது ஸுன்னத்தாகும்.

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், **"ஒருவருடைய உணவு இருவருக்குப் போதுமானதாகும். இருவரின் உணவு நாள்வருக்கு போதுமானதாகும். நால்வரின் உணவு எண்மருக்குப் போதுமானதாகும்"** என கூறியதைக் கேட்டேன். (நூல்,முஸ்லிம்,எண்: 2059).

## 10 உணவு விருப்பத்துக்குரியதாயின் அதை புகழ்துரைத்தல்.

உணவு விருப்பத்துக்குரியதாக காணப்படும் போது அதை புகழ்துரைப்பது ஸுன்னத்து ஆகும்.இதனால் சந்தேகத்துக்கு இடமின்றி இதில் உள்ளவற்றையே அவர் புகழ்ந்துரைக்கிறார்.

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: (ஒருமுறை) நபி (ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் வீட்டாரிடம் குழம்பு கேட்டார்கள்.அதற்கு வீட்டார், "நம்மிடம் காடி மட்டுமே உள்ளது" என்று கூறினர். நபி (ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் காடியைக் கொண்டுவரச் சொல்லி அதை(த்தொட்டு)க்கொண்டு உண்ணலானார்கள். **மேலும், "குழம்புகளில் அருமையானது காடியாகும்"** என்றும் சொன்னார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:2025). இதில் வந்துள்ள -கல்லு- எனும் அறபு வார்த்தையின் அர்த்தம்.இன்று எம்மிடத்தில் காணப்படக்கூடிய வினாகர் போன்று.புளிப்புச் சுவை அற்ற இனிப்பான ஒருவிதமான குழம்பு வகையாகும்.

ஆசிரியர் அஷ்ஷைக் பின் உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது -இதுவும் நபிகளாரின் வழி காட்டலில் உள்ள அம்சமாகும்.உணவு உமக்கு விருப்பத்துகுரியதாயின் உதாரணமாக ரொட்டியை பார்த்து இவர் செய்த இந்த தொளிக் கோதுமை ரொட்டி இவ்வளவு நல்லதாக, சுவையாக இருக்கின்றதே...எனவும் இதை போன்றும் அதை புகழ்ந்துரைத்தல் என்பதுவெல்லாம் நபிகளாரின் ஸுன்னத் தான வழிகாட்டலாகும்.(பார்க்க:அர்ரியாளுஸ் ஸாலிஹீன் நூலுக்கான விரிவுரையில். (2/1057)

எனினும் இன்றைய நிலையை உற்று நோக்குபவர் மனிதர்களில் அதிகமானவர்கள். இந்த ஸுன்னாவை விட்டு விடுவது மாத்திரமல்லாது இந்த ஸுன்னாவுக்கு மாற்றமாக அவர்கள் உணவுகளை குறைகூறியும் சில வேளைகளில் அதை இகழ்ந் துரைப்பதையும் காணமுடிகிறது.இதுவெல்லாம் நபிகளாரின் ஸுன்னாவுக்கும் வழிகாட்டலுக்கும் மாற்றமானது.புகாரி,முஸ்லிமில் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஹதீஸில் நபிகளார் ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **"ஒரு போதும் அவர்கள் உணவை குறை கூறியதில்லை, அவர்கள் விரும்பினால் உண்பார்கள, இல்லாது விட்டால் உண்ணாது விட்டு விடுவார்கள்"**.(நூல் புகாரி,எண்:3563,முஸ்லிம்,எண்: 2064).

## 11 உணவளித்தவருக்கு பிரார்த்தனை செய்தல்.

اللَّهُمَّ بَارِكْ لَهُمْ فِي مَا رَزَقْتَهُمْ ، وَاغْفِرْ لَهُمْ ، وَارْحَمْهُمْ

இதை அப்துல்லாஹ் பின் புஸ்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது:அதில் (ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்லலல்லாஹு அலைஹி வஸ்லம்)அவர்கள் என் தந்தை (புஸ்ர் பின் அபீபுஸ்ர்-ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் (விருந்தாளியாகத்) தங்கினார்கள்.அப்போது

அவர்களுக்கு அருகே உணவும் (பேரீச்சம் பழம்,பாலாடை,நெய் ஆகியவற்றால் செய்யப்பட்ட "வத்பா" எனும்) ஒரு வகைப் பலகாரமும் வைத்தோம்.அதிலிருந்து அவர்கள் உண்டார்கள்.பிறகு பேரீச்சம் பழங்கள் கொண்டுவரப்பட்டன. அல்லாஹ்வின் தூதர் (ஸல்ல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்கள் பேரீச்சம் பழத்தைச் சாப்பிட்டு விட்டு,அவற்றின் கொட்டைகளை (பாத்திரத்தினுள்ளே போடாமல்) தம்மிரு விரல்களுக்கிடையே வைத்திருந்(துவிட்டு பிறகு வீசியெறிந்)தார்கள்.பிறகு ஒரு பானம் கொண்டுவரப்பட்ட போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்ல்லல்லாஹு அலைஹி வஸ்லம்)அவர்கள் அதையும் அருந்தினார்கள்.பிறகு மீதியிருந்ததைத் தமக்கு வலப்பக்கத்திலிருந்த வருக்குக் கொடுத்தார்கள்.பிறகு (அல்லாஹ்வின் தூதர் (ஸல்ல்லல்லாஹு அலைஹி வஸ்லம்)அவர்கள் புறப்படத் தயாரான போது) என் தந்தை,அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்களின் வாகனத்தின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, "எங்களுக்காகப் பிரார்த்தியுங்கள்" என்று கூறினார்கள்.அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்ல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்கள் "இறைவா! நீ இவர்களுக்கு வழங்கிய உணவில் அருள் வளம் (பரக்கத்) புரிவாயாக! இவர்களை மன்னித்து, இவர்களுக்குக் கருணை புரிவாயாக!" **(அல்லாஹும்ம, பாரிக் லஹும் ஃபீமா ரஸக்த்தஹும்,, வஃக்ஃபிர் லஹும், வர்ஹம்ஹும்)** எனப் பிரார்த்தித்தார்கள்.

## 12 பானங்களை அருந்தும் போது அதை பருகுபவர் அவரது இடப்பக்கத்துக்கு முன் வலப்புறத்தை முற்படுத்தல் ஸுன்னத்து ஆகும்.

அதாவது இதனால் நாடப்படுவது -பலரும் பானங்களை- அறுந்தும் போது முதலில் உள்ளவர் குடித்து முடித்தவுடன் தமது இடப்பக்கத்தில் உள்ளவருக்கு முன்னராக தமது வலப் புறத்தில் உள்ளவருக்கு கொடுப்பது தான் ஸுன்னத்து ஆகும்.

இதை பின் வரும் அனஸ் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.அதில் அவர்கள் கூறியதாவது:அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்த போது,அருந்துவதற்குத் தண்ணீர் கேட்டார்கள்.ஆகவே,அவர்களுக்காக நாங்கள் ஓர் ஆட்டின் பாலைக் கறந்தோம்.பிறகு எனது இந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து, அதில் கலந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கொடுத்தேன்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அருந்தினார்கள்.அப்போது அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களின் இடப் பக்கத்திலும்,உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களின் முன் பக்கத்திலும், ஒரு கிராமவாசி நபியவர்களுக்கு வலப் பக்கத்திலும் இருந்தனர்.அப்போது உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள்,"இதோ அபூபக்ர் (அவருக்கு மீதியுள்ள பாலைக் கொடுங்கள்) அல்லாஹ்வின் தூதரே!" என்று (இடப்பக்கத்திலிருந்த) அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களைக் காட்டிக் கூறினார்கள்.எனினும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம்) அவர்கள் (வலப்பக்கமிருந்த) அந்தக் கிராமவாசிக்குக் கொடுத்தார்கள். அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கும் கொடுக்கவில்லை.மேலும் "**(பரிமாறும்போது முதலில்) வலப்பக்கத்தில் இருப்பவர்களே (முன்னுரிமையுடையவர்கள்). வலப்பக்கத்தில் இருப்பவர்களே (முன்னுரிமையுடையவர்கள்). வலப்பக்கத்தில் இருப்பவர்களே (முன்னுரிமையுடையவர்கள்)**" என்று கூறினார்கள்.(இறுதியில்) அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், "இதுவே நபிவழியாகும்;இதுவே நபிவழியாகும்; இதுவே நபிவழியாகும்" என்று கூறினார்கள். (நூல்,புகாரி, எண்:2571,முஸ்லிம்,எண்:2029)

## 13 பானங்களை -புகட்டுபவர் கூட்டத்தில் இறுதியாக பருகுதல் வேண்டும்.



கூட்டத்திலுள்ளவர்களுக்கு பானங்களை புகட்டுபவர் அவர் இறுதியாக பருகுவது ஸுன்னத்து ஆகும்.

இதற்கான அபூ கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலான ஹதீஸ் சான்றாக இருக்கிறது.அந்த நீண்ட ஹதீஸில் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைவருக்கும் பானத்தை ஊற்றி புகட்டினார்கள்.அதில் நானும் அல்லாஹ்வின் தூதரும் மாத்திரம் தான் எஞ்சியிருந்தோம்,பின்னர் நபியவர்கள் பானத்தை ஊற்றி "**நீர் பருகுவீராக**" என எனக்கு கூறினார்கள்.அதற்கு நான் அல்லாஹ்வின் தூதரே நீங்கள் பருகாத வரை நான் பருக மாட்டேன் என கூறினேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் "**நிச்சயமாக ஒரு -கூட்டத்துக்கு- பானங்களை புகட்டுகின்றவர் அவர்களில் இறுதியாக தான் பருக வேண்டும்**" என கூறினார்கள்.அபூ கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் நான் பானத்தை பருக அல்லாஹ்வின் தூதர் அவர்களும் பருகினார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:681)

மேலதிகமாக - ஒருவர் பால் அருந்தினால் அதை அருந்திய பின்னர் அதன் கொழுப்பு நீங்குவதற்காக தண்ணீரால் வாய் கொப்பளித்து கொள்வதும் ஸுன்னத்து ஆகும்.இதை இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் அறிவிக்கின்றது.அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் அருந்திய பின்னர் தண்ணீரை கொண்டு வரச்செய்து அவர்களது வாயை கொப்பளித்து பின்னர் "**இதில் கொழுப்பு உள்ளது**" என கூறினார்கள்.(நூல்,புகாரி,எண் 211,முஸ்லிம்,எண்:358).



## 14 இரவின் போது அல்லாஹ்வின் பெயரை-பிஸ்மில்லாஹ்- என கூறி பாத்திரங்களை மூடி விடல்.

இரவின் போது திறந்துள்ள பாத்திரங்களை மூடி விடுவதும், இதன் போது அல்லாஹ்வின் பெயர் கூறலும் ஸுன்னத்து ஆகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை நான் செவிமடுத்துள்ளேன் என ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: "**பாத்திரங்களை மூடிவையுங்கள்;தண்ணீர் தோல் பையின் வாயைச் சுருக்கிட்டுக் கட்டி விடுங்கள், திடமாக வருடத்தின் ஒரு இரவில் கொள்ளை நோய் இறங்குகிறது. ஆகவே அது மூடியில்லாத பாத்திரங்களையும் சுருக்கிட்டு மூடி வைக்காத தண்ணீர் பைகளையும் கடந்து செல்லும் இதன் போது அந்நோயின் சிறதளவேனும் இவற்றுள் இறங்காமலிருப்பதில்லை".** (நூல் முஸ்லிம்,எண்:2014)

"**மற்றும் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக புகாரியில் வரக்கூடிய மற்றுமொரு அறிவிப்பில் பாத்திரங்களை மூடி வையுங்கள்;இதன் போது அல்லாஹ்வின் பெயரை சொல்லுங்கள்,மேலும் பாத்திரங்களை கவிழத்து விடுங்கள் இதன் போதும் அல்லாஹ்வின் பெயரை கூறுங்கள். இவ்வாறு பாத்திரங்களை முழுமையாக மூடி விட முடியாத போது பாத்திரத்தின் மீது குச்சியைக் குறுக்காக வைத்து விடுங்கள்"** (நூல்,புகாரி,எண்:5623)

## முகமன் கூறல்,ஒருவரை ஒருவர் சந்தித்தல்,சபை ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள்



### 1 முகமன் -ஸலாம்- கூறல் ஸுன்னத்தாகும்.

இவ்வாறு இது ஸுன்னத்து என்பதற்கு பரவலான பல ஹதீஸ்கள் வந்துள்ளன. அவற்றுள் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை தொட்டும் அறிவிக்கும் ஒரு ஹதீஸில். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் **"ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஆறாகும்"** என்று கூறினார்கள். "அவை யாவை,அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்கப்பட்டது.அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், **"அவரைச் சந்திக்கும் போது முகமன் கூறுவாயாக.அவர் உன்னை விருந்துக்கு அழைத்தால் அவருக்குப் பதிலளிப்பாயாக.அவர் உன்னிடத்தில் அறிவுரை கூறச் சொன்னால் அவருக்கு அறிவுரை கூறுவாயாக.அவர் தும்மி "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினால் (யர்ஹமு கல்லாஹ் என்று) அவருக்கு மறுமொழி கூறுவாயாக.அவர் நோய் வாய்ப்பட்டால் அவரை உடல் நலம் விசாரிப்பாயாக. அவர் இறந்து விட்டால் அவரது ஜனாஸாவை பின்தொடர்ந்து செல்வாயாக"** என்று கூறினார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:2162)

**எனினும் முகமனுக்கு -ஸலாத்துக்கு- பதில் அளிப்பது கட்டாயம். இதை பின்வரும் வசனம் அறிவிக்கிறது.**

அல்லாஹ் குறிப்பிடும் போது "**உங்களுக்கு ஸலாம் கூறப்பட்டால்,அதற்கு பிரதியாக அதை விட மிக அழகான வார்த்தைகளைக் கொண்டு ஸலாம் கூறுங்கள். அல்லது அதையே திரும்பக் கூறுங்கள். நிச்சயம் அல்லாஹ் எல்லாப் பொருட்கள் மீதும் கணக்கெடுப்பவனாக இருக்கின்றான்**". (அத்தியாயம், அந்நிஸா:86).

ஏவல்களின் போது அடிப்படை அது கட்டாயம் என்பதை விட்டும் மாற்றியமைக்கும் விதமாக ஏதும் வராத போது அது கட்டாயம் என்பதாகும்.ஆகவே மார்க்க அறிஞர்களில் பலரும் இவ்வாறு ஸலாத்துக்கு பதில் அளிப்பது கட்டாயம் என குறிப்பிட்டுள்ளனர். அவர்களில் இப்னு ஹஸ்ம், இப்னு அப்துல் பர், அஷ்ஷைக் தகிய்யுத்தீன் இன்னும் பலரும்-ரஹிமஹுமுல்லாஹுமம்- இதனையே குறிப்பிட்டுள்ளனர்.(பார்க்க:-மார்ரக்க ஒழுக்க நெறிகள்-அல் ஆதாபுஷ்ஷரஇய்யா-1/357), (பதிப்பு.முஅஸ்ஸ ஸதுர்ரிஸாலா).

السلام عليكم ورحمة الله وبركاته

**முகமன் -ஸலாம்- கூறல், அதற்கு பதில் அளித்தல் ஆகியவற்றின் மிகச்சிறப்பான, பரிபூரணமான வடிவம்** "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுதஹு" என்பதாகும். இதுவே முகமன் கூறலில் மிகச்சிறப்பான பரிபூரணமான நிலையாகும்.

**இமாம் இப்னுல் கையிம் ரஹிமஹுல்லாஹ்** அவர்கள் குறிப்பிடும் போது முகமன்-ஸலாம்- கூறும் போது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழி காட்டல் -பரிபூரணமாக-வபரகாதுஹு என்பது வரை குறிப்பிடு வதாகும்.(பார்க்க:-ஸாதுல் மஆத், 2/417).

**ஸலாத்தை பரப்புதல்.** ஸுன்னத்து என்பதையும் தாண்டி இது ஆர்வமூட்டபட்ட மிக அதிக சிறப்புக்களையும் கொண்ட ஸுன்னத்தான விடயம்.அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்."**எனது உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது ஆணை யாக நீங்கள் நம்பிக்கை கொள்ளாத வரை சுவனம் நுழைய. மாட்டீர்கள் மேலும் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு நேசம் கொள்ளாத வரை நம்பிக்கை கொள்ள மாட்டீர்கள். நான் உங்களுக்கு ஒன்றை செய்தால் அதனால் உங்களுக்கு மத்தியில் அன்பாளர்களாக மாறிவிடுவீர்கள் எவ்வாறானதை உங்களுக்கு அறிவிக்கவா.அது தான் உங்களுக்கு மத்தியில் ஸலாத்தை பரப்பிக்கொள்ளுங்கள்**".(நூல்,முஸ்லிம்,எண்:54)

## 2 தேவையின் போது முகமன் -ஸலாம்- கூறுவதை மூன்று முறை திரும்பத்திரும்ப கூறல் ஸுன்னத்து ஆகும்.

ஒரு பெரிய சபை கூட்டத்தாருக்குள் நுழைவின் போது ஒரு தடவை -முகமன்- ஸலாம் கூறிய பின்னர் அவர்களில் ஆரம்பத்திலுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் அது கேட்டிருக்கலாம் எனும் பட்சத்தில் சபையின் அனைவரையும் உள்ளடக்கும் விதமாக மீண்டும் தேவை ஏற்பட்டால் மூன்று தடவைகள் ஸலாம் சொல்வதை போன்று. ஒருவருக்கு ஸலாம் கூறப்பட்டு அந்த ஸலாம் கூறப்பட்டவருக்கு அது கேட்கவில்லை எனும் போது மீண்டும் ஒன்று இரண்டு மூன்று தடவைகள் என திரும்பத் திரும்ப கூறல் ஸுன்னத்தாகும்.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்."**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸலாம் கூறினால் மூன்று முறை ஸலாம் கூறுவார்கள்; ஏதாவது ஒரு வார்த்தையைப் பேசினால் அதனை புரிந்து கொள்ளும் பொருட்டு மூன்று முறை திரும்பக் கூறுவார்கள், இன்னும் ஒருகூட்டத்தாரிடத்தில் வந்தால் அவர்கள் அவர்களுக்கு மூன்று தடவைகள் ஸலாம் சொல்லுவார்கள்**". (நூல், புகாரி,எண்:95).

முன்னைய அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸின் மூலம் தேவையின் போது ஸலாம் கூறும் போது மூன்று தடவைகள் திரும்பத்திரும்ப கூறல் ஸுன்னத்தாகும்.இவ்வாறே பேசும் போதும் ஒரு தடவை பேசி புரியாத போது மீண்டும் தேவை ஏற்பட்டால் மூன்று முறைகள் பேசுவதும் ஸுன்னத்து ஆகும்.

## 3 அறிந்தவர் அறியாதவர் என அனைவருக்கும் பொதுவாக -முகமன்- ஸலாம் கூறுவது ஸுன்னத்தாகும்.

அப்துல்லாஹ் பின் அம்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் 'ஒருவர் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் 'இஸ்லாத்தில் சிறந்தது எது' எனக் கேட்டதற்கு,'**(பசித்தோருக்கு) நீர் உணவளிப்பதும் நீர் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ஸலாம் கூறுவதுமாகும்' என்றார்கள்.** (நூல்,புகாரி,எண்:12,முஸ்லிம்,எண்:39).

## 4 முதலில் எவர் ஸலாத்தை கொண்டு ஆரம்பம் செய்வது ஸுன்னத்தாக இருக்கின்றதோ அவர்கள் முதலில் முகமன்-ஸலாம் கூறுவதை கொண்டு ஆரம்பிப்பது ஸுன்னத்தாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:**வாகனத்தில் செல்பவர் நடந்து செல்பவருக்கும், நடந்து செல்பவர் அமர்ந்திருப்பவருக்கும், (எண்ணிக்கையில்) குறைந்தவர்கள் அதிகமானவர்களுக்கும் (முதலில்) முகமன் (சலாம்) சொல்லட்டும்.** -இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.(நூல், முஸ்லிம்,எண்:6233),புகாரியில் வரக்கூடிய மற்றுமொரு அறிவிப்பில், சிறியவர்

பெரியவருக்கும், நடப்பவர் உட்கார்ந் திரப்பவருக்கும்,குறைந்தவர்கள் எண்ணிக்கையில் கூடியவர்களுக்கு ஸலாம் சொல்லட்டும்.(நூல்,புகாரி, எண்:6234).

உதாரணமாக பெரியவர் சிறியவருக்கும்,நடப்பவர் வாகனத்தில் உள்ளவருக்கும் ஸலாம் கூறுவது போல் இவ்வாறு இதில் மாற்றம் செய்வது வெறுக்கபட்டதும் அல்ல இவ்வாறு செய்வதும் பரவாயில்லை.எனினும் சிறப்பானது மாற்றம் செய்யாது இருத்தல் ஆகும்.


## 5 சிறார்கள் மீது முகமன் -ஸலாம்- கூறல் ஸுன்னத்தாகும்.



அனஸ் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிறுவர்களைக் கடந்து சென்ற போது, அவர்களுக்கு முகமன் (சலாம்) கூறினார்கள்.(நூல்,முஸ்லிம், எண்:6247,முஸ்லிம்,எண்:2168).

இவ்வாறு சிறார்கள் மீது ஸலாம் -முகமன்- கூறுவதால் பணிவு, சிறார்களை இந்த முக்கிய விடயத்துக்கான வழிகாட்டுதல், அவர்களின் உள்ளங்களில் இந்த ஸுன்னத்தை விதைத்து உயிரோட்டமானதாக ஆக்குதல் போனறன இதில் உள்ளடங்கியுள்ளன.

## 6 வீட்டினுள் நுழையும் போது ஸலாம்-முகமன்-கூறல் ஸுன்னத்து ஆகும்.



வீட்டிற்குள் நுழையும் போது அதாவது இது மிஸ்வாக் செய்வது முக்கியமாக வலியுறுத்தப்பட்ட நான்காவது சந்தர்பம். எனவே மிஸ்வாக் செய்தவுடன் பொதுவான ஸலாத்திலும் இது உள்ளடங்கி விடுகிறது.அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் படி அவர்கள் கூறுகிறார்.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டிற்குள் நுழையும் போது முதலில் மிஸ்வாக் செய்து கொள்வார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:253).இவ்வாறு மிஸ்வாக் செய்த பின்னர் அவர்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு ஸலாம் கூறிய பின் அதனுள் நுழைவார்கள்.ஆகவே தான் சில மார்க்க அறிஞர்கள் குறிப்பிடும் போது ஒரு வீட்டில் நுழையும் போது அதில் எவரும் இல்லாத போதிலும் கூட ஸலாம் கூறுவது ஸுன்னத்தாகும் என.குறிப்பிடுகின்றனர். ஏனெனில் அல்லாஹ் குறிப்பிடும் போது "**ஆனால் நீங்கள் எந்த வீட்டில் பிரவேசித்தாலும் அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு கிடைத்திருக்கும்**

**முபாரக்கான பாக்கியமிக்க பரிசுத்தமான -அஸ்ஸலாமு அலைக்கும் எனும்- நல்ல வாக்கியத்தை நீங்களும் உங்களுக்குள் கூறிக்கொள்ளுங்கள்.நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இவ்வாறு அல்லாஹ் உங்களுக்கு தன் வசனங்களை விவரிக்கின்றான்".** (அத்தியாயம்,அந்நூர்:61).

இமாம் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது "பொதுவாக ஸலாத்தை பரப்புங்கள் என்பதன் மூலம் எவரும் இல்லாத இடத்தில் கூட தனக்கும் ஸலாம் கூறிக் கொள்வதும் அடங்கி விடுகிறது.ஏனெனில் அல்லாஹ் குறிப்பிடும் போது"**ஆனால் நீங்கள் எந்த வீட்டில் பிரவேசித் தாலும் அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு கிடைத்திருக்கும் முபாரக்கான பாக்கியமிக்க பரிசுத்தமான -அஸ்ஸலாமு அலைக்கும் எனும்- நல்ல வாக்கியத்தை நீங்களும் உங்களுக்குள் கூறிக் கொள்ளுங்கள்".** என குறிப்பிடுகின்றான். (பார்க்க, பத்ஹுல் பாரி, ஹதீஸ்,எண்:6235.ஸலாத்தை பரப்புதல் எனும் பாடத்தில்.

மேலதிக தகவலாக- **முன் சென்றவைகளை அடிப்படையாக வைத்து பொதுவாக வீட்டினுள் நுழையும் போது மூன்று விடயங்கள் ஸுன்னத்தாகின்றன. அவையாவன.**

1. **முதலாவது:**-அல்லாஹ்வின் நாமத்தை-பிஸ்மில்லாஹ்- கூறல். இதிலும் விசேடமாக இரவில்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:**ஒருவர் தமது இல்லத்திற்குள் நுழையும் போதும் உணவு உண்ணும் போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால், ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்), "இன்றைய இரவில் உங்களுக்கு (இங்கே) தங்குமிடமும் இல்லை; உண்ண உணவு மில்லை" என்று கூறுகிறான். ஒருவர் இல்லத்திற்குள் நுழையும் போது அல்லாஹ்வை நினைவுகூராது விட்டால் ஷைத்தான் (தன் கூட்டத்தாரிடம்) "இன்றைய இரவில் உங்களுக்குத் தங்குமிடமும் இரவுணவும் கிடைத்து விட்டது"** என்று சொல் கிறான். (நூல்,முஸ்லிம்,எண்:2018).
2. **இரண்டாவது:**-முன்னைய அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸின் பிரகாரம் மிஸ்வாக் செய்தல்.
3. **மூன்றாவது:** வீட்டார்கள் மீது ஸலாம் -முகமன்-கூறல்.

### 7 ஒரு கூட்டத்தாரிடம் சென்று அவர்களில் சிலர் நித்திரை கொண்டிருக்கும் போது ஸலாத்தை -முகமனை- சப்தத்தை தாழ்த்தி கூறல் ஸுன்னத்து ஆகும்.

இவ்வாறுதான் இதன் போது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செயலாற்றக்கூடியவர்களாக இருந்தார்கள்.இதை மிக்தாத் பின் அஸ்வத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.அதில்.....அவ்வாறே நாங்கள் பால் கறந்து எங்களில் ஒவ்வொருவரும் தமக்குரிய பங்கைப் பருகினோம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குரிய பங்கை அவர்களுக்காக எடுத்து வைத்தோம்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரவில் (எங்களிடம்) வந்து, உறங்கிக்கொண்டிருப்பவரை விழிக்கச் செய்யாமல்,விழித்திரு ப்பவர்களுக்குக் கேட்கும் விதமாக (மெதுவாக) முகமன் (சலாம்) சொல்வார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:2055).

### 8 ஸலாமை-முகமனை-எத்திவைப்பது ஸுன்னத்து ஆகும்.

இன்னாருக்கு எனது ஸலாமை எத்திவையுங்கள் என உங்களிடம் ஒருவர் சொல்வதை போன்று அந்த ஸலாமை உரியவருக்கு எத்தி வைப்பதும் ஸுன்னத்து ஆகும்.

**ஆயிஷா(ரலியல்லாஹு அன்ஹா)அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ் இதற்கான சான்றாகும்.** அதில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.**(ஒரு முறை) நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னிடம்,'ஆயிஷாவே! இதோ ஜிப்ரீல் உன் மீது சலாமுரைக்கிறார்**' என்று கூறினார்கள். நான், 'வ அலைஹிஸ் ஸலாமு வ ரஹ்முத்துல்லாஹி- அவரின் மீதும் (அல்லாஹ்வின்) சாந்தியும் அல்லாஹ்வின் கருணையும் அவனுடைய அருள் வளங்களும் பொழியட்டும்.என கூறினேன்'. (நூல்,புகாரி,எண்:3217,முஸ்லிம்:2447)

இவ்வதீஸின் பிரகாரம் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவரகள் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களது ஸலாத்தை அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு எத்தி வைத்தது போல் ஸலாத்தை ஒருவருக்கு எத்தி வைத்தல் ஸுன்னத்தாக இருக்கிறது.மேலும் ஸலாமை ஒருவர் மூலமாக எத்திவைப்பதும் ஸுன்னத்து ஆகும்.

## 9 சபைக்குள் நுழையும் போதும் அதிலிருந்து பிரிந்து விடை பெற்று செல்லும் போதும் ஸலாம் கூறல்.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் "**ஒரு சபையை முடித்து விட்டால் ஸலாம் கூறி கொள்ளட்டும்,மேலும் ஒரு சபையிலிருந்து எழுந்திட நாடினாலும் ஸலாம் கூறிக்கொள்ளட்டும், ஒருவரை விட மற்றவருக்கு மிக உரிமையானது அல்ல**". (நூற்கள்,அஹ்மத்,எண்:9664,அபூ தாவுத்,எண்:5208,திர்மிதி, எண்:2706).இதை இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.ஸஹீஹ் அல் ஜாமிஃ.(1/132)

## 10 சந்திப்பின போது ஸலாம் கூறுவதுடன் -முஸாஃபஹா-கட்டியணைத்து ஆறத்தழுவிக் கொள்ளல் ஸுன்னத்து ஆகும்.



இவ்வாறு தான் நபித்தோழர்கள் செயலாற்றி வந்தார்கள். இதற்கான சான்றாக கதாதா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.நான் அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ‘முஸாஃபஹா (கரம் பற்றி வாழ்த்துத் தெரிவிக்கும் வழக்கம்) நபித்தோழர்களிடையே இருந்ததா?’ என்று கேட்டேன்.அதற்கு அவர்கள், ‘ஆம் (இருந்தது)’ என்றார்கள்.(நூல்,புகாரி,எண:6263).

## 11 சந்திக்கும் போது புன்முறுவல் செய்தலும்,சிரித்த முகத்துடன் சந்திப்பதும் ஸுன்னத்து ஆகும்.



அபூதர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: என்னிடம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் "**நல்லறங்களில் எதையும் அற்பமாகக் கருதாதீர்; உம்முடைய சகோதரரை மலர்ந்த முகத்துடன் நீர் சந்திப்பதானாலும் சரியே**" என்று (நூல்,முஸ்லிம்,எண்:2626) திர்மிதியில் அபீ தர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்,அல்லாஹிவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "**நீர் உமது சகோதரனை புன்முறுவலுடன் நோக்குவது கூட ஸதகா தர்மம் ஆகும்**". (திர்மிதி,எண்:1956).இதை இமாம் அல் பானி அவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

## 12 நல்ல வார்த்தைகள் பேசுவது ஸுன்னத்து ஆகும்.அதுவும் -ஸதகா- தர்மம் ஆகும்.

சபைகள்,சந்திப்புகள்,என அனைத்து நிலைகளிலும் நல்ல வார்த்தைகள் பேசுவது ஸுன்னத்து ஆகும்.ஏனெனில் அவையும் தர்மம்-ஸதகா-ஆகும்.

இதை அபீ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.அதில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் "**நல்ல வார்த்தை-பேசுவதும்- ஸதகா-தர்மம்-ஆகும்.**" (நூல்,புகாரி,எண்:2989,முஸ்லிம்,எண்:1009).

மனிதர்களிடத்தில் பரவலாக அதிகம் பேசப்படுகின்ற நல்ல வார்த்தைகளை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டார்கள் எனின் பாரியளவு நன்மைகளையும் இவ்வாறான அதிகமான தர்மங்களையும் பெற்றுக் கொள்வார்கள்.

ஆசிரியர் அஷ்ஷைக் பின் உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது ஒருவரிடத்தில் உங்கள் சுகம் எப்படி..?நீங்கள் எப்பிடி உள்ளீர்கள்?உங்களின் சகாக்கள் எப்படி சுகமா....?எனும் வார்த்தைகள் கூட நல்ல வார்த்தைகளாகும்.

உங்கள் குடும்பத்தினர் எவ்வாறு சுகமா...?போன்றும் இவை போன்றவைகளும் நல்ல வார்த்தைகளாகும்.ஏனெனில் இவ்வாறான நல்ல வார்த்தைகள் ஒருவரது உள்ளத்தில் மகிழ்வை ஏற்படுத்துகிறன.எனவே உமது ஒவ்வொரு நல்ல வார்த்தையும் அல்லாஹ்விடத்தில் உமக்கான உயர்வான தர்மமாகவும்,கூலியாகவும் காணப்படுகின்றன. (பார்க்க, இவர்களது ரியாழுஸ்ஸலாலிஹீனுக்கான விளக்கவுரை. 2/996).ஒருவரை சந்திக்கும் போது சிரித்த முகத்துடன் சந்திப்பதும் நல்ல வார்த்தை பேசுவதும் ஸுன்னத்து ஆகும் எனும் பாடத்தில்.

## 13 சபையில் அல்லாஹ்வை நினைவு கூறல் ஸுன்னத்து ஆகும்.



சபைகளில் அல்லாஹ்வை நினைவு கூறலை தூண்டியும் அதன் சிறப்புகள் பற்றியும் அதிகமான ஹதீஸ்கள் வந்துள்ளன.அவற்றுள் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸ்.அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.:**வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ்விடம் வானவர்கள் சிலர் உள்ளனர்.அவர்கள் பூமியில் சுற்றிவருகின்றனர்.அல்லாஹ்வை நினைவு கூர்ந்து போற்றும் சபைகளைத் தேடி வருகின்றனர்.அல்லாஹ்வைப் போற்றும் சபை ஒன்றை அவர்கள் கண்டால்,அவர்களுடன் அவ்வானவர்களும் அமர்ந்து கொள்கின்றனர்.அவர்களில் சிலர் வேறு சிலரைத் தம் இறக்கைகளால்**

**சூழ்ந்து,தமக்கும் முதல் வானத்துக்கும் இடையிலான பகுதியை நிரப்புகின்றனர். (இறைவனை நினைவுகூரும்) அம்மக்கள் கலைந்து சென்றதும் அ(ந்த வான)வர்கள் வானுலகிற்கு ஏறிச் செல்கின்றனர்.........**(நூல், புகாரி,எண்:6408,முஸ்லிம், எண்:2689)

## 14 சபையை முடிக்கும் போது (கஃப்ஃபாரதுல் மஜ்லிஸ்) துஆவை கொண்டு முடித்தல் ஸுன்னத்து ஆகும்.

سُبْحَانَكَ اللّهُمَّ وَبِحَمْدِكَ أَشْهَدُ أن لاَ إلَهَ إلاّ أنْتَ، أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

அபூ ஹுரைராரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"எவர் ஒருவர் சபையில் அமர்ந்து தவறுகள் அதிகரித்து விட்டனவோ அவர் அந்த சபை முடிவில் எழும்புவதற்கு முன்னர் ஸுபஹானகல் லாஹும்ம வபிஹம்திக, அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லா அன்த,அஸ்தக் ஃபிருக வஅதூபு இலைக.என கூறினால் அவருக்கு அந்த சபையில் ஏற்பட்ட அனைத்து தவறுகளும் மன்னிக்கப்பட்டு விடும்".** (நூல்,அத்திர்மிதி,எண்:3433, இமாம் அல்பானி அவர்கள் இந்த ஹதீஸை ஸஹீஹ் என குறிப் பிட்டுள்ளார்கள். (ஸஹீஹ் அல் ஜாமிஃ 2/1065).

## ஆடை,அலங்காரத்தின் போதான ஸுன்னத்துக்கள்



### 1 பாதனி அணியும் போது வலதை முற்படுத்துவது ஸுன்னத்து ஆகும்.



ஒருவர் காலணி அணியும் போது முதலில் வலக் காலில் அணிவதும் கழற்றும் போது முதலில் இடக்காலில் இருந்து கழற்றுவதும் விரும்பத்தக்கதாகும்.

இதை பின்வரும் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.இதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**உங்களில் ஒருவர் காலணி அணியும் போது முதலில் வலக் காலில் அணியட்டும்.அதைக் கழற்றும் போது முதலில் இடக் காலில் இருந்து கழற்றட்டும்.வலது முதலில் அணியப்படக்கூடியதாகவும்,இறுதியாக கழற்றப்பட கூடியதாகவும் இருக்கட்டும்**". (நூல்,புகாரி,எண்:5857).

முஸ்லிமில் வரக்கூடிய மற்றுமொரு அறிவிப்பில் பின்வருமாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:"**உங்களில் ஒருவர் ஒரேயொரு காலணியில் நடக்க வேண்டாம். ஒன்று, இரு காலணிகளையும் ஒருசேர அவர் அணிந்துகொள்ளட்டும்.அல்லது இரண்டையும் ஒருசேர கழற்றிவிடட்டும்**". இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்: 2097)

### இவ்விரு ஹதீஸிலும் மூன்று ஸுன்னத்துக்கள் உள்ளன. அவையாவன:

1. பாதனி அணியும் போது வலதை முற்படுத்தல்.
2. பாதனியை கழற்றும் போது இடதை முற்படுத்தல்.
3. ஒரு பாதனியுடன் பயணிக்காது இருக்கும் பொருட்டு பாதனி அணிந்தால் இரண்டையும் அணிதல், கழற்றினால் இரண்டையும் ஒரு சேர கழற்றி விடல்.

## 2 ஆடைகளில் வெண்ணிற ஆடை அணிவது ஸுன்னத்தாகும்.




அதாவது இதனால் நாடப்படுவது வெண்ணிற ஆடைகளையும் இதை ஒத்த ஆடைகளையும் அணிவதாகும்.இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் இவ்வாறு அணிவது ஸுன்னத்தாகும்.அந்த ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது "**நீங்கள் வெண்ணிற ஆடைகளை அணியுங்கள்,மேலும் உங்களில் மரணித்தவர்களுக்கும் வெண்ணிற ஆடையை கொண்டு கபனிடுங்கள்.இதுவே உங்களின் ஆடைகளில் மிகச் சிறந்த ஆடையாகும்**" (நூல் அஹ்மத்,எண்:2219,அபூ தாவுத்,எண்:3878, அத்திர்மிதீ, எண்:994). (இமாம் அல் பானி அவர்கள் இதை ஸஹீஹ் என அவர்களது ஸஹீஹ் அல் ஜாமிஃ இல் குறிப்பிட்டுள்ளார் கள்.1/267).

ஆசிரியர் ஷைக் பின் உஸைமீன் ரஹ்மதுல்லாஹ் அவர்கள் குறிப்பிடும் போது வேட்டி,சட்டை,மேலாடை என அனைத்தையும் இது உள்ளடக்குகிறது.எனவே இவை வெண்ணிறத்தில் இருத்தல் வேண்டும்.அதுவே மிகச் சிறப்பானது.எனினும் வேறு நிறத்தில் ஆடை அணிந்தாலும் அதுவும் குற்றமாக மாட்டாது. இருப்பினும் அவை பெண்களுக்கு என மாத்திரம் குறிப்பானதாக இல்லாது இருத்தல் கட்டாய நிபந்தனையாகும்.-(பார்க்க:இவர்களது ரியாழுஸ்ஸாலிஹீனுக்கான விளக்கவுரை (2/1087).

## 3 வாசனைத்திரவியங்களை பாவிப்பது ஸுன்னத்தாகும்.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல்லாஹு லைஹு வஸல்லம் அவர்கள் கூறும் போது "**எனக்கு உலகில் பெண்களும்,வாசனைத் திரவியங்களும் விருப்பத்துக்கு உரியன.எனினும் எனது கண்குளிர்ச்சி அனைத்தும் தொழுகை தான்".என. குறிப்பிட்டார்கள்.**" (நூல் அஹ்மத்,எண் 12293, அந்நஸாஈ, எண்:3940).இமாம் அல்பானி அவர்கள் இதை ஸஹீஹ் அந்நஸாஈ இல் ஹஸன் ஸஹீஹ்,என குறிப்பிட்டுள்ளார்கள்).



**எனினும் "உங்கள் உலகில் மூன்று அம்சங்கள் எனக்கு விருப்பமானது" எனும் சொற்றொடர் பலவீனமானது.**

**மேலும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வெறுக்கும் விதமான வாடை காணப்படுவதை அவர்கள் வெறுப்பவர்களாக இருந்தார்கள்.** புகாரியில் இடம் பெற்றுள்ள அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஒரு நீண்ட ஹதீஸில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். **"நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துர்வாடை -அதாவது நாற்றம்-என்பது அவர்களுக்கு மிக கடுமையான வெறுப்புக்குரியாதாகவே காணப்பட்டது"**.(நூல்,புகாரி,எண்:6972).

## 4 வாசனைத்திரவியங்களை -நறுமணத்தை- பெற மறுப்பது மகரூஹ் ஆகும்.

ஒரு ஹதீஸில் அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு)அவர்கள் கூறுகின்றார்கள் 'நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (தமக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட) நறுமணப் பொருளை மறுத்ததில்லை'.(நூல்,புகாரி,எண்:2582).

## 5 தலை சீவும் -வாரும்-போது வலதை முற்படுத்துவது ஸுன்னத்தாகும்.

அதாவது தலை சீவும் -வாரும்- போது வலது புறத்தால் ஆரம்பித்து பின்னர் இடது புறத்தை சீர் செய்தல் ஆகும்.



**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கின்றது.**

ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் செயல்கள் அனைத்திலும் வலப் பக்கத்தை(க் கொண்டு தொடங்குவதை) யே விரும்பக்கூடியவர்களாக இருந்தார்கள்; காலணி அணியும் போதும்,தலை வாரிக் கொள்ளும் போதும், (உளூ மற்றும் குளியல் மூலம் தம்மைத்) தூய்மைப் படுத்திக்கொள்ளும் போதும் (வலப் பக்கத்திலிருந்து தொடங்குவதையே விரும்பி வந்தார்கள்).(நூல்,முஸிலிம்,எண்: 268).

## தும்மல்,கொட்டாவி ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள்



### தும்மலின் போதான ஸுன்னத்துக்கள்:

1 தும்மியவர் “அல் ஹம்துலில்லாஹ்” என கூறுவது ஸுன்னத்து ஆகும்.

الْحَمْدُ لِلَّهِ / يَرْحَمُكَ اللَّهُ / يَهْدِيكُمُ اللَّهُ ، وَيُصْلِحُ بَالَكُمْ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: **"உங்களில் ஒருவர் தும்மியதன் பின் "அல்ஹம்துலில்லாஹ்" எனக்கூறினால் அதை கேட்பவர் அல்லது அவரின் சகோதரன் ("யர்ஹமுகல்லாஹ்" என்று) மறுமொழி கூறட்டும். "யர்ஹமுகல்லாஹ் என அவருக்கு சொல்லப்பட்டால் அவர் "யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு பாலகும்" என அவர் சொல்லட்டும்.** (நூல்,புகாரி, 6224).இதை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக் கின்றார்கள்.

الْحَمْدُ لله عَلَى كلِّ حَال

இவ்வாறு அல்லாஹ்வை புகழும் வார்த்தைகள் பலவகையிலும் சொல்லல்,சில போது "அல் ஹம்து லில்லாஹி அலா குல்லி ஹால் "எனவும் அபூ தாவுதில் பிரிதொரு அறிவிப்பில் வந்துள்ளது. அதில் **"உங்களில் ஒருவர் தும்மினால் அவர் அல்ஹம்து லில்லாஹி அலா குல்லி ஹால் என கூறட்டும்".** (நூல்,அபூ தாவுத்,எண்:5031,இமாம் இப்னுல் கையிம் ரஹிம ஹுல்லாஹ் அவர்கள் அவர்களது ஸாதுல் மஆத் (2/436) எனும் நூலில் இவ்வதீஸ் பற்றி குறிப்பிடும் போது இதன் அறிவிப்பாளர் தொடர் வரிசை ஸஹீஹ் ஆனது என குறிப்பிடுகிறார்கள்.

يَرْحَمُكَ الله / يَهْدِيكُمُ اللَّهُ ، وَيُصْلِحُ بَالَكُمْ

தும்மியவர் **அல்ஹம்து லில்லாஹ்** என அல்லாஹ்வை புகழ்ந்தால் அதை கேட்டவர் "**யர்ஹமகல்லாஹ்**" எனக் கூறுவதும் இதை கேட்ட தும்மியவர் பதிலளிக்கும் முகமாக "**யஹ்தீகுமுல்லாஹு,வயுஸ்லிஹு பாலகும்**".என சொல்லுவது ஸுன்னத்து ஆகும்.இவையனைத்தும் முன்னர் கடந்து சென்ற அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2 தும்மியவர் "அல்ஹம்து லில்லாஹ்" என அல்லாஹ்வை புகழாத போது தும்மியவருக்கு பதில் அளிக்காது இருப்பது ஸுன்னத்து ஆகும்.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் பிரகாரம் தும்மியவர் "**அல்ஹம்து லில்லாஹ்**" என அல்லாஹ்வை புகழாத போது அவருக்கு பதில் அளிக்க மாட்டாது.இவ்வாறான நிலையில் தும்மியவருக்கு பதில் அளிக்காது இருப்பதும் ஸுன்னத்து ஆகும்.அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கருகில் இரண்டு மனிதர்கள் தும்மினர்.அப்போது அவர்களில் ஒருவருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் **('யர்ஹமு கல்லாஹ் - அல்லாஹ் உமக்குக் கருணைபுரிவானாக' என்று)** மறுமொழி கூறினார்கள்.மற்றொருவருககு மறுமொழி கூற வில்லை.அப்போது அவர்களிடம் (இது குறித்துக்) கேட்கப் பட்டது.அதற்கவர்கள்,'இவர் (தும்மியவுடன்) '**அல்ஹம்துலில் லாஹ்**' என்று இறைவனைப் புகழ்ந்தார்.அவர், '**அல்ஹம்து லில்லாஹ்**' என்று இறைவனைப் புகழவில்லை.(எனவே, இவருக்கு மறுமொழி பகர்ந்தேன்.அவருக்கு மறுமொழி பகரவில்லை)'என்று பதிலளித்தார்கள். (நூல்,முஸ்லிம், எண்:2992)

எனினும் ஆசிரியர் மாணவர்களுக்கும்,தந்தை பிள்ளைக்கும் இந்த ஸுன்னத்தை கற்றுக் கொடுத்து பயிற்று வித்து இந்த ஸுன்னாவை அறியாத அல்லது மறந்து விட்ட அவர்கள் இதை உயிரூட்டக்கூடிய சூழ் நிலைகளில் கற்றுக் கொடுக்கப் படக்கூடிய நிலைகளாயின் தும்மியவர் அல் ஹம்துலில்லாஹ் என அல்லாஹ்வை புகழாத போது "**குல் அல் ஹம்து லில்லாஹ்**" அல் ஹம்து லில்லாஹ் கூறுங்கள் என கூறி சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறே தடிமன் சுரம் உள்ளவர் மூன்று முறைகளுக்கு மேல் தும்மினால் அதற்கும் பதிலளிக்க தேவை கிடையாது.

இமாம் அபூதாவத் அவர்கள் தமது அஸ்ஸுனன் எனும் நூலில் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு வாயிலாக நபிகளாரை தொட்டும் மர்ஃபூஃ,மவ்கூப்பாக அறிவிக்கும் ஹதீஸ் இதற்கு சான்றாக இருக்கிறது.இதில் நபிகளார் கூறி னார்கள்."**நீர் உமது சகோதரன் மூன்றுதடவைகள் தும்மினால் அவருக்கு பதிலளிப்பீராக அதற்கு மேலுள்ளவை அது தடிமன் ஜுரம் ஆகும்.**" (நூல்,அபூதாவத்,எண்:5034,இமாம் அல் பானி அவர்கள் இதை மர்ஃபூஃ,மற்றும் மவ்கூப் பான ஹஸன் தரத்தை கொண்டது என குறிப்பிட்டுள்ளார்கள். (ஸஹீஹ் அபூ தாவத்,4/308).

இதை பலப்படுத்தும் விதமாக முஸ்லிமில் ஸலமது இப்னு அக்வா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் வரக்கூடிய ஹதீஸில்.சலமா பின் அல்அக்வஉ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அருகில் ஒரு மனிதர் தும்மி ("அல்ஹம்து லில்லாஹ்" என்று கூறி)னார்.அவருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "**யர்ஹமு கல்லாஹ்" (அல்லாஹ் உமக்குக் கருணை புரிவானாக)** என்று மறுமொழி கூறினார்கள்.அவரே மற்றொருமுறை தும்மினார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "**இந்த மனிதருக்கு ஜலதோஷம் ஏற்பட்டுள்ளது**" என்று சொன்னார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:2993)

**முன்னையதன் சாரம்சம் தும்மியவருக்கு இரு நிலைகளில் பதிலளிக்கப்பட மாட்டாது.அவையாவன.**

1. அல்லாஹ்வை தும்மியவர் புகழாத போது.
2. மூன்று தடவைகளுக்கு மேல் தும்மியவர். அவர் ஜுரத்தால், தடிமனால் பீடிக்கப்பட்டவர்.

## கொட்டாவியின் போதான ஸுன்னத்துக்கள்.

### கொட்டாவியின் போது அதை அடக்கிகொள்ளல் அல்லது கையை வைத்து கட்டுப்படுத்திக் கொள்ளல் ஸுன்னத்து.

**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கிறது.**

**"அல்லாஹ் தும்மலை விரும்புகிறான்.கொட்டாவியை வெறுக்கிறான். எனவே, ஒருவர் தும்மியவுடன் 'அல்ஹம் துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று சொன்னால்,அதைக் கேட்கும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவருக்கு ('அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரிவானாக' என) மறுமொழி கூறுவது அவசியமாகும்.ஆனால், கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும்.எனவே,உங்களில் எவரேனும் கொட்டாவி விட்டால் முடிந்தவரை அதைக் கட்டப்படுத்தட்டும்.ஏனெனில்,உங்களில் ஒருவர் (கட்டுப்படுத்தாமல் 'ஹா' என்று சப்தமிட்டுக்) கொட்டாவி விட்டால் அதைப் பார்த்து ஷைத்தான் சிரிக்கிறான்".** அறிவிப்பாளர் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு.(நூல்,புகாரி,எண்:26663)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: என அபீ ஸஈத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். "**உங்களில் ஒருவருக்குக் கொட்டாவி ஏற்பட்டால்,அவர் தமது வாயின் மீது கையை வைத்து அதைத் தடுக்கட்டும்.ஏனெனில்,ஷைத்தான் (அப்போது வாய்க்குள்) நுழைகின்றான்.**" (நூல்,முஸ்லிம்,எண் :2995). இவ்வாறு அதை வாயால் அடக்கி கொள்வது,வாய் திறக்கப்படுவதை தடுத்துக் கொள்ளல்,பற்களால் உதடுகளை அழுத்திப் பிடித்துக்கொள்ளல் கையை வைத்துக் கொள்ளல் ஆகியவற்றால் கொட்டாவியை தடுத்துக் கொள்ளல் மூலமாக இதும் இடம் பெறலாம்.

மேலும் கொட்டாவி விடுபவர் கொட்டாவியின் போது வெளிவரக்கூடிய (ஆஹ்...,ஹா...) எனும் சப்தங்களை எழுப்பாது இருத்தல் மிகச்சிற்பானது.இவ்வாறான சப்தங்கள் ஷைத்தான் அவரை பார்த்து சிரிப்பதற்கான காரணியாக அமைகிறது.


**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கிறது:**

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். ஆகவே உங்களில் எவரேனும் கொட்டாவி விட்டால் தம்மால் முடிந்த வரை அதை அடக்கிக் கொள்ளட்டும்.ஏனெனில், எவரேனும் 'ஹா' என்று (கொட்டாவியால்) சத்தம் போட்டால் ஷைத்தான் சிரிக்கிறான்**".என அபூ ஹுரைரா(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(நூல்,புகாரி,எண்: 3298,முஸ்லிம்.எண்:2994).

முக்கிய குறிப்பு: சிலர் கொட்டாவியின் பின்னர் ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு தேடுகின்றனர்.இதற்கான எவ்வித சான்றுகளும் நபி வழிகாட்டலில் கிடையாது. இதையும் தாண்டி இவ்வாறு செய்கின்றவர்கள் இந்த சந்தர்ப்பத்தின் போது நபிகளாரை தொட்டும் வந்திராத வழிகாட்டலை பின்பற்றுவதனூடாக அவர்களது வழிகாட்டலுக்கு மாற்றமும் செய்கின்றனர்.



## நாளாந்த ஏனைய ஸுன்னத்துக்கள்



### மலசல கூடம் நுழையும் போதும் அதிலிருந்து வெளியேறும் போதும் -கூறுமாறு-வந்துள்ள திக்ரை கூறல்.



எனவே மலசல கூடம் நுழையும் ஒருவர் புகாரி முஸ்லிமில் வந்துள்ள -துஆவை-கூறுவது ஸுன்னத்து ஆகும்.

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِثِ

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கழிவறைக்குள் நுழையும் போது **'அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மினல் குப்ஸி வல் கபாயிஸி'**.(இறைவா! ஆண் பெண் ஷைத்தான்களின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.) என்று கூறுவார்கள். (நூல்,புகாரி,எண்:6322, முஸ்லிம்,எண்:375).

**மேலும் கழிவறையிலிருந்து வெளியேறும் போது பின்வரும் துஆவை கூறல் ஸுன்னத்து ஆகும்:**

غُفْرَانَكَ

இமாம் அல் பானி அவர்கள் ஸஹீஹ் எனும் நிலையில் இமாம்களான அஹ்மத், அபூதாவுத், அத்திர்மிதி ஆகிய கிரந்தங்களில் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் வந்துள்ளதன் பிரகாரம் அதில் நபிகளார்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கழிவறையிலிருந்து வெளியேறும் போது "**குப்ரானக**" என கூறுவார்கள்.(நூல்,அஹமத்,எண்:25220, அபூதவுத்,எண்:30, அத்திர்மிதி,எண்:7,இமாம் அல் பானி அவர்கள் இதை தஹ்கீகு மிஷ்காதுல் மஸாபிஹில் 1/116) ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

### வஸிய்யத்-மரண சாசனத்தை-எழுதிவைப்பது ஸுன்னத்து ஆகும்.




ஒரு முஸ்லிம் அவர் நோயுற்ற போதிலும் அவரின் ஆரோக்கியமான நிலையிலும் இறுதி மரணசாசனத்தை -வஸிய்யத்தை-எழுதிவைப்பது ஸுன்னத்து ஆகும் இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதற்கு ஏற்ப அதில் நபிகளார் குறிப்பிடும் போது: "**(மரண சாசனம் செய்ய) ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றிருக்கும் எந்த ஒரு முஸ்லிமுக்கும் அவர் தன்னுடைய மரண சாசனத்தை எழுதித் தன்னிடம் வைத்திருக்காமல் இரண்டு இரவுகள் கூட கழிப்பதற்கு அனுமதியில்லை**". என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா)அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(புகாரி,எண்:2783,முஸ்லிம்,எண்:1626) இவ்வாறு இவ்வதீஸில் இரண்டு இரவுகள் என்பதானது ஒரு வரையறை அல்ல. மாறாக ஒருவரிடத்தில் அவரின் வஸிய்யத்து எழுதப்படாது அவரை விட்டும் குறுகிய காலம் கூட கடந்து விடக்கூடாது என்பதாகும்.ஏனெனில் அவர் எப்போது மரணிப்பார் என்பதை அறிய மாட்டார்.மேலும் இது அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான ஸுன்னத்தும் ஆகும்.

எனினும் இவ்வாறான வஸிய்யத்துகளில் அல்லாஹ்வின் கடமைகளான ஸகாத்,ஹஜ் அல்லது கஃப்ஃபாராக்கள் - குற்றப்பரிகாரங்கள்- போன்றனவும் அல்லது அடியார்களது உரிமைகள் கடன் நம்பிக்கையானவைகள் ஒப்படைத்தல் -அமானிதங்கள்-இவைகள் போன்றனவும்.ஸுன்னத்து அல்ல மாறாக அவை கட்டாயமானவைகளாகும்.ஏனெனில் இவைகள் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய அம்சங்களாகும்.இதிலும் குறிப்பாக இவ்வுரிமைகள் தொடர்ப்பாக எவறும் அறிந்திராத போது இது மிகவும் ஏற்றமானது. ஆகவே இதன் பொதுவான அடிப்படை விதியும் **{கட்டாய கடமை ஒன்று,ஒன்றின் மீது தான் கடமையாகும் எனின் அதுவும் கட்டாயமானது}**.

### கொடுக்கல் வாங்கலின் போது விட்டுக்கொடுப்புடனும், நெகிழ்வுத்தன்மையுடனும் நடந்து கொள்ளல்.

அதாவது வாங்குபவரும் விற்பவரும் அவர்களது கொடுக்கல் வாங்கலின் போது அவர்களுக்கு இடையிலான விலையில் கடுமையாகவும்,அதிகம் விவாதிக்காமலும் பேரம் பேசாதும் விட்டுக் கொடுப்புடனும்,நெகிழ்வுத் தன்மையுடனும் நடந்து கொள்ளல்.



**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கிறது:**

ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "**வாங்கும் பொழுதும் விற்கும் பொழுதும் வழக்குரைக்கும் பொழுதும் பெருந்தன்மையாக நடந்து கொள்ளும் மனிதருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!' என.** (நூல்,புகாரி,எண்:2076)

அவ்வாறேதான் ஒருவர் அவரின் உரிமையை வேண்டி நிற்கும் போதும் கூட மிருதுவாகவும்,நலினமாகவும் நடந்து கொள்வது ஸுன்னத்து ஆகும்.ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் போது "**வழக்கு ரைக்கும் பொழுதும்**" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

### ஒவ்வொரு வுழுவுக்கு பின்னரும் இரு ரக்அத்துக்களை தொழல்.



இது அதிகப்படியான மகிமையை கொண்டமைந்த- அதாவது சுவனத்திற்குள் நுழைவிக்கும் விதமான நாளாந்த ஸுன்னத்துக்களில் ஒன்றாகும். "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு ஃபஜ்ருப் பொழுதில்,'**பிலாலே! இஸ்லாத்தில் இணைந்த பின் நீர் செய்த சிறந்த அமல் பற்றிக் கூறும்!ஏனெனில் உம்முடைய செருப்போசையை சொர்க்கத்தில் கேட்டேன்' என்று பிலால்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கேட்டார்கள்.**அதற்கு பிலால் (ரலியல்லாஹு அன்ஹு) 'இரவிலோ,பகலிலோ நான் உளூச் செய்தால் அவ்வுளூவின் மூலம் நான் தொழ வேண்டுமென்று நாடியதைத் தொழாமல் இருப்பதில்லை.இதுதான் என்னுடைய செயல்களுள் சிறந்த செயல்' என்று விடையளித்தார்கள் (நூல்,புகாரீ,எண்:1149,முஸ்லிம்,எண்:2458). இதில் வந்துள்ள அரபு வார்த்தை "**தப்ப நஃலைக**" என்பது -செறுப்பசையின் ஓசை என்பதாகும்.

### இன்னொரு- தொழுகைக்காக அதை எதிர்ப்பார்த்து காத்திருத்தல்.



ஒரு தொழுகையிலிருந்து இன்னொரு- தொழுகைக்காக அதை எதிர்ப்பார்த்து காத்திருத்தல். அதிக நன்மைகளை அள்ளித்தரக் கூடிய ஒரு ஸுன்னத்தாகும்.

**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கின்றது:**

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**உங்களில் ஒருவர் தொழுகைக்காகக் காத்திருக்கும் நேரமெல்லாம் தொழுகையிலேயே அவர் இருக்கிறார்.மேலும்,அவரை அவரின் குடும்பத்தார் மீது திரும்பாது தடுத்துக்கொண்டிருப்பதும் தொழுகை அல்லாது வேறு ஒன்றும் இல்லை".** (நூல்,புகாரி,எண்:659,முஸ்லிம், எண்: 649), அவர் தொழுகைக்காக காத்திருப்பதனால் தொழுகையின் நன்மையை பெற்றுக்கொள்கின்ரார்.

அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் கூறினார்கள்:"**உங்களில் ஒருவர் தொழக் கூடிய இடத்தில் அமர்ந்திருக்கும் வரை வானவர்கள் அவருக்காக பிரா ர்த்திக்கின்றனர்!அங்கே,அவரின் காற்றுப் பிரிந்து,உளூ நீங்கிவிடாமலிருக்கும் வரையும் (பிறருக்குத்) துன்பம் தரும் எதையும் அவர் செய்யாமலிருக்கும் வரையும் 'இறைவா! இவர் மீது கருணை செய்வாயாக! இவருக்கு இரக்கம் காட்டுவாயாக!' என்று வானவர்கள் பிரார்த்திக்கிறார்கள்!உங்களில் ஒருவர் தொழுகைக்காகக் காத்திருக்கும் வரை அவர் தொழுகையிலேயே இருக்கிறார்!' மேலும் அவரை அவரது குடும்பத்தின் பால் திரும்பி விடாது தடுத்து கொண்டிருப்பதும் தொழுகையை தவிர வேறு ஒன்றும்கிடையாது.** (நூல்,புகாரி, எண்:659, முஸ்லிம்,எண்:649). "**வுழூ நீங்கி விடாது வரை**" என்பது வுழூவை முறித்து விடும் ஒன்று இடம்பெறாத வரை என்பதாகும்.மேலும் இமாம் முஸ்லிம் அவர்கள் அறிவிப்பில்."**அங்கே,அவரின் காற்றுப் பிரிந்து,உளூ நீங்கி விடாமலிருக்கும் வரை (பிறருக்குத்) துன்பம் தரும் எதையும் அவர் செய்யாமலிருக்கும் வரை**".ஆகும்.(நூல்,முஸ்லிம்,எண்:649).அதாவது இத்தகைய நற்கூலிக்கான நிபந்தனைகளாக அவையில் எவருக்கும் தீங்கிழைக்காமலும்,காற்றுப்பி ரியாமலும் - வுழூ முறிந்து விடாதும்-இருத்தல் வேண்டும்.

## மிஸ்வாக்-தகுச்சியால் பல் துலக்கல்-செய்தல்.



மிஸ்வாக்கு செய்தல் பொதுவாகவே அனைத்து நேரங்களிலும் அதிகம் செய்ய வேண்டிய ஸுன்னத்துக்களில் ஒன்றாகும்.மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "**நான் உங்களுக்கு மிஸ்வாக் -செய்வதை- அதிகம் வழியுறுத்துகின்றேன்**" (நூல்,புகாரி,எண்:888). என சொல்லுமளவுக்கு. அதிகம் ஆர்வம் ஊட்டி உள்ளார்கள். மேலும் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக வந்துள்ள ஹதீஸில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடும் "**மிஸ்வாக்செய்தல் வாய்க்கு சுத்தமானதும், இறைவனிடத்தில்**

**விருப்பமானதாகவும் இருக்கின்றது.**" (நூல்,அஹமத்,எண: (7),அந்நஸாஈ,எண்,(5) இது ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா வாயிலாக வந்துள்ளது.இதை அல்பானியவர்கள் தமது அல் இர்வாஃ (101/1)எனும் நூலில் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள்.

நாம் மேலே மிஸ்வாக் செய்வது மிக முக்கிய ஸுன்னத்தாகும் சந்தர்ப்பங்கள் பலதை சுட்டிக் காட்டினோம்.இரவில் விழித்தெழுதல்,வுழூஃ செய்யும் போது,தொழுகைகளின் போது, வீட்டிற்குள் நுழையும் வேளை போன்றன அவற்றுள் சிலவாகும்.இவை இரவிலும் பகலிலும் நாளாந்தம் பல தடவைகள் திரும்பத்திரும்ப செய்யப்படக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.-அல்லாஹ் மிக அறிந்தவன்-

## ஒவ்வொரு தொழுகாக்காகவும் வுழூவை -அது முறியாது இருக்கும் போதிலும்-புதுப்பித்துக் கொள்ளல்.



ஒரு முஸ்லிமை பொறுத்த வரை ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக வுழூ செய்து கொள்வது ஸுன்னத்து ஆகும். உதாரணமாக ஒருவர் வுழூ செய்து மக்ரிப் தொழுகையை தொழுது விட்டார் எனின் பின்னர் இஷாத்தொழுகையை அடையும் போது அவரின் வுழூ முறியாத போதிலும் கூட அதற்காக புதிதாக வுழூ செய்து கொள்வது ஸுன்னத்து ஆகும்.எனவே ஒவ்வொரு தொழுகைக்குமாக புதிதாக வுழூ செய்வது ஸுன்னத்து ஆகும்.

**இதை பின்வரும் ஹதீஸ் அறிவிக்கின்றது.**

புகாரியில் இடம் பெறும் பின்வரும் ஹதீஸில் "**நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்கும் வுழூ செய்பவர்களாக இருந்தார்கள்**".(நூல்,புகாரி, எண்:214).

மேலும் ஒருவர் அவர் நாள் முழுதுமாக வுழுவின் நிலையில் இருப்பதும் ஸுன்னத்து ஆகும்.ஸவ்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தொட்டும் அறிவிக்கும் ஒரு ஹதீஸில் அவர்கள் கூறுகின்றார்கள். "**ஒரு விசுவாசியை தவிர வேறு எவரும் வுழுவை பேணிப்பாதுகாத்துக்கொள்ள மாட்டார்**". (நூல்,அஹமத்.எண்:22434,இப்னு மாஜா:277,அத்தாரமி, எண்:655.இமாம் அல்பானி அவர்கள் அல் ஜாமிஃ இல் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள் 1/225).

## துஆ-பிரார்த்தனை-செய்தல்.

**ஒரு முஸ்லிம் துஆ-பிரார்த்தனை-செய்ய நாடும் போது செய்ய வேண்டிய ஸுன்னத்துக்கள் பற்றிய விளக்கம்,எனவே அவ்வாறான ஸுன்னத்துக்கள் பின்வருமாறு.**

### 1 வுழுவுடன் இருக்கும் நிலையில் துஆ-பிரார்த்தனை-செய்தல்.

அபூ மூஸா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ் புகாரி,முஸிலிமில் பதிவாகியுள்ளது.அவரது மாமனார் அபீ ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,அபூ ஆமிர் அவர்களை (தளபதியாக்கி) 'அவ்தாஸ்' பள்ளத்தாக்கிற்கு ஒரு படையை அனுப்பிய சம்பவ்வத்தில் வந்துள்ள ஹதீஸ் தொடரில்.இதில் அபூ ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (வீர) மரணமடைந்தார்கள்.பிறகு அவர்கள் அபூமூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வஸிய்யத் செய்தார்கள்.அதில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விருந்தளிக்கும் படியும்,அவர்களுக்காக அல்லாஹ்விடத்தில் பிராத்திக்கும் படியும்.ஆகவே அபூ மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்.(அங்கிருந்து) நான் திரும்பி,நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து அவர்களிடம் எங்கள் செய்தியையும்,அபூ ஆமிர் அவர்களின் செய்தியையும் கூறி,தமக்காகப் பாவமன்னிப்புக் கேட்கும்படி ஆமிர் அவர்கள் வேண்டியிருக்கிறார்கள் என்பது பற்றியும் கூறினேன். அப்போது நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தண்ணீர் கொண்டு வரும்படிக் கூறி,அதில் உளூச் செய்தார்கள். **பிறகு தம் இரண்டு கரங்களையும் உயர்த்தி, 'இறைவா! அபூ ஆமிர் உபைதுக்கு நீ மன்னிப்பு அளிப்பாயாக! மறுமை நாளில் உன் படைப்பினமான மனிதர்களில் பலரையும் விட (அந்தஸ்தில்) உயர்ந்தவராக அவரை ஆக்கு வாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்.** அப்போது அவர்களின் அக்குள்கள் இரண்டின் வெண்மையையும் பார்த்தேன்.(நூல், புகாரி,எண்: 4323,நூல்,முஸ்லிம்,எண்:2498)

### 2 கிப்லாவின் திசையை முன்னோக்கல்

உமர் பின் அல்கத்தாப் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,பத்ருப் போர் நாளில் (எதிரிகளான) இணைவைப்பாளர்கள் (எண்ணிக்கை) ஆயிரம் பேராக இருப்பதையும்,(முஸ்லிம்களான) தம் தோழர்கள் முன்னூற்று பத்தொன்பது பேராக இருப்பதையும் கண்டார்கள்.அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,(தொழுகையின் திசையான) "கிப்லா" வை முன்னோக்கித் தம் கரங்களை நீட்டித் தம் இறைவனை உரத்த குரலில் (அழைத்துப்) பிராத்தித்தார்கள். **"இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதியை நிறை வேற்றுவாயாக. இறைவா! எனக்கு அளித்த வாக்குறுதியை வழங்குவாயாக. இறைவா! இஸ்லாமியரில் இக்குழுவினரை நீ அழித்து விட்டால்,இந்தப்**

**பூமியில் உன்னை (மட்டுமே) வழிபட (இனி) யாரும் இருக்க மாட்டார்கள்"** என்று தம் கரங்களை நீட்டி, கிப்லாவை முன்னோக்கி இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால்,(கைகளை உயர்த்தியதால்) அவர்களுடைய தோள்களிலிருந்து அவர்களின் மேல்துண்டு நழுவி கீழே விழுந்து விட்டது.அப்போது அவர்களிடம் அபூபக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வந்து,அத்துண்டை எடுத்து அவர்களின் தோள்கள் மீது போட்டுவிட்டு, பின்னாலிருந்து அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டு,"அல்லாஹ்வின் தூதரே! உங்கள் இறைவனிடம் வேண்டியது போதும்.அவன் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவான்" என கூறினார்கள். (நூல்,முஸ்லிம்,எண்:1763)

### 3 இரு கைகளையும் மேல் உயர்த்தல்:



இதற்கான சான்றாக முன்னர் குறிப்பிடப்பட்ட இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் சான்றாக இருக்கிறது. **"அதில் அவர்கள் கிப்லாவை முன்னோக்கி கையை உயர்த்தினார்கள்"** என வந்துள்ளது. இந்த ஸுன்னத்துக்கான ஹதீஸ்கள் இவ்வாறே பலவும் வந்துள்ளன.

### 4 பிரார்த்தனையின் ஆரம்பத்தில் அல்லாஹ்வை துதித்து புகழ்ந்தும் பின்னர் நபிகளார் மீது ஸலவாத்து சொல்லியும் ஆரம்பித்தல்.

ஃபுலாலத்பின் உபைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக திர்மிதியில் இடம் பெற்றுள்ள ஹதீஸில் அதில் அவர்கள் அறிவிக்கின்றார்கள்."நாம் நின்று கொண்டிருக்கும் போது ஒரு மனிதர் வந்து இறைவா என்னை மன்னித்தருள்வாயாக..! எனக்கு கருணை காட்டுவாயாக...என வேண்டினார்.**அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தொழுதவரே நீர் அவசரப்பட்டு விட்டீர்கள்,நீர் தொழுது அமர்ந்து புகழுக்குரிய அல்லாஹ்வை புகழ்ந்து,பின்னர் என் மீது ஸலாம் கூறிய பின்னர் அதை கேட்டிருக்கலாம்"** என கூறினார்கள்.(நூல், அத்திர்மிதி,எண்:3476),(இதை இமாம் அல் பானியவர்கள் ஸஹீஹ் என குறிப்பிட்டுள்ளார்கள். (1/172)

### 5 அல்லாஹ்வின் அழகிய திரு நாமங்களை கொண்டு பிரார்த்தனை செய்தல்.

ஒருவர் பிராரத்தனையின் போது அந்த பிராரத்தனையின் உள்ளடக்கத்துக்கு ஏற்றவாறு பொருத்தமான அல்லாஹ்வின் திரு நாமங்களை தெரிவு செய்து கொள்வார். எனவே அபிவிருத்தி விஸ்திரனம் தொடர்பாக கேட்கும் போது "**அர்ரஸ்ஸாக்**", எனவும் கருணையை கருத்தில் கொள்ளும் போது "**யா ரஹ்மான்**" எனவும் கண்ணியத்தின் போது "**யா இஸ்ஸு**" எனவும் பாவமீட்சியின் போது "**யா கஃபூர்**" எனவும் நோய் நிவாரனத்தின் போது "**யா ஷாஃபீ**" எனவும் தெரிவு செய்து கொள்வார்.

இவ்வாறே அவரது பிரார்த்தனையின் போது பொறுத்தமானவற்றை தெரிவு செய்து கொள்வார்.இதை அல்லாஹ் குறிப்பிடும் போது. **"அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன;அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்"** (அல் அஃராப்:180)

### 6> பிரார்த்தனையை திரும்பத்திரும்ப கேட்டலும் அதில் இரைஞ்சலும்.

இதை இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுு அன்ஹுுமா அவர்கள் வாயிலான முன்னர் குறிப்பிடப்பட்ட ஹதீஸில் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். **"இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதியை நிறை வேற்றுவாயாக. இறைவா! எனக்கு அளித்த வாக்குறுதியை வழங்கு வாயாக."** என இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தார்கள்.எந்த அளவுக்கென்றால்,(கைகளை உயர்த்தியதால்) அவர்களுடைய தோள்களிலிருந்து அவர்களின் மேல்துண்டு நழுவி கீழே விழுந்து விட்டது.அப்போது அவர்களிடம் அபூ பக்ர் (ரலியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் வந்து,அத்துண்டை எடுத்து அவர்களின் தோள்கள் மீது போட்டுவிட்டு, **"அல்லாஹ்வின் தூதரே! உங்கள் இறைவனிடம் வேண்டியது போதும்.அவன் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவான்" என்று கூறினார்கள்.**(நூல்,முஸ்லிம்,எண்: 1763)

அபூ ஹுுரைரா(ரலியல்லாஹுு அன்ஹுு)அவர்கள் வாயிலாக புகாரி,முஸ்லிமில் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தவ்ஸ் கூட்டத்தாருக்காக பிரார்த்தனை செய்யும் போது அவர்கள் **'இறைவா! தவ்ஸ் குலத்தாரை நேர்வழியில் செலுத்துவாயாக! அவர்களை (இஸ்லாத்திற்குக்) கொண்டு வருவாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்".** (நூல்,புகாரிஎண்:2937,முஸ்லிம்,எண்:2524)

அவ்வாறே அபூஹுுரைரா (ரலியல்லாஹுு அன்ஹுு) அவர்கள் வாயிலாக முஸ்லிமில் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் மனிதர் பற்றி வரக்கூடிய ஹதீஸில் **"அவர் தலைவிரி கோலத்துடனும் புழுதி படிந்த நிலையிலும் நீண்ட பயணம் மேற்கொள்கிறார்.அவர் தம் கரங்களை வானை நோக்கி உயர்த்தி" என் இறைவா,என் இறைவா"** என பிரார்த்திக்கிறார்.(நூல்,முஸ்லிம்,எண்:1015). இதுவும் பிரார்த்தனையின் போதான திரும்பத்திரும்ப கேட்டல் ஆகும்.

புகாரி, முஸ்லிமில் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் வாயிலாக வரக்கூடிய ஹதீஸின் பிரகாரம் மூன்று முறை பிரார்த்தனை செய்வது ஸுன்னத்து ஆகும்.அதில் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.-அல்லாஹ்விடத்தில்- துஆக் கேட்டால்,அழைத்தால் மூன்று தடவைகள் கேட்பார்கள். பின்னர் அவர்கள் **"குறைஷியர்களுக்கு எதிராக அல்லாஹ் விடத்தில் மூன்று முறை பிராத்தனை செய்தார்கள்."**(நூல், புகாரி,எண்:240,முஸ்லிம்,எண்:1794)

### 7 துஆவை இரகசியமாக மறைத்து செய்தல்.

அல்லாஹ் குர்ஆனில் "**எனவே உங்கள் இறைவனிடம் பணிவாகவும் அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள்**" (அல் அராஃப்,எண்:55). என குறிப்பிடுகிறான்.ஆகவே துஆவை அந்தரங்கமாக அமைத்து கொள்வது உளத்தூய் மைக்கு ஏதுவாக அமையும்.ஆகவே தான் அல்லாஹ் ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம் அவர்களை "**அவர் தம் இறைவனை தாழ்ந்த குரலில் பிரார்த்தித்த போது**"-(மர்யம்:3) என கூறி இவ்வாறு இவரை புகழ்துரைத்துள்ளான்.சில தஃபிஸீர் குர்ஆன் தொடர்பான விளக்க அறிஞர்களில் சிலரின் கருத்தின் படி அது உளத்தூய்மையின் காரணிக்காக என சொல்லப்படுகிறது.

### குறிப்பு:எனது பிரார்த்தனையின் போது எதை நான் கூற வேண்டும் என சிலர் கேட்கலாம்....?



இதற்கான பதில் நீர் விரும்பிய இவ்வுலக மறுவுலக தேவைகளை கேட்கலாம்.எனினும் குறுகிய வார்த்தையில் பல அர்த்தங்களை கொண்டமைந்த அல் குர்ஆன்,அல் ஹதீஸில் இடம் பெற்றுள்ளவைகளில் அதிக அக்கறையும் கவனத்தை யும் செலுத்துங்கள்.ஏனெனில் அவற்றில் இவ்வுலக மறுவுலக நன்மைகள் அனைத்தும் பொதிந்துள்ளன.இவ்வாறு வினா எழுப்பும் போது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பதில்களையும் கூற்றுக்களையும் உற்று நோக்குங்கள் அவை ஒரு முஸிலிமின் இவ்வுலக மறுவுலக அனைத்து நன்மைகளையும் கொண்டமைந்துள்ளன.அவர்கள் எமக்கு வழங்கிய சுப செய்திகள் மகத்தானவை,அவர்களின் கொடையும் அளப்பரியது,ஆகவே இவற்றையும் ஆழ் சிந்தனையுடனும் கடைப்பிடித்து பின்பற்றுங்கள்.

மாலிக பின் அல் அஷ்ஜஈ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது:நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்லம்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நான் இறைவனிடம் பிரார்த்திக்கும் போது என்ன சொல்ல வேண்டும்?" என்று கேட்டார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "**அல்லாஹும்மஃக்ஃபிர்லீ வர்ஹம்னீ வ ஆஃபினீ வர்ஸுக்னீ**"என்று சொல்வீராக" என்றார்கள்.இதைக் கூறிய போது, தமது பெருவிரலைத் தவிர மற்ற விரல்களை ஒவ்வொன்றாக மடக்கிக்கொண்டு, "**இவை உம்முடைய இம்மை மறுமை அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்ளக்கூடியவை**" என்று சொன்னார்கள்.(நூல்,முஸ்லிம், எண்:2697)

اللَّهُمَّ اغْفِرْ لِي ، وَارْحَمْنِي ، وَعَافِنِي ، وَارْزُقْنِي

பிரிதொரு அறிவிப்பில் ஒருவர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினால்,அவருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொழுகையைக் கற்றுக்

கொடுப்பார்கள். பிறகு "**அல்லாஹும்மஃக்பிர் லீ வர்ஹம்னீ வஹ்தினீ வ ஆஃபினீ வர்ஸுக்னீ**" எனும் இந்த வாக்கியங்களைச் சொல்லிப் பிரார்த்திக்கும்படி கட்டளையிடுவார்கள்.(நூல்,முஸ்லிம்,எண்:2697).

- **மற்றுமொரு குறிப்பு:** தனது சகோதரனுக்கு மறைவாக பிரார்த்தனை செய்வதும் ஸுன்னத்தாகும்.அல்லாஹ்வின் நாட்டப்படி அது ஏற்றுக் கொள்ளப்பட கூடியது. இவ்வாறு பிரார்த்திப்பவருக்கு பல சிறப்புக்களும் உள்ளன.அதில் அபீ தர்தா ரலியல்ஹு அன்ஹு வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ள ஹதீஸில்."**அதில் ஒரு முஸ்லிமான மனிதர்,தம் சகோதரருக்காக மறைவில் செய்யும் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.துஆச் செய்யும் அம்மனிதரின் சிரசின்(தலை) அருகில் ஒரு மலக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பார். அவர் தம் சகோதரருக்கு நலவானதைக் கேட்டு துஆச் செய்யும் போதெல்லாம் அம்மலக்கு ஆமீன் உமக்கும் அதுபோன்ற நலவானது உண்டு என்று கூறுவார்**". (முஸ்லிம்,எண்:2733)



- தனியாக தனித்த நிலையில் இறைவனை துதிப்பதன் தேவையின் மகத்துவம் தான் என்ன. ஆகவேஅதிகம் மறதிகள் வேலைப்பழுக்கலுள்ள வேளைகளில் உமதிறைவனை துதிப்பீராக. நினைவூட்டுவீராக.

## அல்லாஹ்வை -திக்ர் செய்தல்-ஞாபகப்படுத்தல் நாளாந்த ஸுன்னத்துக்களில் ஒன்று.

இதில் மிக உன்னதாமனது அல்லாஹ்வின் வேதமாகிய அல் குர்ஆனை ஓதுவது. எனவே தான் முன்சென்ற நல்லடியார்களின் தூக்கம் களைந்தன.இதை சதா ஓதிய வண்ணம் வணக்கத்தால் இரவில் விழித்திருந்தனர்.அல்லாஹ் குறிப்பிடும் போது. **"அவர்கள் இரவில் மிகவும் சொற்ப நேரமேயன்றித் தூங்கமாட்டார்கள். அவர்கள் விடியற் காலங்களில் (பிரார்த்த னைகளின் போது இறைவனிடம்) மன்னிப்புக் கோரிக் கொண்டிருப்பார்கள்."**(அத்தாரியாத்:17,18).இவர்களது இரவுகள் நபிகளார் வாயிலாக வந்துள்ள திக்ருகள் அல் குர்ஆன் ஓதல்கள் ஆகியவைகளால் பிண்ணிப்பிணைந்து காணப்பட்டன.இவ்வாறு இரவுகளை தானும் தன் குடும்பதினராலும் உயிரூட்டும் பாக்கியம் கிட்டியவர்களின் பாக்கியம் தான் என்ன.. எமது பல இராப் பொழுதுகளும் ஸஹர் நேரங்களும் கவனக்குறைவு,அலட்சியம் ஆகிவற்றால் வீணாக கழிகின்றனவே இதன் கைசேதம் தான் அளப்பரியது....எம்மில் அல்லாஹ் அருள்புரிந்த ஒரு சிலரே இதனை விட்டும் ஈடேற்றம் பெற்றுள்ளனர்.

அப்துர்ரஹ்மான் அவர்கள் கூறியதை அதாபின் அஸ்ஸாஇப் அவர்கள் வாயிலாக ஹம்மாதிப்னு ஸைத் அவர்கள் கூறுகி றார்கள்.நாம் அல் குர்ஆனிலிருந்து பத்து வசனங்களை கற்று அவற்றை புரிந்து கொள்ளாத வரை மற்றைய பத்து வசனங் களை தாணடி விட மாட்டோம் எனகூறிய ஒரு கூட்டத்திடமிருந்து நாம் அல் குர்ஆனை பெற்றுக் கொண்டோம். எனினும் எமக்கு பின்னராக சிலர் அல் குர்ஆனின் வாரிசுகளாகளாவர்.அவர்கள் அதை தண்ணீர் அருந்துவது போல் அறுந்துவர்-ஓதுவர்-அது அவர்களின் கழுத்துக்களை கூட சென்றடைய மாட்டாது.(பார்க்க- ஸியர் அஃலா முந்நு பலாஃ:4/269)

## உள்ளங்களுக்கான உயிரோட்டம் அல்லாஹ்வை ஞாபகப் படுத்தல் ஆகும்.



குறிப்பாக அதிக வேலைப்பழுக்கள்,அதிக ஈடுபாடுகள் உள்ள இக்காலத்தில் அதிகமானோரின் முறைப்பாடு உள்ளத்தில் கரையும்,சிதைவும்,மறதியும் தான் என்பதுவே.எனினும் உள்ளத்தின் வாழ்வும் அதன் உயிர் நாடியும் அல்லாஹ்வை ஞாபகப் படுத்தல் ஆகும்.அபூ மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரை தொட்டும் அறிவிக்கும் ஹதீஸ் புகாரியில் இடம் பெற்றுள்ளது அதில்.இறைத் தூதர் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் **"தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றுகிறவரின் நிலை உயிருள்ளவரின் நிலைக்கும்,தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாதவரின் நிலை உயிரற்றவரின் நிலைக்கும் ஒத்திருக் கிறது.முஸ்லிமில் வரக்கூடிய பிரிதொரு அறிவிப்பில் "தம் இறைவனை நினைவு**

**கூர்ந்து போற்றுகிற வீட்டினது நிலை உயிருள்ளவரின் நிலைக்கும்,மேலும் தம் இறைவனை நினைவு கூர்ந்து போற்றாத வீட்டின் நிலை உயிரற்றவரின் நிலைக்கும் ஒத்திருக்கிறது".** (நூல்,முஸ்லிம்,எண்:6407,முஸ்லிம்,எண்:779) என அபூ மூஸா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள்.

## அல்லாஹ் அதிக இடங்களில் அவனை ஞாபகப் படுத்தும் படி தூண்டியுள்ளான்.அவ்வாறானவற்றுள் சில.

1. அல்லாஹ் அவனது அடியார்களுக்கு அவனை அதிகம் நிணைவு கூறும் படி தூண்டியுள்ளான்.அல்லாஹ் குறிப்பிடும் போது. "**ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமான திக்ரைக் கொண்டு திக்ரு (தியானம்) செய்யுங்கள். இன்னும்,காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்.**" (அல் அஹ்ஸாப்:41,42)

2. அல்லாஹ்வை ஞாபகப்படுத்தும் ஆண்கள்,பெண்களுக்கு பாவமன்னிப்பையும் உயர்வான கூலியையும் கொண்டு வாக்களித்துள்ளான்.அல்லாஹ் குறிப்பிடும் போது. "**அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கும் அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்**".(அல் அஹ்ஸாப்: 35).

3. அல்லாஹ் நயவஞ்சகர்களின் பிண்புகளை விட்டும் எமக்கு எச்சரிக்கை செய்துள்ளான்.அவர்கள் அல்லாஹ்வை ஞாபகப் படுத்துவார்கள் அவ்வாறு அல்லாஹ்வை ஞாபகப் படுத்தும் போது அதன் அளவை சற்று ஆளசிந்தித்துப்பாருங்கள் அல்லாஹ் குறிப்பிடும் போது. "**நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர்;ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான்; தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்); இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை**".(அந்நிஸா:142)

4. அல்லாஹ்வை ஞாபகப்படுத்தாது அவனை மறந்து இவ்வுலக சொத்துக்கள்,பிள்ளைக்குட்டிகளில் மூழ்கி விடுவதை விட்டும் அல்லாஹ் எம்மை எச்சரித்துள்ளான்.அல்லாஹ் குறிப்பிடும் போது. "**ஈமான் கொண்டவர்களே! உங்கள் செல்வமும், உங்களுடைய மக்களும், அல்லாஹ்வின் நினைப்பை விட்டும் உங்களைப் பராமுகமாக்கிவிட வேண்டாம் - எவர் இவ்வாறு செய்கிறாரோ நிச்சயமாக அவர்கள் தாம் நஷ்டமடைந்தவர்கள்.**" (அத்தியாயம்:9)

5 அல்லாஹ் கூறிய இந்த சிறப்புக்களை ஒன்றாய் இணைத்து சிநிதியுங்கள் அல்லாஹ் குறிப்பிடும் போது..."(**என்னை நினைவு கூறுங்கள் நான் உங்களை நினைவு கூறுவேன்) உயர்ந்தோன் அல்லாஹ் ஹதீஸுல் குத்ஸியில் கூறுகின்றான்: என் அடியான் என்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூருவேன்.அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவு கூர்ந்தால் அவர்களைவிடச் சிறந்த ஓர் அவையினரிடம் அவனை நான் நினைவு கூருவேன்."** (புகாரி,எண்:7405,முஸ்லிம்,எண்:2675). இதை அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

## நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னாவில் வழிகாட்டலில் அதிகமான திக்ருகள் வந்துள்ளன. அவற்றுள் சில:

1 لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:- **லாஇலாஹ இல்லல்லாஹ், வஹ்தஹு லாஷரீக்க லஹு, லஹுல், முல்க்கு வ லஹுல், ஹம்து, வ ஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர் என்று ஒரு நாளில் நூறு முறை சொல்கிறவருக்கு,அது பத்து அடிமை களை விடுதலை செய்வதற்குச் சமமா(க நற்பலன் பெற்றுக் கொடுப்பதா)கும்.மேலும்,அவருக்கு நூறு நன்மைகள் எழுதப் படும்.அவரின் கணக்கிலிருந்து (அவர் புரிந்த) நூறு தீமைகள் அழிக்கப்படும்.மேலும்,அவரின் அந்த நாளில் மாலை நேரம் வரும் வரை ஷைத்தானிடமிருந்து (பாதுகாக்கும்) அரணாக அது அவருக்கிருக்கும்.மேலும்,அவர் புரிந்த சிறந்த நற்செயலை எவரும் செய்ய முடியாது;ஒருவர் இதை விட அதிகமாக (முறை இதை ஓதினால் அல்லது மிக முக்கிய மான) ஒரு நற்செயல் புரிந்தாலே தவிர.மேலும் எவர் ஒருவர் ஒரு நாளில் ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என நூறு முறை சொல்வாரோ அவரின் தவறுகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அவை கடலின் நுரை போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே!.** இதை அபூ ஹுரைரா(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.(புகாரி:3293, முஸிலம்:2691)

2 لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

அபூ அய்யூப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படும் ஹதீஸில் நபிகளார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "**எவர் லாஇலாஹ இல்லல்லாஹ்,வஹ்தஹு லாஷரீக்க லஹு, லஹுல், முல்க்கு வ லஹுல், ஹம்து, வ ஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்**" என பத்து தடவைகள் கூறிகின்றாரோ அவர் 'இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சந்ததி களில் நான்கு அடிமைகளை விடுதலை செய்தவரைப் போன் றவராவார்'(நூல்,புகாரி,எண்:6404,முஸ்லிம், எண்:2693).

3 ஸஅத் பின் அபீவக்காஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது:நாங்கள் (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அருகில் இருந்தோம்.அப்போது அவர்கள், "**உங்களில் ஒருவரால் ஒவ்வொரு நாளும் ஆயிரம் நன்மைகளைச் சம்பாதிக்க முடியாதா?**" என்று கேட்டார்கள்.அப்போது அங்கு அமர்ந்திருந்தவர்களில் ஒருவர், "**எங்களில் ஒருவர் (ஒவ்வொரு நாளும்) ஆயிரம் நன்மைகளை எவ்வாறு சம்பாதிக்க முடியும்?**" என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "**அவர் (ஒவ்வொரு நாளும்) நூறு முறை ("சுப்ஹானல்லாஹ்" என்று கூறித்) துதிக்க, அவருக்கு ஆயிரம் நன்மைகள் எழுதப்படுகின்றன. அல்லது அவர் செய்த ஆயிரம் தவறுகள் அவரைவிட்டுத் துடைக்கப் படுகின்றன**" என்று சொன்னார்கள்.(நூல்,முஸ்லிம், எண்:2698)

4 سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் **கூறினார்கள்** "**சுப்ஹானல்லாஹ் வபி ஹம்திஹி**" (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்) என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ அவரின் தவறுகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன.அவை கடலின் நுரை போன்ற அளவு (மிகுதியாக) இருந்தாலும் சரியே!(நூல்,புகாரி:6405), முஸ்லிமில் வரக்கூடிய மற்றுமொரு "**அறிவிப்பில் யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை "சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி" (அல்லாஹ் தூயவன் எனப் போற்றிப் புகழ்கிறேன்) என்று சொல்கிறாரோ அவர் கொண்டு வந்த (நல்லறத்) தைவிடச் சிறந்ததை வேறெவரும் மறுமை நாளில் கொண்டு வருவதில்லை;அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர**" இதை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்,எண்:2692)

لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

இவ்வாறு திக்ருகள்-அல்லாஹ்வை நினைவு படுத்தலின் மகிமையும்,சிறப்பும் தொடர்ப்பாக ஏறாலமான ஹதீஸ்கள் வந்துள்ளன.இவ்வாறான சிறப்புக்கள்,மகிமைகள் தொடர்ப்பாக வந்துள்ள ஹதீஸ்களில் மிகச்சரியானைவளில் முன்னர் குறிப்ப டப்பட்டவைகளும் உள்ளடங்கும்.இவற்றை தவிர இன்னும் அதிகமான ஹதீஸ்களும் வந்துள்ளன.மேலும் அபீ மூஸா அல் அஷ்அரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்.அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு கூறினார்கள். **'சொர்க்கத்தின் கருவூலமான ஒரு வார்த்தையை உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா?' என்று கேட்டார்கள்.நான்,'ஆம் (அறிவித்துத் தாருங்கள்)' என்று கூறினேன்.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்,'(அந்த வார்த்தை:) "லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லாபில்லாஹ் (அல்லாஹ்வின் உதவியன்றி பாவங்களி லிருந்து விலகிச் செல்லவோ, நல்லறங்கள் புரிய வலிமை பெறவோ மனிதனால் இயலாது)' என்றார்கள்.** (நூல்,புகாரி,எண்:4202).

سُبْحَانَ اللهِ , وَالْحَمْدُ للهِ , وَلاَ إِلَهَ إِلاَّ اللهُ , وَاللهُ أَكْبَرُ

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**சுப்ஹானல்லாஹி, வல்ஹம்து லில்லாஹி வ லாயிலாஹ இல்லல்லாஹு, வல்லாஹு அக்பர்**" என்று நான் கூறுவதானது,சூரியன் எதன் மீது உதிக்கிறதோ அ(ந்த உலகத்)தைவிட எனக்கு மிகவும் பிரியமானதாகும். (நூல்,முஸ்லிம்,எண்:2695)இதை அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**மேலும் இஸ்திக்பார் அஸ்தக்பிருல்லாஹ் -பாவமன்னிப்பு வேண்டுதலும்- திக்ரின் வகைகளில் உள்ளவையாகும்.** அஃகர்ரு அல்முஸனீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**எனது உள்ளத்தின் மீதும் திரையிடப்படுகிறது.நான் ஒவ்வொரு நாளும் நூறு முறை அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்**". (நூல்,முஸ்லிம்,எண்:2702)

இதுவே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செயலாகவும் காணப்பட்டது.எனவே தான் அவர்கள் பாவமன்னிப்பு,இஸ்திக்பார் மீது இவ்வாறு கூறி ஆர்வ மூட்டியுள்ளார்கள்.ஸஹீஹ் முஸ்லிமில் அஃகர்ரு அல்முஸனீ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வாயிலாக வரக்கூடிய ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "**மக்களே! அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருங்கள்.ஏனெனில்,நான் ஒவ்வொரு நாளும் அவனிடம் நூறு முறை பாவமன்னிப்புக் கோருகிறேன்.**" (நூல்,முஸ்லிம்,எண்:2702)

மேலும் புகாரியில் அபூ ஹுரைரா(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள். '**அல்லாஹ்வின் மீதாணையாக! நான் ஒரு நாளில் எழுபது முறைக்கு மேல் 'அஸ்தஃக் ஃபிருல்லாஹ வ அதூபு இலைஹி '(நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கமே திரும்புகிறேன்.) என்று கூறுகிறேன் என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன்.**(நூல்,முஸ்லிம், எண்:6307).எனவே ஒரு அடியான் பாவமன்னிப்பு கோருவதை விட்டும் பராமுகமாக இருக்கவே கூடாது.

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ, سُبْحَانَ اللهِ الْعَظِيم

திக்ரின் ஸுன்னத்தையும் -இவ்வாறே அனைத்து நாளாந்த ஸுன்னத்துக்களையும்- அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாயிலாக புகாரி,முஸ்லிமில் வரக்கூடிய ஹதீஸைக் கொண்டு முடிக்கின்றேன். இதுவே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ்.(இறைவனைத் துதிக்கும்) இரண்டு வாக்கியங்கள் அளவற்ற அருளாளனின் பிரியத்திற்குரியவை;மேலும் நாவுக்கு எளிதானவை;நன்மை தீமை நிறுக்கப்படும்)தராசில் கனமானவையாகும்.(அவை:தான்) "**சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி**" (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதி செய்கிறேன்),"**சுப்ஹானல்லாஹில் அழீம்**" (கண்ணிய மிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன்).(நூல்,புகாரி, எண்:6406,முஸ்லிம்,எண்:2694)

அல்லாஹ்வின் புகழாலும்,அருளாலும் அனைத்து நல்லறங்களும் முற்றுப்பெறுகின்றன.

Tamil

முன்னுரைகள்

ஃபஜ்ருக்கு முன்னரான

ஃபஜ்ர் நேரத்தின் ஸுன்னத்துக்கள்

லுஹா நேரத்தின் ஸுன்னத்துக்கள்

லுஹர் அஸர் நேரத்தின் ஸுன்னத்துக்கள்

மக்ரிப் நேரத்தின் ஸுன்னத்துக்கள்

இஷா நேரத்தின் ஸுன்னத்துக்கள்

உணவின் ஸுன்னத்துக்கள்

முகமன் கூறல்,ஒருவரை ஒருவர் சந்தித்தல்,சபை ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள்

ஆடை,அலங்காரத் தின் போதான ஸுன்னத்துக்கள்.

தும்மல்,கொட்டாவி ஆகியவற்றின் போதான ஸுன்னத்துக்கள்

ஏனைய ஸுன்னத்துக்கள்

# நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நாளாந்த ஸுன்னத்துக்களும் திக்ர்களும்

اللغة التاميلية
TAMIL LANGUAGE

جميع لغات المشروع
ALL LANGUAGES